தேவியின்
கண்மணி

ஆர்.மகேஸ்வரி

ரூ.15



# உன் உயிரில் கலந்து...



அழகோ அழகு

# சீரான சருமம்

மாசு மருவில்லாத சருமத்தையும், பொலிவான மேனி நிறத்தையும் விரும்பாத பெண்களே இல்லை எனலாம். சில நேரம் பெண்களின் மேனியில் வெள்ளை வண்ண திட்டுகள் ஏற்பட்டு அவர்களின் மேனி ஒரே சீரான நிறத்தை இழந்து பொலிவின்றி காணப்படும். இந்த சருமநிற இழப்பு ஏற்பட காரணம், சருமத்திற்கு நிறம் கொடுக்கும் மெலோனின் குறைபாடே ஆகும். இந்த பிரச்சினையில் இருந்து விடுபட சில இயற்கை வழிமுறைகள் உள்ளன. அவற்றை பின்பற்றி சீரான சருமத்தை பெற்று அழகுடன் மிளிரலாமே.

**கேரட்:** கேரட்டை நன்கு அரைத்து பேஸ்ட் போலாக்கி, அதனுடன் சிறிது முல்தானி மெட்டி சேர்த்து பசை போலாக்கி கலந்து கொள்ளுங்கள். பின் இதனை முகத்தில் தடவி, இருபது நிமிடங்கள் வைத்திருங்கள். இறுதியில் நல்ல தண்ணீரால் அலசுங்கள்.



**பால் பவுடர்:** 4 தேக்கரண்டி பால் பவுடரை எடுத்துக் கொண்டு, அதனுடன் சிறிது ஹைட்ரஜன் பெராக்ஸைடு விட்டு பசையாக்குங்கள். அத்துடன் சிறிது கிளிசரினும் சேர்த்துக் கொள்ளுங்கள். இதனை நிறமிழந்த பகுதிகளில் பூசிக்கொள்ளுங்கள். 15-20 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரால் கழுவுங்கள். ஹைட்ரஜன் பெராக்ஸைடும், கிளிசரினும் கடைகளில் எளிதாக கிடைக்கும் பொருட்கள்தான்.



**உருளைக்கிழங்கு:**
ஒரு உருளைக்கிழங்கின் தோலை உரித்து, அதன் மீது சிறிது தண்ணீர் தெளித்து, அதனை நிறமிழந்த பகுதிகளின் மீது அழுத்தித்தேயுங்கள். இதனால் சருமத்தில் உள்ள நிறமிழந்த பகுதிகள் பொலிவு பெறும்.



**துளசி:** துளசி இலைகளையும், எலுமிச்சை சாற்றினையும் கலந்து, பாதிக்கப்பட்ட சருமத்தின் மீது தடவி வந்தால் பலன் கிட்டும்.





**ஓட்ஸ்:** சிறிது ஓட்ஸை எடுத்துக் கொண்டு, நன்கு தூளாக்கி கொள்ளுங்கள். அதனுடன் சிறிது தயிர், எலுமிச்சைச் சாறு மற்றும் தக்காளிச் சாறு சேர்த்து, வாரமொரு முறை பாதிக்கப்பட்ட சருமத்தின் மீது தடவி வாருங்கள். வெண்புள்ளிகள் மறைவதைக் கண்கூடாகக் காணலாம்.



**ஆலிவ் ஆயில்:** ஆலிவ் எண்ணெயில் சிறிது சர்க்கரை சேர்த்து, பாதிக்கப்பட்ட சருமத்தின் மீது தேயுங்கள்.சர்க்கரை கரையும் வரை தேயுங்கள். இந்த கலவையை கைகள், கால்கள், கழுத்து என்று பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளிலும் தேய்க்கலாம்.



**எலுமிச்சை சாறு:** எலுமிச்சை சாறு, தேன், பாதாம் எண்ணெய் ஆகியவற்றினை தலா ஒரு தேக்கரண்டி எடுத்து கலந்து கொள்ளுங்கள். இக்கலவையைக் கொண்டு 15 நிமிடங்கள் முகத்தினை மசாஜ் செய்யுங்கள். இதனால் பொலிவான முகம் உங்களுடையதாகும்.



**பப்பாளி:** பப்பாளிக்காயை பச்சைப் பாலுடன் கலந்து, முகத்தில் 10 நிமிடங்கள் மசாஜ் செய்து வாருங்கள். முகத்தில் உள்ள வெண்புள்ளி மற்றும் கரும்புள்ளிகளை இது நீக்கும்.



# உன் உயிரில் கலந்து...

மரங்கள், செடிகொடிகள் தங்களது பூக்களைக் கொண்டு பூமியை அர்ச்சனைச் செய்தும்... பனி தனது இதமான குளிரைக் கொண்டு தாலாட்டியும்... பறவைகள் தங்களது அழகிய குரலில் பூபாளம் பாடியும்... விடியற் பொழுதை அழகாய் வரவேற்றன!

சென்னையில் விடியற் பொழுது மிக மிக ரம்யமாய் இருந்தது!

அழகே உருவான நித்திலா படுக்கையை விட்டு எழுந்தமர்ந்தாள்!

எதிர்புற சுவரில் மாட்டியிருந்த முருகன் படத்தைப் பார்த்து கையெடுத்து வணங்கினாள்.

விழிமூடி கந்த சஷ்டி கவசத்தை பாடி முடித்தாள்!

குளிர்ந்த நீரில் தலையோடு குளித்து... பெரிய டவலால் முடியை இறுக்கி முடிச்சிட்டு கொண்டாக்கிக் கொண்டு வாசலுக்கு சென்றாள்.

வாசல் தெளித்து... அழகிய ரங்கோலி கோலமிட்டு.. வர்ணப் பொடிகளைத் தூவினாள்! கோலத்தின் அழகில் மனம் லயித்தவள் கன்னத்தில் கை வைத்து இமைக்காது கொஞ்ச நேரம் ரசித்துவிட்டு உள்ளே சென்றாள்!

பிரிட்ஜில் நெருக்க கட்டிய மல்லிகை சரம் இருந்தது. அதை எடுத்துக் கொண்டு சாமியறைக்கு சென்றாள்! சிறு சிறு துண்டுகளாக்கி அங்கு இருந்த தெய்வங்களின் படத்திற்கு போட்டுவிட்டு... ஒரு நீளமான சரத்தை எடுத்து... பெரிதாய் லாமினேசன் செய்த புகைப்படத்தில்.. அழகாய் சிரித்துக் கொண்டிருந்த மாதவிக்கு சூடினாள்!

மாதவி அவளின் அன்புத்தாய்!

கொள்ளையழகு மிளிர... கள்ளம்கபடமற்று புன்னகைத்துக் கொண்டிருந்த மாதவியின் படத்திற்கு பூமாலையைப் போடும் போது... கண்கள் குளமாகிப் போனது!

தாய் மாதவி இறந்து மூன்று வருடமாகிறது!

மாதவி கேரளத்துப் பெண்!

ஆர்.மகேஸ்வரி

மாதவிக்கு அண்ணன், தங்கைகள் என்று பெரும் கூட்டமே கேரளாவில் உள்ளது!

பாழாய்ப் போன காதல்... எல்லோரையும் பிரிந்து தமிழ்நாட்டிற்கு வரவழைத்துவிட்டது!

மாதவி கேரளாவின் புகழ் பெற்ற சுற்றுலா ஏஜென்சியான 'ஸ்ரீமுருகன் டிராவல்' ஏஜென்சியில் பணிபுரிந்தாள்.

அப்போது தமிழ்நாட்டிலிருந்து கேரளாவை சுற்றிப் பார்க்கப்போன சிவக்குமார் என்ற இளைஞன் அவர்கள் டிராவல் ஏஜென்சியில் காரை வாடகைக்கு எடுத்தான்.

மாதவியை அந்த ஏஜென்ஸி சிவக்குமாருக்கு வழிகாட்டியாக அனுப்பியது!

நான்கு நாட்கள் கேரளாவின் அழகை அழகி மாதவியோடு சுற்றிப் பார்த்தான். இளமையின் விளிம்பில் இருந்த சிவக்குமாருக்கும் மாதவிக்கும் மாநிலம்...இனம்...மொழி...குலம்...கோத்திரம்...மதம்...எல்லாவற்றையும் தாண்டி காதல் மலர்ந்து விட்டது!

'தமிழ்நாடு சென்று அனுமதி வாங்கி வருகிறேன்' என்று சிவக்குமார் மாதவியைப் பிரிந்து வந்தான்! மீண்டும் கேரளத்துக்கு சென்றவன் மனம் சோர்ந்து, வாடி வதங்கி மாதவியின் முன்பு நின்றான்.

''கேரளத்து பெண்ணா...? நம் குலமென்ன...? மொழி என்ன...? இனமென்ன...? எவ்வளவு பெருமையான பரம்பரையில் இருந்து வந்திருக்கிறோம்! அதையெல்லாம் பாழாக்கவே இப்படியொரு காரியத்தைச் செய்து வந்திருக்கிறாயா, சிவா...? ஏன் உன் புத்தி இவ்வாறு கோணலானது...? எங்கள் உயிரே போனாலும் அனுமதிக்கமாட்டோம்! உன்னை கேரளாவிற்கு சுற்றிப்பார்க்க அனுப்பியதற்கு நீ தரும் தண்டனையா இது...? என்று கூறி என் பெற்றோர்கள் நம் காதலுக்கு சம்மதிக்க வில்லை! என்ன செய்வது மாதவி...?'' என்று சிவக்குமார் கேட்டான்.

''என் வீட்டிலும் அண்ணாக்களும், அக்காக்களும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர், சிவா! யாருமே நம் காதலை விரும்பவில்லை! ஏற்றுக் கொள்ளவும் தயாரில்லை! உன்னை வெட்டி பொலி போட்டுவிடுவேன் என்று ஒரு அண்ணாவும்... விஷம் வைத்து கொன்று விடுவேன்னு இன்னொரு அண்ணாவும்... ரெண்டு அக்காமார்களும் இவள் காலை ஒடிச்சி ஊனமாக்கினால்தான் சரிப்படுவாள் என்று சொல்கிறார்கள்! என்ன செய்வது சிவா...?'' என்று மாதவி அழுதாள்!

''இரண்டு குடும்பமும் நாம் எவ்வளவு தான் கெஞ்சினாலும் நம்மை சேர்த்து வைக்க மாட்டாங்க, மாதவி!'' சிவக்குமார் சோகமாய் சொன்னான்!

''நீங்க இல்லாமல் என்னால் உயிர்வாழவே முடியாது, சிவா!''

''நீயில்லாமல் என்னாலும் உயிர் வாழமுடியாது, மாதவி! உன்னைப்

பிரிந்தால் அந்த நொடிச் செத்துப் போவேன், மாதவி!''

''என்ன இது அபசகுனமா பேசறீங்க...! என்னால் தாங்க முடிய வில்லை!'' என்றவள் சிவக்குமாரின் மடிமீது விழுந்து கதறினாள்!

சிவக்குமாருக்கு தாங்கமுடியாமல் மாதவியை இழுத்து இறுக்கிக் கொண்டான்! அவன் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது!

''கொஞ்ச நேரத்தில் இருவரும் வேதனையைக் கட்டுப்படுத்திக் கொண்டு சமநிலைக்கு வந்தனர்.

''நாம் இருவரும் சேர என்ன வழி, சிவா!'' மாதவிதான் கேட்டாள்!

''என் வீடு, அங்கு வாழற மக்கள், சொத்து, சுகம், அந்தஸ்து என எதுவும் வேண்டாம்ன்னு தூக்கி போட்டுவிட்டு உன்னைப் பதிவு திருமணம் செய்து கொள்ள எனக்கு விருப்பம்! உனக்கு விருப்பமா மாதவி...?''

''எனக்கும் என் காதலும்... நீங்களும் தான் பெரிசு! தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள் என்ற உறவெல்லாம் வெறும் தூசு, சிவா! உங்களை மணந்து கொள்ள விருப்பம்! என்னை கடைசிவரை கைவி டமாட்டீங்கதானே, சிவா?''

''என்னை நீ நம்புகிறாய்தானே...?''

''ம்ம்...''

''என்னில் கலந்த உன்னை எப்படி கைவிட முடியும்? நீ என் உயி ரல்லவா, மாதவி?''

இப்படி சொன்ன சிவக்குமாரை தாவியணைத்துக் கொண்டாள்! அன்று இரவே குடும்ப உறவுகளைத்துறந்து சிவக்குமாருடன் தமிழ் நாட்டிற்கு தப்பி வந்தவள்தான் நித்திலாவின் தாய் மாதவி!

சிவகுமார் தென்மாவட்டம் ஒன்றில் பேர் சொல்லும்படியான நல்ல வசதியான குடும்பத்தில் பிறந்தவன்! அவனுக்கு அந்த வயதில் காத லியும், காதலும் பெரிதாய் தெரிய...இஷ்டப்பட்டவளையே மணந்து சென்னையில் குடியேறினான்! அவர்களின் மிதமிஞ்சிய காதல் வாழ்க் கையில் நித்திலா மலர்ந்தாள்!

பின், நான்காண்டுகள் கழித்து தன்யஸ்ரீ பிறந்தாள்!

இன்பமாய் சென்ற அவர்களின் காதல் வாழ்க்கையில்.. ஒருநாள்...

''நான் ஊரிற்கு சென்று... அம்மா, அப்பா வைப் பார்த்துவிட்டு வரட் டுமா, மாதவி...?'' என்று ஏக்கத்துடன் கேட்டான்.

''ஓ... போய் பார்த்துவிட்டு வாங்களேன்!'' என்று மாதவி அனுமதி யளித்ததும்...

சிவக்குமார் சொந்த ஊரிற்கு சென்றான், தாய், தகப்பன், உற்றார், உறவினர்களைக் கண்டு கதறினான்!

அவனை ஏற்றுக்கொள்ள தயாராக இருந்த கல்நெஞ்சர்கள்... மாத வியையும், அவள் பெற்ற இரண்டு குழந்தைகளையும் ஏற்றுக்கொள்ள தயாராக இல்லை!

சிவக்குமார் எவ்வளவோ கெஞ்சிப்பார்த்தான்!

ம்கூம்! மனமிரங்கவில்லை!

சிவக்குமார் ஏமாற்றத்துடனேயே ஊர்திரும்பினான்! மாதவியிடம் தன்குடும்பம் அவர்களை சம்மதிக்க மறுப்பதை கூற... மாதவியும் மனம் வருந்தினாள்! நாட்கள் நகர்ந்தது! குழந்தைகளும் அழகாய் வளர்ந்தனர்! சிவக்குமாருக்கு இந்த மிடில்கிளாஸ் வாழ்க்கை கஷ்டத் தைக் கொடுத்தது! வறுமை அவனை வாட்டி எடுக்க... மனதிற்குள் பெரும் பட்டிமன்றமே நடந்தது!

''ராஜாவாய் வாழ வேண்டியவன் இப்படி மாச சம்பளத்திற்கு இன் னொருவனிடம் கைகட்டி வேலை செய்கிறோமே!''

''நம் வீட்டிலும்... பண்ணையிலும்... தொழிற்சாலையிலும் ஆயிரத் திற்கு மேற்பட்டோர் வேலைப்பார்க்க... சம்பளம் கொடுக்கும் முதலா ளியாய் இருந்தவன்... இங்கே சென்னையில் மாதசம்பளத்திற்கு கைக ட்டி, வாய்ப்பொத்தி வேலை செய்கிறோமே! அப்படி வேலை செய்யும் வருமானத்தில் எவ்வளவு சிக்கனமாய் இருந்தும் மாதக்கடைசியில் எவ்வளவு இழுபறி! ச்சே! என்ன பொழைப்பு இது?''

''எல்லாம் இந்தப் பாழாய்ப் போன காதலால் தான் இவ்வளவு கஷ்டமும்!''

''கேரளாவைச் சுற்றிப்பார்க்க எதற்கு சென்றேன்...?''

''அங்கே அழகியான மாதவியை ஏன் சந்தித்தேன்...?''

''எதற்காக மாதவியிடம் என் மனதைப் பறிக் கொடுத்தேன்...?''

''இதெல்லாம் நடக்காமல் இருந்திருந்தால்... தாய், தகப்பன் கை காட்டிய பெண்ணை மணந்து... இளவரசன் கணக்காய் பட்டு வேட்டி யிலும், சட்டையிலும் வலம் வந்து... பஞ்சனையில் படுத்துறங்கி... நம் பரம்பரைச் சொத்துக்களை கட்டியாண்டு இருக்கலாமே...!''

சிவக்குமாருக்கு மாதவியுடனான சாதாரண வாழ்க்கை போரடித் தது!

மாதவி வேறு, இரண்டையும் பெண் குழந்தைகளாய் பெற்று வைத் திருப்பதைக் கண்டு எரிச்சல் எரிச்சலாய் வந்தது! இவர்களை வளர்த்து, ஆளாக்கி, உழைத்து, சேர்த்து...எப்படி ஒருவன் கையில் பிடித்துக் கொடுப்பது என்று மலைப்பும் வந்தது!

ஊருக்கு சென்று வந்தவன் ஒட்டாமலேயே ஒதுங்கி நின்று... ஒரு நாள் இரவோடு இரவாய்... லட்டர் எழுதி வைத்துவிட்டு ஓடிப்போ னான்!

அன்புள்ள மாதவிக்கு,

எனக்கு இந்த வாழ்க்கை பிடிக்கவில்லை! காதலால், நான் என் குடும்பத்தைப்பிரிந்து... இன்னொருவன் முன்பு கை கட்டி வேலைப் பார்த்து... அவன் கொடுத்த சம்பளத்தில் வாயிற்கும், வயிற்றிற்கும் பத்தாமல் வாழ்ந்த... பிச்சைக்கார வாழ்க்கை வாழ்ந்து சீரழிந்தது

போதும்! ராஜாவாய் வாழப் போகிறேன்! என்னைத் தேடி நீ வந்தால்... பின் என்னைப் பிணமாய்தான் பார்ப்பாய்!

உனது வாழ்க்கையை கேள்வி குறியாக்கியதற்கு என்னை மன்னிக்க வேண்டுகிறேன், மாதவி! நீயும் இங்கிருக்காமல் கேரளாவிற்கு சென்று உனது குடும்பத்தாரோடு சேர்ந்துகொள்!

இப்படிக்கு
சிவக்குமார்.

விடியற்காலையில் அருகில் படுத்திருந்த கணவனைக் காணாமல் பதறினாள்! கடிதம் கண்டு... அதில் இருந்த செய்தி அறிந்து தலையில டித்துக் கொண்டு கதறினாள்..! விம்மி வெடித்தாள்...! அவள் கதற லுக்கு எல்லையே இல்லாமல் போனது...!

அக்கம் பக்கத்து மனிதர்கள் எவ்வளவு ஆறுதல் சொல்லியும் மாதவி தேறவில்லை!

படுத்த படுக்கையானாள், மாதவி!

குழந்தைகள் பசியால் அழுதனர்!

அக்கம் பக்கம் பரிதாபப்பட்டு குழந்தைகள் பசியைப் போக்கினர்!

வாழ்ந்து சலித்த சில முதியோர்களின் அறிவுரையால் உடம்பு தேறி எழுந்தாள், மாதவி!

தெரியாத ஊரில் எப்படி தனியே இரு பெண் குழந்தைகளை வைத் துக் கொண்டு பிழைப்பது என்ற பயம் வந்து கேரளாவிற்கு குழந்தை யோடு சென்றாள்!

இளைத்து, துரும்பாகி பார்க்கவே சகிக்காமல் இரண்டு பெண் குழந் தைகளைக் கையில் பிடித்துக் கொண்டு வந்து நின்ற மாதவியைக் கண் டதும் அனைவரும் பொங்கி எழுந்தனர்.

''கேடு கெட்டவளே... இங்கே எதற்கு வந்தாய்...? மீதி இருக்கும் கொஞ்ச நஞ்ச மானத்தை வாங்கவா...?''

''நீ என்றைக்கு அந்த தமிழ்நாட்டுப் பயலோடு சென்றாயோ... அன் றைக்கே நீ இறந்து விட்டதாய் தலையில் தண்ணீர் ஊற்றி தலை முழுகி யாச்சுடி!''

''வருஷா வருஷம் என் மகள் மாதவி செத்து போயாச்சுன்னு திவசம் கொடுத்துட்டு வருகிறோம், அறிவு கெட்டவளே!''

''எவ்வளவு சொன்னோம்...? பெரிய பணக்கார பயலாய் இருக் கிறான்! பணத்தில் புரளும் சிலருக்கு பண்பாடு, ஒழுக்கம் என்று எதுவுமே இருக்காது! அந்தப் பயல் வேண்டாம் என்றோமே... கேட் டாயா...? எங்களைக் கஷ்டப்படுத்திவிட்டு காதல்தான் பெரிது என்று போன உனக்கு இந்த தண்டனை தேவை தான்!''

''காதல் கொடுத்த இந்த இரண்டு பரிசையும் வைத்துக் கொண்டு எங் காவது போய் வாழு... இல்லே செத்து தொலைடி!''

''இடத்தை காலிப் பண்ணு! நீ நின்ன இடத்தை நீர்விட்டு கழு

வணும்!''

அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, அக்கா என்ற அத்தனை உறவுக் கூட்டங்களும் அவளை அவமானப்படுத்தினர்!

மாதவி நத்தையாய் சுருண்டாள்! கண்களில் பெரிய கங்கையாறே உற்பத்தியாகி கொட்டியது!

மாதவி கதறியழுதாள்! அவள் விழுந்து, புரண்டு அழ... அழ.. அவர்களின் வாயிலிருந்து ஈட்டியாய் புறப்பட்ட வார்த்தைகள் அதிகமாகி அவள் மனதை ஆழமாய் குத்தி கிழித்து ரணப்படுத்தியது!

மாதவியோடு சேர்ந்து குழந்தைகளும் கதறியழுதனர் கொஞ்ச நேரத்தில் சுய உணர்வு பெற்ற மாதவி.. குழந்தைகளின் கதறலைப் பார்த்து தாங்க முடியாமல் தாவி அணைத்துக் கொண்டாள்!

பெற்றோர்களும், சகோதர, சகோதரிகளும் வியக்கும் வண்ணம் என் குழந்தைகளை வளர்த்து ஆளாக்க வேண்டும் என்று மனதிற்குள் உறுதி பூண்டாள்!

தன்மானமும், சுய மரியாதையும் அவளைத் தூக்கி நிறுத்தி சக்தி கொடுக்க... அவர்களையெல்லாம் சுட்டெரிக்கும் பார்வையொடு அலட்சியப்படுத்தி அங்கிருந்து கிளம்பினாள்!

இரு குழந்தைகளுடன் சென்னை திரும்பி தாம்பரம் புறநகர் பகுதிக்கு வந்தாள்! குறைந்த வாடகையில் ஒரு வீட்டை தேர்ந்தெடுத்து அங்கு குடியேறினாள்!

கார்மெண்ட்ஸ் கம்பெனியில் தினக்கூலிக்கு வேலைக்கு சென்றாள்! இரு குழந்தைகளையும் தனியார்பள்ளியில் சேர்த்தாள்!

குழந்தைகளின் படிப்பு, உணவு, உடை, வாடகை என்று அவள் கொண்டு வரும் வருமானம் பத்தாமல் போனது!

அதனால், அவ்வேலையை விட்டு நின்றாள்! ஒரு தையல் மிஷினை வாங்கிப் போட்டு அக்கம் பக்கத்து மனிதர்களுக்கு தைத்துக் கொடுத்தாள்! அவள் தைத்து தரும் ஜாக்கெட், சுடிதார், சல்வாரின் கலையம்சம் பிடித்துப் போக ஏராளமானோர் அவள் வீட்டை நோக்கி படையெடுத்தனர்.

பின்னர் அங்கிருந்த இளம் பெண்களுக்கு பயன்தரும் வகையில் பத்து தையல் மிஷினை வாங்கிப்போட்டு தையல் பயிற்சி சொல்லிக் கொடுத்தாள்!

படிப்பு, உணவு, வாடகை போக மீதிபடும் தொகையை வங்கியில் செலுத்தி சேமித்தாள்!

அது ஒரு பெரிய தொகையான போது... அவள் குடியிருந்த தோட்டத்துடன் கூடிய அழகிய சிறுவீடு விலைக்கு வர... மாதவி மகிழ்ச்சியுடன் வாங்கிப் போட்டு அவ்வீட்டை சொந்தமாக்கிக் கொண்டாள்!

மாதவி பிள்ளைகளுக்காக அதிகம் உழைத்தாள்! அதன் விளைவு...?

மாதவியின் உடல் நலம் கெட்டது! அப்போது நித்திலா பி.ஏ., பி.எட்., முடிந்திருந்தாள்!

தன்யஸ்ரீ நல்ல மார்க் எடுத்ததால் அண்ணா யுனிவர்சிடியில் இன்ஜினியரிங் சேர்ந்திருந்தாள்!

தாயின் உடல் நலப்பாதிப்பை கண்ணுற்ற நித்திலா...அருகில் இருந்த கான்வெண்டில் நடைபெற்ற நேர்முகத் தேர்வில் பங்கேற்க... ஆசிரியர் வேலை கிடைத்தது!

ஒன்பது, பத்தாம் வகுப்பிற்கு பாடம் எடுக்கும் தமிழ் டீச்சர் அவள்!

மாதவிக்கு ஓய்வு கொடுத்து ராணியாய் பார்த்துக் கொண்டாள்! அஞ்சல் வழியில் எம்.ஏ.,வும் படித்தாள்!

தங்கையின் படிப்பு, தாயின் மருத்துவ செலவு என்று நிறைய ஆனாலும்... சிக்கனமாய் நித்திலா குடும்பத்தை பார்த்துக் கொள்ள வரவுக்கும், செலவுக்கும் சரியாய் இருந்தது! யாரிடமும் கைநீட்டி கடன் வாங்க வேண்டிய அவசியம் ஏற்படாத நிலையை எண்ணி சந்தோசமானாள்!

தெளிந்த நீரோடையாய் சென்ற அந்த மூவரின் வாழ்க்கையில் பேரிடியாய், மாதவியின் மரணம்!

நித்திலா உடைந்து, உருக்குலைந்து போனாள்!

## 2

**நி**த்திலா, தன்யஸ்ரீ இருவரையுமே தாயின் மரணம் பெரிதும் பாதித்தது!

அவர்களுக்கென்று இருந்த ஒரே ஆத்மார்த்தமான உயிரில் கலந்த உறவல்லவா, மாதவி...!

ஆண் துணையில்லாமல்... பெண் பிள்ளைகளை வைத்துக் கொண்டு... அந்தப் பிள்ளைகளுக்காக ஓடாய் உழைத்து தேய்ந்த மாதவி... அந்தப் பிள்ளைகளுக்கு திருமணம் செய்து... குடும்பம் குழந்தைகள் என்று பார்க்காமலேயே...இருவரையும் இப்பரந்த உலகில் அநாதையாக விட்டுவிட்டு சென்றுவிட்டாள்!

நித்திலாவுக்கு தனது தங்கையைக் காப்பாற்ற வேண்டிய பெரிய கடமையும், பொறுப்பும் இருந்ததால் சீக்கிரமே துக்கத்திலிருந்து விடுபட்டு வெளியே வந்துவிட்டாள்!

ஆனால், தன்யஸ்ரீயை தேற்றி கல்லூரிக்கு அனுப்பி வைக்க பெரும் பாடாய் ஆகிவிட்டது!

தங்கையென்றால் நித்திலாவிற்கு கொள்ளைப்பிரியம்!

தாயையும், தங்கையையும் உயிராய் எண்ணி வாழ்ந்த நித்திலாவிற்கு... தாயின் மரணத்திற்கு பின் தங்கையே சுவாசமாகிப் போனாள்!

தங்கை பி.இ படிப்பை முடித்தவுடன், எம்.இ. அல்லது எம்.டெக் படிக்க வைக்க வேண்டும்!

நல்ல வேலையில் சேர வேண்டும்!

தன்யஸ்ரீக்கு பொருத்தமான, குணமுள்ள, அன்பான ஒரு மாப்பிள் ளையைத் தேடிப்பிடித்து மணமுடிக்க வேண்டும்!

தங்கையின் இன்பமான மண வாழ்க்கையை கண்ணுற வேண்டும்! அவளின் இன்பமான வாழ்வில் மலரும் குழந்தைகளை தூக்கி, கொஞ்சி, தாலாட்டி, ஊட்டி ஊட்டி வளர்க்க வேண்டும் என்று அவளது ஆசைகள் கணக்கில் அடங்காதது!

தன்னைப் பற்றியும், தனது எதிர்கால வாழ்க்கையைப் பற்றியும் சிந்தித்துப் பார்த்ததில்லை!

தன்யஸ்ரீக்கு இது நான்காவது வருடம்!

கல்லூரிக்கு பஸ்ஸில் சென்று, மாலை திரும்பி வந்து படிக்க நிறை யவே கஷ்டப்பட்டாள்! அதனால் ஒரு முடிவுக்கு வந்து நித்திலாவிடம் தன் விருப்பத்தைச் சொன்னாள்.

''அக்கா...நம்ம வீட்டிற்கும், என் கல்லூரிக்கும் இடையே பெரும் தொலைவு என்பது உனக்கு தெரிந்ததுதான்! என்னால் அவ்வளவு தூரம் போய், பின் திரும்பி வந்து படிப்பில் கவனத்தை செலுத்த முடிய வில்லை! வீட்டிற்கு வந்தால் உடல் அசதியில் உறங்கிவிடுகிறேன்! இப்படி சரியாக படிக்க முடியாமல் தூங்கிப்போனால் என் படிப்பு பாழாகிவிடும்! நிறைய மார்க் எடுத்தால்தான் கேம்பஸ் இண்டர்வியூ வில் வேலை கிடைக்கும்! நான் நன்கு படித்து, அதிக மதிப்பெண்கள் எடுக்க வேண்டுமென்றால் என்னை ஹாஸ்டலில் சேர்த்துவிடுக்கா! ப்ளீஸ்...'' தன்யா கெஞ்சினாள்!

''ஏய் தன்யா... நீ இல்லாமல் நான் எப்படி தனியாக இருப்பேன்? ம்கூம்... அதெல்லாம் முடியாது!

பெண்பிள்ளையை ஹாஸ்டலில் சேர்த்து விட்டுவிட்டு பயந்து கொண்டு இருக்க முடியாது!'' என்று நித்திலா ஒரேடியாய் மறுத்தாள்.

''என்னக்கா நீ... படிக்காத பட்டிக்காட்டு பெண்போல பேசுகிறாய்! இந்த வருடம் நான் ஹாஸ்டலில் தங்கினால்தான் செமஸ்டரில் நல்ல மார்க் வாங்க முடியும்! என் வாழ்க்கை அப்போது தான் பிரகாசமாய் இருக்கும்! என் தோழிகள் அத்தனைபேரும் ஹாஸ்டலில் சேர்ந்துவிட் டார்கள்! அக்கா...ப்ளீஸ்க்கா...என்னைப் புரிந்து கொள்ளுக்கா!''

தன்யஸ்ரீ பேச பேச நித்திலா யோசனையாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்!

''நீ வேலைக்கு போய் என்னைக் காப்பாற்றுவது போல... நான் வேலைக்கு போய்... நிறைய சம்பாதித்து.. உனக்கொரு நல்ல மாப் பிள்ளையாய் பார்த்து...சீரோடும்... சிறப்போடும்... ஜாம்ஜாமென்று திருமணம் செய்து வைக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது, இல் லையா...?''

''ஏய் வாயாடி... நீ வேலைக்கு போய்... சம்பாதித்து... எனக்கு திரு

மணம் செய்து வைக்கப் போகிறாயா...?'' என்று சின்ன சிரிப்போடு நித்திலா கேட்க...

''உனக்கு இதுல என்னக்கா சந்தேகம்...?''

''நான் கல்யாணமே பண்ணிக்க போறதில்லை, தன்யா! இந்த உலகத்துல எந்த ஆம்பளையும் நல்லவன் இல்லை!'' என்று நித்திலா சட்டென்று சொல்ல...

''நாம் பார்த்த ஆண்கள் நல்லவங்க இல்லை தான்! அதை ஒத்துக் கொள்கிறேன்! அதற்காக ஒட்டுமொத்த ஆண் இனத்தையே குறை சொல்லாதக்கா! ஆண்களில் நல்லவங்களும் நிறை யபேர் இருக்கிறார்கள்! அதுல ஒருத்தர் வந்து உனக்கு மாலையிடுவார்! உன்னை மகாராணிபோல உள்ளங்கையில் வைத்து தாங்கு தாங்குன்னு தாங்குவார்! அது கூட சீக்கிரமே நடக்கும்!'' தன்யா சிரிப்போடு சொல்ல...

''கல்யாணமா...? எனக்கா...?ச்சே..!ச்சே...! நான் கடைசி வரை இப்படியே சந்நியாசியாதான்டி வாழ்வேன்!''

நித்திலா முகம் சுளித்து சொன்னாள்!

''இந்த ராதைக்கேற்ற இராமன் வந்தால் மயங்காமல் எங்கே போய் விடப்போகிறாய்...?''

''ஒரு ஆணைப்பார்த்து மயக்கமா...? மயங்குவேனா...? நோ... நெவர்! அம்மாவைப் போல ஒரு ஆணைக் கண்டதும் காதல் கொண்டு... மயங்கி... என் வாழ்க்கையை அழித்துக் கொள்ளும் முட்டாளாய் நானிருக்க மாட்டேன்!'' என்று கண்டிப்பான குரலில் நித்திலா பேசினாள்.

''திரும்பவும் சொல்கிறேன்க்கா! உன் உள்ளம் கவர்ந்த கள்வன் வந்தால் மயங்காமல் இருக்கமாட்டாய்! உன் இதயம் நுழைந்து.. உயிரில் கலக்கப் போகும் ஒரு ஆண்மகனை விரைவில் பார்ப்பாய்! பார்த்த நாள் முதலே நீ உன் மனதைப் பறிகொடுப்பாய்! நடக்கும்! இது கட்டாயம் நடக்கும்!''

''அதையும் பார்க்கலாம்! நீ என்ன முற்றும் துறந்த துறவியா...? இல்லை, கடவுளா...? நீ சொல்வ தெல்லாம் அப்படியே நடப்பதற்கு! வேலையைப்பார், தன்யா குட்டி!''

''அக்கா...என்னை ஹாஸ்டலில் சேர்த்துவிடுக்கா! ப்ளீஸ்க்கா...''

''கண்டிப்பாக சேர வேண்டுமா, தன்யா...?''

''சேர்ந்தால்தான் நன்கு படிக்க முடியும்!''என்று முகம்வாடி தன்யா சொல்ல... அதற்கு மேல் பொறுக்க முடியாமல் நித்திலா ஒத்துக் கொண்டாள்.

''சரி சேர்த்து விடுகிறேன், தன்யாகுட்டி!''

''ஹையா... ஒத்துக் கொண்டாயா...? இது நிஜம்தானா...? என் செல்ல அக்கா! என் தங்க அக்கா!'' என்ற தன்யா நித்திலாவை கட்டிப் பிடித்து கன்னத்தில் முத்தமிட்டாள்!

தன்யா இப்போது ஹாஸ்டலில் தங்கிப்படிக்கிறாள்! முதலில் நித்த

லாவுக்கு தன்யாவைப் பிரிந்து இருக்க முடியவில்லை!

தவித்தாள்! தளர்ந்தாள்!

இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் மனம் தன்யா இல்லாமல் தனியே வாழப் பழகிக் கொண்டது!

காலையில் அந்த தெரு பிள்ளைகளுக்கு குறைந்த கட்டணத்தில் டியூசன் சொல்லிக்கொடுக்கிறாள்!

நித்திலா சமைத்து முடித்தாள்!

மாணவர்கள் வர டியூசன் ஆரம்பமானது! ஒருமணி நரேத்தில் டியூ சன் முடித்து கிளம்பினர்!

பின்..

ஆகாய வண்ண நீலத்தில் இளம் ரோஸ் நிறமும், கறுப்பு நிறமும் கொண்ட சிறுசிறுபூக்கள் போட்ட காட்டன் சேலை அணிந்தாள்!

நீண்டு அடர்ந்திருந்த தலைமுடியைத் தளரதளர பின்னி... காதோரம் அழகிய சிறு ரோஜாவை செருகிக்கொண்டாள்!

பேருக்காய் இரண்டு இட்லியை உண்டுவிட்டு... பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

அவள் வேலைப் பார்க்கும் பள்ளி...வீட்டிலிருந்து மூன்று கிலோமீட்டர் தொலைவு! அதனால் நடந்தே செல்வது நித்திலாவின் வழக்கம்!

இப்படி நடந்து செல்வதால் காலையில் எழுந்து உடற்பயிற்சியோ... நடைபயிற்சியோ செய்வதில்லை, நித்திலா!

இளமையும் அழகும் கொண்ட தமிழனுக்கும்... ஒரு அழகான கேரள பெண்ணுக்கும் பிறந்த நித்திலாவை அழகி என்று சொல்லக்கூடாது! பேரழகி என்று தான் சொல்ல வேண்டும்!

நல்ல சந்தன நிறம்! அழகான குண்டு முகம்!

நெடுநெடு உயரம்! பூசினாற் போன்ற உடல்வாகு! அடர்ந்த நீண்ட கருங்கூந்தல்! என்று அம்சமாய் சமீபத்தில் இறக்குமதியான கேரளத்து நடிகையரை விட பேரழகியாய் இருப்பாள், நித்திலா!

வீட்டை பூட்டி...சாவியை பையில் பத்திரப்படுத்தி... தோளில் பையை மாட்டிக்கொண்டு... நீளமான ஜடை நாட்டியமாட... அந்த பேரழகு பெட்டகம் பள்ளிக்கு புறப்பட்டு விட்டது!

எதிர்படும் எத்தனையோ இளைஞர்களின் இதயத்தை அடித்து நொறுக்கி வீழ்த்தி செல்வது அவளுக்கே தெரியாது!

அவர்கள் இங்கு குடிவந்த போது அங்கொன்றும் இங்கொன்றுமாய் வீடுகள் இருந்தன!

ஆனால், இப்போது ஏகப்பட்ட வீடுகள் இருந்தன! நல்ல சாலை வசதி! சாலையில் நிறைய போக்குவரத்து வாகனங்கள் வேக வேகமாய் விரைந்து சென்று கொண்டிருந்தன!

அப்பகுதி முன்னேறி பெரிய நகரப்பகுதியாகிவிட்டது! அதுவும் அவள் வேலைப் பார்க்கும் "நிர்மலா மெட்ரி குலேசன் பள்ளி" வந்த

பிறகு... அங்கே ஜனநெருக்கடியும், வாகனப் போக்குவரத்தும் அதிக மாகிவிட்டது!

கையில் கட்டியிருந்த கடிகாரம் எட்டு எனக்காட்டியது! கொஞ்சம் நடையை எட்டிப் போட்டாள்! எட்டே காலுக்குள் சென்றுவிட லாம். எப்போதும் பள்ளிக்கு முதல் ஆளாய் சென்று நிற்பாள்!

அவள் தோழி அக்ஷிதா! அவளும் தமிழ் டிபார்ட்மெண்ட்தான்! நித்திலா, அக்ஷிதா இருவரும் ஆரம்ப பள்ளியிலிருந்து ஒன்றாக கல்வி பயின்றவர்கள்! உண்மையான தோழிகள்!

இந்த காலத்தில் உண்மையான தோழி... தன் மேல் உயிரையே வைத்திருக்கும் தோழி கிடைத்திருப்பதில் நித்திலாவிற்கு கூடுதல் சந்தோசம்! அந்தத் தோழமை கூடுதல் பலம்!

நித்திலாவிற்கு முன்பு பெரிய தாய் நாய் ஒன்று தனது ஐந்து குட்டிகளுடன் மெல்ல நடைப் போட்டுக் கொண்டிருந்தது!

குட்டிகளோ தாய் நாயின் மார்பில் வாயை வைத்து ஆளுக்கொரு புறம் பால் குடித்துக் கொண்டே போனது!

அந்தக்காட்சி கண்களுக்கு குளிர்ச்சியையும், இதயத்திற்கு இதத்தையும் கொடுத்தது!

நித்திலா முன்னால் சென்ற 'கொழுக் மொழுக்' நாய் குட்டிகளின் அழகிலும்... அது ரோடென்று அறியாமல் பசியாறிச் சென்ற காட்சியிலும் மயங்கி சுவாரசியத்தோடு பார்த்துச் சென்றாள்!

திடீரென்று அந்த பெரிய நாய் வேகவேகமாய் இந்த புறமிருந்து அந்த புறம் ரோட்டைக் கடந்து ஓட... ஓடிய வேகத்தில் மார்பில் வாய் வைத்து தவழ்ந்து கொண்டிருந்த நாய்குட்டிகள் கீழே விழுந்து உருண்டு புரண்டு எழுந்து தாய் போன திசையில் சிதறி ஓட...

நித்திலா மனம் பதறியது!

அவள் பயந்தது போலவே வேக வேகமாக வந்த சைக்கிள்காரன் அந்தக் குட்டிகளின் ஒன்றின் மேல் லேசாய் மோத...

அந்தச் சின்னஞ்சிறிய குட்டி தூக்கி அருகில் இருந்த மணலில் வீசப் பட்டது!

இதுவே,பைக்கோ காரோ மோதியிருந்தால் அந்த நாய்குட்டி உருதெரியாமல் சதைபிண்டமாகியிருக்கும்!

ஆட்டோ ஒன்று வர...

''சார்... சார்... வாயில்லாத ஜீவன்! வலியில் துடிக்குது! ஆஸ்பத்திரிக்கு தூக்கிப் போனால் காப்பாற்றி விடலாம்! மீட்டருக்கு மேலே போட்டு தருகிறேன், சார்! உதவி செய்யுங்கள் சார்!'' என்று கெஞ்சினாள்.

''அட... நான் என்ன உன்னைப்போல கிறுக்கு பிடிச்சவன்னு நினைச்சையா...? இப்போதான் வண்டியை எடுத்துட்டு வரேன்!இப்படி ரத்தம் சொட்டற நாய் குட்டியோட வந்து அவலட்சணமா சவாரிக்கு

கூப்பிடறீயே! இன்னைக்கு விளங்கின மாதிரிதான்!'' என்று திட்டிக் கொண்டே அவன் நகர்ந்தான்.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள்...

காரில் வந்தவர்கள்... அத்தனை பேரையும் வழிமறித்து உதவி கேட்க... எல்லோரும் அவளை ஒருமாதிரி அருவறுப்பாய் பார்த்துக் கொண்டே அகன்றனர்.

அப்போதுதான் அந்த அதிசயம் நடந்தது!

நெடுநெடு உயரத்தில்... ஆஜானுபாகுவாய்... பேரம்சத்துடன் கூடிய ஒருவன்...டூவீலரில் அவளருகில் வந்து நின்று...

''ஹலோ மிஸ்... நான் உங்களுக்கு உதவலாமா...?

அவன் கேட்டதும் நெகிழ்ந்துப்போனாள், நித்திலா!

''சா...சார்... ''என்று நாக்கு குழறியது!

கண்களில் கண்ணீர் அரும்பியது!

''எங்கே போகணும்...? வெட்டினரி ஹாஸ்பிட்டலுக்குத்தானே... வண்டியில் ஏறுங்க!'' என்று அவன் சொல்ல...

''தேங்க்ஸ்... தேங்க்ஸ் சார்!'' என்றவள் அவசரமாய் ஏறி அமர்ந் தாள்.

ஆடவர்களை வெறுத்து ஒதுக்கி சந்நியாசி போல வாழ்ந்த நித்திலா... கொஞ்சமும் தயங்காமல் அவன் வண்டியில் ஏறி அமர்ந்தாள்!

வாழ்நாளில் முதல்முதலாய் டூவீலர் பயணம்!

அதுவும் ஓர் அந்நிய ஆண்மகனுடன்!

அவன் வண்டியைச் செலுத்தினான்!

''சார்...சார்...கொஞ்சம் வேகமாக போங்க, சார்! ப்ளீஸ்...''

நித்திலா பரபரப்பும் கெஞ்சலுமாய் கேட்டாள்!

''இதுக்கு மேல் வேகமா...?

''நாய் குட்டியைக் காப்பாற்ற வேண்டும்,சார்! பாவம்!சின்னஞ்சிறு ஜீவன் சார்!விலங்கே ஆனாலும் இதனுடைய உயிரும் உயர்வுதானே, சார்...!

''நான் வேகமாக போகலாம்,மிஸ்! ஆனால், நீங்கள் விழுந்து விடுவீர் கள்! உங்க மண்டை உடையும்!கை, கால்களில் முறிவு ஏற்படும்! அப் புறம் நான் குட்டியை மறந்து... உங்களை ஹாஸ்பிட்டலுக்கு அள்ளிப் போக வேண்டி இருக்கும்!அதெல்லாம் தேவையா, மிஸ்!'' என்று லேச ான சிரிப்புடன் சொல்ல...

'' என்ன சொல்றீங்க, சார்...?

''ம்... எதையும் பிடிக்காமல் வந்தால் விழுவீங்க தானே? நாய்குட்டி மேல் இருக்குற அக்கறையில் கொஞ்சம் உங்க மேலும் காட்டலாமே!

என் தோளை கொஞ்சம் கெட்டியா பிடித்துக் கொண்டு உட்கா ருங்க,மிஸ்! பயணம் பாதுகாப்பா இருக்கும்!

நீங்கள் சொல்லுவதுபோல வேகமாகவும் போவேன்!''

இது நாட்கள் வரை வேற்று ஆடவனின் ஸ்பரிசம் படாமல் வாழ்ந்த நித்திலாவின் தயக்கத்தைக் கண்டவன்...

''நான் பெண்களைப் பார்த்து ஜொள்ளு விடுபவனோ அல்லது பெண்கள் பின்பு அலையும் பித்ததனா இல்லை,மிஸ்! நான் ரொம்ப நல்லவன்!என்னை நம்பி என் தோளை பிடித்துக்கொண்டு வரலாம்! என்று அவன் சொல்ல...

''நீங்க நல்லவர் என்பதால்தான் இந்த குட்டிக்கு உதவ முன்வந்தீர் கள்! உங்களைப்போய் நான் தவறாக நினைப்பேனா, சார்?''

''அப்போ என் தோளைப் பிடித்துக் கொள்ளுங்கள்!''

## 3

**கொ**ஞ்ச நேரத்தில் வெட்டினரி ஹாஸ்பிடல் வர...

அவன் வண்டியை நிறுத்தினான்!

நித்திலா நாய் குட்டியைத் தூக்கிக் கொண்டு உள்ளே ஓடினாள்!

டாக்டர் நாற்காலியில் அமர்ந்து எதையோ எழுதிக் கொண்டிருக்க ''...டாக்டர் ... டாக்டர்...'' என்ற நித்திலாவின் அழைப்பு குரல் கேட்டு நிமிர்ந்தவர்...

உடலெங்கும் ரத்தக்கறையுடன்,கையில் நாய் குட்டியுடன் நின்ற நித் திலாவிடம்...

''என்னம்மா...? எப்படி...?'' என்று கேட்டார்.

''ஆக்ஸிடெண்ட், சார்!சைக்கிள்காரன் நாய் குட்டியை அடிச்சி போட் டுவிட்டு போய்விட்டான், சார்! நிறைய ரத்தம் வீணாகிவிட்டது!குட்டி யைக் காப்பாற்றுங்கள்,சார்! ப்ளீஸ்...''என்று நித்திலா அழ...

''ரிலாக்ஸ்...ரிலாக்ஸ் பேபி!காப்பாற்றிவிடலாம்! இப்படி கொண்டு வந்து படுக்க வை!நர்ஸ்...கமான் குயிக்!''என்ற அந்த வயதில் முதிர்ந்த டாக்டர் உடனே ட்ரீட்மெண்டை ஆரம்பித்தார்!

''உன் செல்ல நாய் குட்டியை ஆசைஆசையாக வளர்த்தாயாம்மா...?'' என்று கேட்க...

''ம் கூம்! இது வளர்ப்பு நாய் இல்லை!

ரோட்ல தாயோட திரிஞ்சிட்டு இருந்த நாய் குட்டிதான் சார் இது!''

''ஆஹா... இந்த காலத்தில் இப்படி ஒரு இரக்க குணம் உள்ள பெண்ணா...?'' வரவேற்கிறேன்!

உன் குட்டியை காப்பாற்றிக் கொடுக்க வேண்டியது என் பொறுப்பு! பயப்படாதேம்மா! நீ போய் வெளியில் அமரு!'' என்ற டாக்டர் அந்த சின்னஞ்சிறிய நாய் குட்டி மேல் வடிந்த ரத்தத்தை துடைத்து சிகிச்சை யை மேற்கொண்டார்.

நித்திலா கண்களைத் துடைத்துக் கொண்டு வந்து... அந்த பைக்கார

னுக்கு பக்கத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்!

''டாக்டர் என்ன சொல்றாங்க,மிஸ்...?

''காப்பாற்றிவிடலாம் என்றுதான் சொல்கிறார்!''

''அந்த குட்டிநாய் பிழைக்க வேண்டும்.

அதுவும் உங்களுக்காக! நான் கடவுளிடம் கெஞ்சி பிரார்த்தனை செய்கிறேன்! சரியா...?'' என்று கூறி சின்ன புன்சிரிப்புடன் அழகாய் தலையாட்டினாள்!

''ஏன் சார் எல்லோரும் இப்படி இருக்கிறார்கள்?''

''எப்படி மிஸ்...?

''மனிதர்களும்... மனித மனங்களும் ஏன் இப்படி மாறிப்போய் இருக்கிறது? பரிவு, பச்சாதாபம், இரக்கம், கொடை, உயிர்களின் மேல் பாசம், ஜீவகாருண்யம் என எல்லாமும் மறைந்து... ஏன் இப்படி கோர மான மனத்துடன் இருக்கிறார்கள்?

விலங்குகளுக்கு மற்ற ஜீவராசிகளுக்கு இரக்கம் காட்டவோ...உத வவோ தெரியாது! ஆனால், நமக்கு அந்த பண்பும் குணமும் தெரியுமில் லையா...? அப்படி இருக்க...ரத்தம் ஒழுக ஒழுக... உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் ஒரு வாயில்லா சின்னஞ்சிறிய ஜீவனுக்காக இரக்கம் காட்டவில்லையே! அதைக் காப்பாற்ற நினைச்ச எனக்கு யாரும் உதவ முன்வரவில்லையே! ஏன் சார்...கேவலம் நாய்தானேன்னு ஒரு அலட் சியமா என்ன?''

என்று கோபத்தோடு நித்திலா கேட்க...

''நீங்க வேற மிஸ்! அங்கே ஒரு மனிதன் அடிபட்டுக் கிடந்தாலும்... மக்கள் அத்தனைப் பேரும் தன் வேலை, தன் நலன்னுதான் பார்த்துக் கொண்டு போவார்கள்! அந்த அளவு உயிர்களின் மதிப்பு மலிஞ்சு போச்சுங்க!மனிதர்களின் மனதில் பிறர்நலம் சுருங்கி...சுயநலம் விரிந்து விஷம் போல பரவி... சமூகம் அழிவுப்பாதையை நோக்கி போய்க் கொண்டிருக்கிறது!''

''நினைக்கவே அருவறுப்பாக இருக்கிறது,சார்? இன்னும் கொஞ்ச நாளிலே நம் மக்கள் விலங்குகளைவிட கேவலமாய் தரம்தாழ்ந்து நான் கறிவு, ஐந்தறிவு ஜீவன்களாய் அலைவார்கள் பாருங்கள், சார்!... இரக் கமற்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த கூட்டத்தில் எங்கிருந்து சார் தேவ தூதனாய்... தேவகுமாரனாய் நீங்கள் வந்தீர்கள்...?'' என்று கண்கள் பளபளக்க சொல்ல...

''கேவலம் நான் சாதாரண மனிதன்...!என்னைப் போய் தேவதூ தன்...தேவகுமாரனோடு ஒப்பிட்டுக் கொண்டு!'' என்று சட்டென்று சொல்ல...

''எவ்வளவு தன்னடக்கத்துடன் பேசுகிறீர்கள்,சார்! தேவ குமாரர்க ளுக்குத்தான் இப்படி ஒரு நற்பண்பு இருக்கும்!''

''என்ன மிஸ் காலையிலேயே பெரிய ஐஸ் பாரையே தலையில்

வைக்கிறீர்கள்! ரொம்ப குளிருதே!'' என்று அவன் குளிரில் நடுங்குபவன் போல நடிக்க...

நித்திலா வெண்பற்கள் மின்ன சிரித்தாள்! அவள் முகத்தை வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்த அவன்...

''அழகான சிரிப்பு!'' என்று புகழ... நித்திலாவின் முகம் நொடியில் அந்தி வானமாய் சிவந்தது,வெட்கத்தில்!

''உங்க பேர் என்னன்னு சொல்லவில்லையே,மிஸ்...?''

''நித்திலா!''

''ரொம்ப அழகான பெயர்!நித்திலம்ன்னால் மாணிக்கமில்லையா...?''

''ம்...''

''நீங்க என் பெயரைக் கேட்கவில்லையே!'' என்று அவன் குறைபட்டுக் கொள்ள...

''ஓ...ஸாரி சார்! உங்க பேரை சொல்லுங்கள் சார்?''

''சிபிசக்ரவர்த்தி! சுருக்கமா சிபி அல்லது சக்ரவர்த்தின்னு என்னை அழைப்பார்கள்!''

''ரொம்ப அருமையான பெயர் சார், உங்களுடையது!உங்களுக்கு ஏன் இப்படி உதவி செய்யும் மனமும், ஜீவகாருண்யமும் வந்தது என்று தெரிகிறது! உங்கள் பேர்தான் உங்களை இந்த அளவு கருணை உள்ளம் கொண்டவராக வச்சிருக்குன்னு என் கணிப்பு!சரியா, சார்?''

''போங்க நித்திலா! அநியாயத்துக்கு என்னை தூக்கி வச்சி புகழ றீங்க!ஸாரிங்க பேர் சொல்லி பேசலாமா...?'' என்று தனது தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்க...

''பேர் சொல்லிக் கூப்பிடத்தானே பேர் வைப்பது!''

''வொர்க் பண்றீங்களா...?''

''ஆமாம்! நிர்மலா மெட்ரிக்குலேசன் ஸ்கூலில் பட்டதாரி தமிழாசிரியராக பணிபுரிகிறேன்!''

''நேரம் பத்தாகுதே! ஸ்கூலுக்கு தகவல் சொல்லிவிட்டீர்களா...?''

''ஐய்யோ... இன்னும் இல்லை! எங்க பிரின்சி ரொம்ப கண்டிப்பு பேர் வழி!திட்டுவாங்களே! இருங்க! ஸ்கூலுக்கு ஒரு போன் செய்துவிடுகிறேன்!'' என்று பையில் இருந்த போனை எடுக்கும் போதே அது ஒலித்தது!

தோழி அக்ஷிதாதான் போன் செய்தாள்!

''ஏய் நித்தி... எங்கேடி இருக்கே? ஸ்கூலுக்கு ஏன் வரவில்லை? பிரின்சி திட்டறாங்கடி!'' என்று சொல்ல...

''ஆஸ்பிட்டல்ல இருக்கேன்!''

''ஆஸ்பத்திரியா...ஏய்...என்னடி...?

''ஆக்ஸிடெண்ட்ப்பா...?

''ஐய்யோ...எப்படி...? எங்கே...? என்னானது...?எந்த ஆஸ்பிட்

டல்ல இருக்கே...? அடிபலமா...?''

அக்ஷிதா பதறி கேள்விமேல் கேள்வி கேட்டாள்.

''ஏய் அக்ஷிதா...ஆக்ஸிடெண்ட் எனக்கு இல்லை! ஒரு சின்ன நாய் குட்டிக்கு!ஒரு தாய் நாய் தன் ஐந்து குட்டிகளோடு...'' என்று கதையை முழுமையாய் சொன்னவள்...

''கடைசியில் தேவகுமாரன் போல சிபிசார் வந்து என்னை தன் மோட்டார் சைக்கிள்ள போய்...குட்டியை ஆஸ்பிட்டல்ல சேர்த்து விட்டு இங்கேதான் இருக்கேன்! அக்ஷி... என் சேலையெல்லாம் ரத்தம்! மதியம்கூட பள்ளிக்கு வரமுடியாது! நான் வேறு அந்த குட்டி பிழைக்குமா... பிழைக்காதாங்கிற சோகத்தில் இருக்கேன்! பிரின்சி யிடம் நான் லீவு சொன்னால் கத்துவார்கள்! நீயே பக்குவமாக சொல்லி விடுகிறாயா, அக்ஷிதா?'' என்று நித்திலா நீளமாய் பேசி முடிக்க...

''ஏய்... உன்னிடம் பெரும் ரோதனையா இருக்கு! எதிர்வீட்டு பாட்டிக்கு உடம்பு முடியலை! பக்கத்து வீட்டு பையனுக்கு டிஸன்ரி! ரோட்ல நாய்க்குட்டி அடிப்பட்டு விட்டது. அதை ஆஸ்பிட்டல்ல சேர்த்திருக்கேன்னு எப்படியும் மாசத்தில் ரெண்டு நாட்களாவது பள் ளிக்கு மட்டம் போட்டு விடுகிறாய்! நாமென்ன கவர்மெண்ட் ஸ்கூலிலா வேலைப்பார்க்கிறோம்? தற்செயல் விடுப்பு, மருத்துவ விடுப்பு என்று எடுத்துக்கொண்டு மாசமானால் அப்படியே சம்பளம் வாங்க?...

இன்று நீ வரவில்லையென்றால் ஒருநாள் சம்பளம் 'கட்' தெரியுமில் லையா...?''

''ஏய்... எல்லாம் தெரியும்,அக்ஷி! நீ ஒரு நாள் சம்பளத்தைப் பார்க் கிறாய்! அந்த பணத்தைவிட எனக்கு அந்த நாய்க் குட்டியோட உயிர் மதிப்புமிக்கதாய் தெரியுது!'' என்று அக்ஷிதா கோபமாய் சொன்னாள்.

''ஏய் போடி...நாய், பூனை,கோழி இதுக்கெல்லாம் இரக்கம் காட் டிக்கொண்டு...உனக்கு வரவர பைத்தியம் பிடித்து விட்டது,நித்தி! உன்னை நம்பி ஒருத்தி என்ஜினீயரிங் படிக்கிறாங்க நினைப்பே இல் லையா...? உன் தங்கை தன்யாவை படிக்கவைக்க வேண்டும்! நாலுகாசு சேர்த்தால்தானே தன்யாவை நல்ல இடத்தில் கட்டிக் கொடுக்க முடியும்! அப்படியே உனக்கும் ஒரு நல்ல வாழ்க்கையைத் தேடணும்! அதுக்கெல்லாம் காசு வேணும்டி, காசு!''

''அது எனக்கும் தெரியும்டி! நீ புலம்பாதே! எனக்கு லீவை நீ சொல்றயா...? இல்லே பிரின்சி திட்டினாலும் பரவாயில்லைன்னு நானே சொல்லவா...?

''நானே சொல்றேன்! நாளைக்கு வந்துருவே இல்ல?''

''வரேன்!''

''அது யாருடி சிபி சார்...?''

''வெரி இன்ரஸ்டிங் பெர்சன்! அவர் மட்டும் உதவலேன்னால்...நான் நாய்க்குட்டியை ஆஸ்பிட்டலுக்கு தூக்கி வந்திருக்க முடியாது! அவ

ரைப்பத்தி பள்ளிக்கு வந்து சொல்றேன்!''

என்று கூறி நித்திலா போனை ஆப் செய்து விட்டாள்.

''யாருங்க போன்ல...?'' சிபி கேட்க...

''என் தோழி அக்ஷிதா!''

''நீங்க இன்று வேலைக்கு போகலேன்னால் ஒரு நாள் சம்பளம் கட்டாகுமா...? ஒரு வாயில்லா ஜீவனுக்காக இரங்கி... உங்க ஒரு நாள் சம்பளத்தை பெரிசா நினைக்கலையே! நித்திலா... யூ ஆர் கிரேட்! உங்களைப்போல ஈரநெஞ்சம் படைத்த நல்ல அற்புதமான பெண்களைக் காண்பது... இந்தக் காலத்தில் அபூர்வம், நித்திலா!'' என்று சிபி கண்கள் பளபளக்க அவளைப் பாராட்டினான்.

''உங்க புகழ்ச்சிக்கு நான் தகுதியானவளா சிபி சார்...?''

''நூறு சதவீதம் தகுதியானவர்!''

''ஸாரி சார்...நான் ஒரு முட்டாள்!உங்களுக்கு வேலையிருந்தால் கிளம்புங்க சார்! உங்க வேலையை கெடுத்துக் கொண்டு இருக்க வேண்டாம்!''

''எப்படி வீடு போய் சேர்வீங்க நித்திலா...?

''ஆட்டோ பிடிச்சி போயிடறேன்,சிபி சார்?''

''உங்க கோலத்தைப் பார்த்தால்... ஆட்டோக்காரன் ஆட்டோவில் ஏத்துவான்னு நினைக்கறீங்களா...?''

நித்திலா தன்மேல் அப்பிக்கிடந்த ரத்தக்கறைகளை நோக்கினாள்.

''இப்படி உடையெல்லாம் ரத்தக்கறையாய் போய் நின்றால் யாருமே ஏத்தமாட்டாங்க, நித்திலா! அதனால் நீங்க வீடு திரும்பறது சிரமமாகி விடும்!உங்களையும், உங்க நாய்க்குட்டியையும் பத்திரமாக வீடுபோய் சேர்த்துவிட்டு...அப்புறம் என் வேலையைப் பார்க்கப் போகிறேன்! நானும் இப்படி ரத்தக்கறை படிஞ்ச சர்ட்டோடு வேலைக்கு போக முடியாது! வீடு போய் குளித்து வேறு உடைமாற்றிக் கொண்டுதான் போக முடியும்!''

''உங்களுக்கு நிறையவே சிரமம் கொடுத்து விட்டேன்,சிபி சார்! என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும்,சிபி சார்!!''

தாமரை மொட்டாய் குவிந்த கைகளுடன்...

கண்களில் நீர்மின்ன வணங்கியவளையும் பார்த்து...

''ஓ...நித்திலா சும்மா இருங்க! உங்களுக்கு இருக்கும் ஹெல்பிங் மைண்டில் எனக்கு பத்து பர்சன்ட் கூட இருக்காதுன்னு தோணுது!'' என்று சிபி கூறிக்கொண்டு இருக்கும் போது...

''ஹலோ பெண்ணே... உன் நாய்க்குட்டியோட ட்ரீட்மெண்ட் முடிஞ்சது! வந்து பார்!'' என்று டாக்டர் அழைக்க...

நித்திலா எழுந்து ஓட.... சிபியும் வேகநடையுடன் அவள் பின்னே சென்றான்.

''காயங்களுக்கு தையல் போட்டிருக்கேன்! கால்ல எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கு! அதுக்கும் கட்டு போட்டிருக்கேன்!''

''இதை அந்த தாய் நாயிடம் விட முடியுமா, டாக்டர்?''

''எப்படி முடியும்? அது வேறு தெரு நாய்ன்னு சொல்றீங்க! நிற்காமல் குட்டியை இழுத்துக்கொண்டு ஓடிட்டே இருக்கும்! அதுவோட இதனால் போகமுடியுமா...? கால் எலும்பு முறிவு கூடும் வரை இதை பத்திரமா பார்த்துக்கணும்! காயங்களுக்கு மருந்து போடணும்!இல்லேன்னால் இதுக்கு ஏற்பட்டிருக்கும் காயத்துக்கு ஜன்னி கண்டு செத்துவிடும்மா! நீ இப்படி பதறி தூக்கி வந்து காப்பாற்றியதற்கு அர்த்தமில்லாமல் போயிடும்மா!அதனால் இதுக்கு சரியாகும்வரை உன் வீட்டில் வைத்து காப்பாற்று! சரியானதும் அந்த தாய் நாயிடம் விட்டுவிடு!'' டாக்டர் சொல்ல''

''ஓ.கே டாக்டர்!'' என்று சட்டென்று ஒத்துக்கொண்டாள்,நித்திலா!

''நான் இதில் எழுதியிருக்கும் நாட்களில் ஆஸ்பிட்டலுக்கு தூக்கி வாங்க!''

''ஓ.கே. டாக்டர்! பீஸ் எவ்வளவு, டாக்டர்?''

''ஐநூறும்மா!'' என்றதும் நித்திலாவின் முகம் வாடிப்போனது

''என்கிட்ட அவ்வளவு இல்லையே!ஐநூறுக்கு ஈடா இந்த மோதிரத்தை வச்சிக்கங்க!பணத்தை கொடுத்து விட்டு மோதிரத்தை திருப்பிக்கிறேன்!'' என்றவள் தன் விரலில் பளபளத்த அந்த சிறு மோதிரத்தைக் கழற்ற...

''நித்திலா... மோதிரத்தை விரல்ல போடுங்க! டாக்டர் இந்தாங்க உங்க பீஸ்!'' என்று சிபி தன் சட்டைபையில் இருந்து ஐநூறை எடுத்து நீட்ட... டாக்டர் பெற்றுக் கொண்டார்!

''வாங்க போகலாம்!''

திகைப்புடன் நின்று கொண்டிருந்த நித்திலாவை சிபி அழைக்க... நாய்க்குட்டியைத் தூக்கிக் கொண்டு அவன் பின்னே வந்தாள்.

அவள் அட்ரஸ் சொல்ல... அவ்விடம் கொண்டு வந்து இறக்கிவிட்டான், சிபி.

''சிபி சார்...மாசக்கடைசி என்பதால் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையே!அதுக்கு ஈடா இந்த மோதிரத்தை வச்சிக்கங்க!ப்ளீஸ்...'' என்று அவள் மோதிரத்தை கழற்றி நீட்ட...

''பணம் எங்கே போய்விடப் போகிறது? நான் வாங்கிக்கிறேன்!குட்டியை பத்திரமா பார்த்துக்கங்க!'' என்றவன் அவள் நீட்டிய மோதிரத்தை வாங்கி... அவள் கைப்பற்றி விரலில் மாட்டிவிட்டு... இயல்பாய் கையாட்டி சென்றான்.

சிபியின் பரிசம் நித்திலாவின் உயிர்வரைச் சென்று புதுவித மாற்றங்களைச் செய்தது!

மன்மதனாய் சென்ற சிபியையே அவன் உருவம் மறையும் வரை விழியகலாது பார்த்துக் கொண்டு நின்றாள்,நித்திலா!

இது நல்லதிற்கா...?அல்லது கெட்டதிற்கா...?

கடவுளுக்கே வெளிச்சம்!

## 4

**நா**ய்க்குட்டியை ஹாலில் விட்டுவிட்டு முதலில் ரத்தக்கறை படிந்த சேலையைக் கழற்றிவிட்டு ஒரு முறைக்கு இருமுறையாய் சோப்பு போட்டு குளித்தாள்,நித்திலா!

பின், பாலைச் சுண்டக் காய்ச்சி... நன்கு ஆற்றி... நாய்க்குட்டியின் முன்பு தட்டில் ஊற்றி வைக்க... அது முதலில் முகர்ந்துப்பார்த்து விட்டு... பின் அவசர அவசரமாய் பயங்கர பசியோ என்னவோ பாலை ஒரே மூச்சில் நக்கி குடித்து விட்டது!

சின்னமணிக் கண்களை உருட்டி நித்திலாவைப் பார்க்க... அவளோ ஆசையோடு அதன் முகத்தை வருடிக் கொடுத்துவிட்டு...

மாத்திரைகளைப் பிரித்து சின்னக் கிண்ணத்தில் போட்டு, நீர் ஊற்றிக் கரைத்து... அதை மடியில் தூக்கி வைத்து வாயைப் பிளந்து...கரைத்த மாத்திரைக் கலவையை குழந்தைக்கு புகட்டுவது போல புகட்டினாள்!

நல்ல கசப்போ என்னவோ குட்டி முழுங்க ரொம்பவே சிரமப்பட்டது! பின் கொஞ்சம் தண்ணீரைப் புகட்டிவிட்டு... மெல்ல தடவி கொடுக்க...உணவு மாத்திரையின் உபயத்தில் குட்டி உறங்கிவிட்டது!அதைத்தூக்கி மூலையில் ஒரு விரிப்பில் கிடத்தி விட்டு...கை கால் கழுவி வந்து காலை உணவை மதிய உணவாய் உண்ண ஆரம்பித்தாள்.

''சிபி சார்... அவர் இருப்பிடம் போயிருப்பாரா...?

'சிபி சார்... குளித்திருப்பாரா...?'

'சிபி சார்... உணவு உண்டு இருப்பாரா...?'

நித்திலாவின் ஞாபக அலைகள் சிபியையே சுற்றி சுழன்றுக் கொண்டிருந்தது!

அந்த நேரம் பக்கத்து வீட்டு ஆயா பரிமளம் வந்தாள்! மாதவி இறந்த பின்பு பரிமளம் ஆயாதான் இருவருக்கும் நல்ல துணை!அன்பாய், பாசமாய் பார்த்துக் கொண்டாள்! பரிமளம் ஆயா ஒரு தாயைப்போல பார்த்துக் கொண்டதால்தான் நித்திலா தாயின் இறப்பு கொடுத்த சோகத்திலிருந்து மீண்டாள்!

''என்ன நித்திலா ஸ்கூலுக்கு போகலே...?'' என்று கேட்டுக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தவள் கட்டுடன் தூங்கிக்கொண்டிருந்த நாய்க்குட்டியைப் பார்த்து...

''என்ன நித்திலா, இது?'' என்று கேட்க...

''நாய்க்குட்டி ஆயா! சைக்கிள்காரன் இதை அடிச்சி போட்டிட்டு போய்விட்டான்! ஆஸ்பிட்டலுக்கு தூக்கிப்போய் சிகிச்சை கொடுத்து, கட்டு போட்டு தூக்கி வந்திருக்கேன்! இதனால்தான் ஸ்கூலுக்கு போகல, ஆயா!''

''நல்ல பொண்ணு போ! ஒரு நாள் சம்பளம் போச்சே!''

''என்ன ஆயா...? நீங்களும் என் தோழி அக்ஷிதா போல சலிச்சிக் கிறீங்க!''

''பின்னே, இந்த அவசர, இயந்திர உலகத்துல இப்படி ஒரு நல்ல உள்ளம் படைச்ச ஜீவனைப் பார்க்கறது அரிதில்லே! ஆனாலும் உனக்கு இந்த அளவு இரக்க குணம் கூடாது,தாயீ!''

''எனக்கு இது பிடிச்சிருக்கு, ஆயா!''

''உன் இயல்பான குணத்தை இனியா

மாத்திக்க முடியும்? சரி உனக்கு பிடிச்சதை செய்! இது உடம்பு சரியா னதும்... வீட்டில் வச்சி வளர்க்கப் போறீயா என்ன?''

''இல்லை, ஆயா! இது தாயிடம் கொண்டு போய் விட்டுவிடுவேன்! நாள் முழுக்க நான் பள்ளியில் இருப்பேன்! இது தனியா இங்கிருந்து 'கஷ்டப்பட வேண்டாம்!'

''சரி..நீ தூங்கு, நித்திலா! வரேன்!'' என்று பரிமளம் போய்விட் டாள்!

இரவெல்லாம் காயத்தின் வலி தாங்க முடியாமல் குட்டி அனத்திக் கொண்டிருந்தது! நித்திலாவும் தூங்கவில்லை! அதை மடியில் போட்டு வாஞ்சையுடன் தடவிக்கொண்டிருந்தாள்! அதன் முனகல் அடங்கிவிட் டதே என்று கீழே கிடத்தினால் மீண்டும் கத்தியது!

விடியற்காலையில் அது உறங்கியதும்... நித்திலாவும் உறங்கினாள்!

விழிப்பு வந்து எழுந்த போது மணி எட்டு!

நித்திலா பதறிப்போனாள்! இனி வேலை முடித்து பள்ளி செல்ல முடியாது என்று தோன்றியது!

அக்ஷிதாவிற்கு போன் செய்து..

''இன்றைக்கும் நான் லீவுடி! பிரின்சியிடம் சொல்லிடறீயா..?''

''ஏய்.. என்ன விளையாடறீயா..?'' என்று அக்ஷிதா சத்தம் போட...

''ஆமா.. நீ என் முறைமாமன் பாரு! விளையாடறேன்!'' என்று நக்க லாய் சொல்ல..

நேற்றே பிரின்சி கன்னா பின்னான்னு சத்தம் போட்டாங்க! உனக்கு ரொம்ப உடம்புக்கு முடியலேன்னு சொல்லி சமாளிச்சேன்! நாம வேற பத்தாவது தமிழ் எடுக்கறோம்! உன்னை நம்பி நாலு கிளாஸ்ல நூற்றைம் பது மாணவர்கள் இருக்காங்க! அவங்க நல்ல மார்க் எடுத்து பாஸ் செய் யணுமில்லையா, நித்தி? அதை நீ யோசிக்கிறதே இல்லையா..?''

''ஏய் அறுக்காதடி! பாடமெல்லாம் முடிச்சிட்டேன்! ரிவிஷன்தான் நடந்துகிட்டு இருக்கு! லெசர் பிரீடுல இருக்கும் மிஸ் யாருக்காவது என் பீரிடை ஆக்டிங் ஒர்க் போட்டால் அவங்க போய் தமிழைப் படிக்க வைப்பாங்க! நான் ஒண்ணும் லீவு போட்டுவிட்டு சினிமா, பார்க், பீச்சுன்னு காதலனோட கை கோர்த்து சுத்தல! உருப்படியான செயலுக் குத்தான் லீவு போடறேன் !''

''பிரின்சி வேலையை விட்டு தூக்கிட்டால் என்ன செய்வாய்..?''

''இந்த சென்னையில் நிர்மலா மெட்ரிகுலேசன் பள்ளி மட்டும் தான் இருக்கா..?''

''ஆனாலும் உனக்கு கொழுப்பு ஜாஸ்திடி!''

''எவ்வளவு.., நீயே சொல்லு?'' என்று கேட்க..

''ஏய் அடங்காப்பிடாரியே! போனை வையுடி! டாக்டரிடம் காட்டியும் கொஞ்சம் கூட பீவர் குறையலே! படுத்த படுக்கையா கிடக்கறாள்னு சொல்லி தொலைக்கிறேன்..! சந்தோஷமா..?''

அக்ஷிதா கடுப்புடன் சொல்ல.., நித்திலா சிரித்துக்கொண்டே போனை ஆப் செய்தாள்!

## 5

**மு**தலில் நாய்க்குட்டியின் வயிற்றிற்கு உணவு கொடுத்துவிட்டு நகர.. அது சுருண்டு மூலையில முடங்கி கண்மூடிக்கொண்டது!

நித்திலா பல்துலக்கி.. தலையோடு நீர் ஊற்றி குளித்து முடித்து.. பாசிபச்சையில் இளரோஸ் நிற பூக்களிட்ட அழகிய சேலையை எடுத்து கட்டிக்கொண்டாள்!

தலைமுடியை நீர்போகத் துடைத்து முதுகில் படர விட்டாள்!

இஞ்சியும், ஏலமும் தட்டிப்போட்டு தேநீர் வைத்தாள்! ஒரு டம்ளரில் ஊற்றியது போக மீதியை ப்ளாஸ்கில் ஊற்றினாள்!

வீட்டின் முன்புறம் இருந்த சிறிய அளவிலான தோட்டத்திற்கு வந்து அங்கிருந்த சிறிய நாற்காலியில் அமர்ந்து தேநீரை ரசித்துப்பருகினாள்!

சூரிய ஒளியில் அவள் தலைமுடி உலர ஆரம்பித்தது!

காலை வெய்யில் இதமாய் அவள் மேனி தழுவ.. அந்த சுகத்தில் கண்மூடி கிறங்கி இருந்தவளின் செவிகளில் பைக் வந்து நிற்கும் சத்தம் கேட்க.. கண் விழித்தவள் ஆச்சரியமானாள்.

சிபி சக்ரவர்த்தி. நின்று கொண்டிருந்தான், அதுவும் அவள் போட்ட அழகிய ரங்கோலிக் கோலத்தை ஒருவித ரசிப்புத்தன்மையுடன் பார்த்துக்கொண்டு!

நித்திலா பரபரப்பாய் ஓடிப்போய் அந்த சின்ன கேட் திறக்க...

''ஹலோ நித்திலா மிஸ்.. குட்மார்னிங்!'' என்று வணங்க அவளும் இன்முகத்துடன் பதிலுக்கு வணங்கினாள்!

''வாங்க.. நீங்க வருவீங்கன்னு நான் நினைச்சிகூட பார்க்கலை!'' என்றவளின் முகம் பூவாய் மலர்ந்திருந்தது!

கறுப்பு நிற பாண்டும், அந்த ஆகாய வண்ண முழுக்கை சட்டையை மடித்துவிட்டிருந்த விதமும் நித்திலாவைக் கவர்ந்தது! படிய வாரிய தலையும்.. அந்த கூர்நாசியும், அடர்ந்த மீசையும்.. அது அவனுக்கு அழகுக்கு அழகு சேர்த்தது! பேரழகனாய் அந்தக் காலை வேளையில் சிபி

வந்து நிற்பான் என்று நித்திலா கனவிலும் நினைக்கவில்லை.

''நைட் நல்லா தூங்கனீங்களா, நித்திலா?''

நேற்று இரவு முழுக்க குட்டி நாயும், உங்கள் நினைவுகளும் தூங்கவே விடவில்லை என்று சொன்னால் சிபி நம்புவானா..? என்று நினைத்தவள் அவன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல வேண்டுமே என்று 'ம்..' என்று தலையாட்டி வைத்தாள்!

ஹாலில் அமர வைத்து.. ஓடிப்போய் பிளாஸ்கில் இருந்த டீயை கப்பில் வார்த்து எடுத்து வந்து நீட்டினாள்!

டீயை வாங்கிப்பருகியவன்..

உங்க டீயின் சுவை அருமை,, நித்திலா மிஸ்! என்று வெண்பற்கள் ஒளிர பாராட்டுதலுடன் சொல்ல..

''தாங்க்யூ, சிபி சார்!'' இதழ் மலர்ந்தாள், நித்திலா.

''வீடு ரொம்ப அழகா, சுத்தமா, வச்சிருக்கீங்க! சொந்த வீடா..?''

''ஆமாம், சிபி சார்! உங்களை நேற்று உள்ளே அழைக்காததற்கு வருந்துகிறேன், சிபிசார்!''

''நேற்று இருந்த மனநிலையில் என்னை உள்ளே அழைக்க தோன்றியிருக்காது! அதுக்கெதுக்கு வருந்தணும் நித்திலா? ஆமா.. உங்க குட்டி நாய் நலமா...?''

''உங்க புண்ணியத்தில் ரொம்ப நலம், சிபி சார்!''

''நைட் நல்லா தூங்கினதா?''

''அதையேன் கேட்கறீங்க! இரவு முழுக்க கத்தி கலாட்டா செய்துவிட்டது!''

''சின்ன குட்டி இல்லையா..? காயத்தின் வலியைத்தாங்கமுடியாமல் உங்களைக் கஷ்டப்படுத்தியிருக்கும்! ''

''நித்திலா மிஸ்.. யார் செய்வாங்க இப்படி தெருவில் திரிஞ்சிட்டு, இருக்கும் குட்டி நாய்க்கு வைத்தியமும், பாதுகாப்பும்.. ம்..?'' என்று ஆச்சரியப்பட்டவனிடம்...

''சிபி சார்.. நேற்று இருந்த மனநிலையில் உங்களைப் பற்றி கேட்காமல் விட்டுவிட்டேன்! உங்க சொந்த ஊர் சென்னைதானா..?''

நித்திலா இப்படிக்கேட்க.. சிபியின் இதழ்களில் கசப்பான புன்னகை ஒன்று உதிர்ந்தது!

''எந்த ஊர்ன்னே தெரியாது,, மிஸ்!''

''என்ன சொல்றீங்க, சிபி சார்..?'' என்று படபடத்தாள்.

நான் ஒரு அனாதை! பிறந்த அன்றே நான் வேண்டாதவனாயாகிப் போக என் தாய் தூக்கிப்போய் அநாதை ஆசிரமத்தில் வீசிவிட்டு சென்றுவிட்டாள்! அங்கேயே வளர்ந்து, படித்தேன்! படிப்புன்னால் பெரிய படிப்பென்று நினைக்காதீங்க! வெறும் பனிரெண்டாவது வரைதான்! அதை முடிக்கவே உங்க வீட்டு கஷ்டம் என் வீட்டு கஷ்டம்னு படலை! படிப்பு சரியா மண்டையில் ஏறாமல் போனதால் படிப்பை நிறுத்திவிட்

டேன்! சின்னதா வேலையும் தேடிக்கொண்டேன்!''

''என்ன வேலை செய்யறீங்க, சிபிசார்?''

''டூவிலர் மெக்கானிக் ஷாப்புல மெக்கானிக்கா வேலைப்பார்க்கிறேன், நித்திலா!''

''டூவிலர் மெக்கானிக்கா..?'' நம்பாமல் கேட்க..

''என் உருவம்,உடையைப் பார்த்தால் நல்ல பெரிய வேலையில் இருப்பது போல தெரியுதா, என்ன..?''

''ம்..!''

''எவனோ ஒரு வளமான பணக்காரன்.. என் தாயை ஏமாற்றி என்னை அவளுக்கு பரிசாக கொடுத்து விட்டு போயிருப்பான்னு தோன்றுது,, மிஸ்! அந்த ஆள் கொடுத்த ராஜமரபுதான் என் அம்சமான, அழகான தோரணைக்கு காரணம்!'' என்று கூறிய சிபிக்கு.. எந்த பதிலும் சொல்லாமல் நித்திலா விழிவிரிய மௌனமாய் பார்த்துக்கொண்டிருக்க..

''பெரிய படிப்பு படித்து.. பெரிய வேலையில் இருந்தால் தான் நட்பு பாராட்டுவீங்களா,, நித்திலா..?''

''ஐய்யோ என்னைத்தப்பா புரிஞ்சிக்கிறீங்களே, சிபி சார்! உங்க நடை,உடையை பார்த்து நம்பிக்கை வராததால் டூவீலர் மெக்கானிக்கான்னு கேட்பது தப்புதான்! நேர்மையா செய்யற எந்த வேலையும் கௌரவமான வேலை தான்! இன்னும் அநாதை ஆசிரமத்துலதான் தங்கியிருக்கீங்களா..?''

''எப்படி முடியும்..? கழுதைக்கு வயசாகறாப் போல வயசு இருபத்து ஏழு ஆகுதே? இருபது வயசுலேயே வெளியே அனுப்பிட்டாங்க! நான் வெளியேறினாத்தானே என்னைப்போல ஒரு அநாதை உள்ளே நுழைவான்!'' என்று சிபி சக்ரவர்த்தி சோகமாய் சொல்லி முடிக்க..

''உங்களை அநாதைன்னு பேச்சுக்கு கூட சொல்லாதீங்க, சிபி சார்!''

''அநாதையை அநாதை என்று சொல்லாமல்?''

''நேற்றில் இருந்து நீங்க அநாதையில்லை! என்னை உங்க உறவுப் பெண்ணா நீங்க நினைத்துக்கொள்ளலாம்!''

''ரொம்ப நன்றி நித்திலா! எனக்கு பின்னாடி இருக்கும் அநாதைங்கிற பட்டத்தை அழித்ததற்கு!''

''எங்க தங்கியிருக்கீங்க, சிபி சார்?''

''இதே ஊர்ல.. மொட்டை மாடியில் சின்னதா அறையெடுத்து தங்கியிருக்கேன்!''

''சாப்பாடெல்லாம் நீங்களே சமைச்சிக்கிறீங்களா?''

''ம்கூம்! ஹோட்டல்ல தான்! ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டு நாக்கு செத்து போயிருக்குங்க! வயிறும் வெந்து புண்ணாகிப்போய் இருக்கு!''

''இந்த ஞாயிறு இங்கே சாப்பிட வருகிறீர்களா, சிபி சார்?''

''அதுக்கு நான் கொடுத்து வச்சிருக்கணும், நித்திலா!''



''என்னைப்பற்றி கேட்கமாட்டீங்களா, சிபி..?''

''ஓ.. ஸாரிங்க! சொல்லுங்க?'' என்றவன் நிமிர்ந்து உட்கார்ந்து அவள் விழிகளை ஊடுருவினான்,

''அம்மா, அப்பா இல்லை! செத்துப்போயிட்டாங்க! எனக்கொரு தங்கை இருக்கா! தன்யாஸ்ரீன்னு பேரு! இங்கே தான் பைனல் இயர் படிக்கிறாள்! ஹாஸ்டலில் தங்கி படித்தால் நிறைய மார்க் வாங்க லாம்ன்னு அடம்பிடிச்சி என்னிடம் பர்மிஷன் வாங்கி தங்கிக்கொண் டாள்!

எனக்கு தங்கைன்னால் உயிர், சிபி சார்!'' என்று பேசிப்போனவளை இடை நிறுத்தி...

''நீங்க சார் விடுத்து சிபின்னு சொல்லுங்க! நான் மிஸ் விட்டு நித்தி லான்னு அழைக்கிறேன்! சாரும், மிஸ்ஸும் நம்மை அந்நியமாக்குவது போல தோணுது! உங்களுக்கு?'' என்றான், சிபி!

''எனக்கும்தான்!'' என்றவளின் கன்னங்களில் வெட்கச்சிவப்பு புதிதாய் தோன்றியது!

''என் தாய் இறந்த பின்பு வாழறதே, என் தங்கை தன்யாவுக்காகத் தான்! அவள் சந்தோசம் தான் என் சந்தோசம்! அவள் துக்கம் தான் என் துக்கம்!''

''மொத்தத்தில் அவள் சிரித்தால் நீங்க சிரித்து அவள் அழுதால் நீங்கள் அழுதுன்னு தங்கையையே சுவாசமாக எண்ணி வாழறீங்க! சரியா, நித்திலா..?''

சிபி அழகாய் புருவம் உயர்த்தி.. புன்னகையுடன் அவளை நோக்கி கேட்க.,.

நித்திலாவின் கண்களில் கண்ணீர் பூத்தது! கண்ணீரோடு தலைய சைத்தவளிடம்...

''இப்படி ஒரு பாசம் வைக்க எனக்கொரு தம்பியோ, தங்கையோ இல்லை! அதுக்காக வருந்தி நான்தான் அழணும்! ஆனால், நீங்க அழ றது எந்த விதத்தில், நியாயம்.. ம்?'' என்று தலைசாய்த்து அவளை ஆழ்ந்த பார்வையுடன் நோக்க...

நித்திலா கண்ணீரோடு சிரித்தாள்!

''உங்களை இரவெல்லாம் இம்சித்துவிட்டு.. நிம்மதியா இருக்கிற உங்க பிரண்ட் எங்கே, நித்திலா..? நான் அதைப்பார்க்க வேண்டுமே! என்று சிபி கேட்க..

''இதோ ஒரு நிமிடம்!'' என்று படுக்கை அறைக்கு ஓடியவள்.. நல்ல உறக்கத்தில் இருந்த நாய்க்குட்டியைத் தூக்கி வந்து காட்டினாள்.

''நல்ல மருத்துவம்.. நல்ல சாப்பாடு.. நல்ல பாதுகாப்பு என்று இதுக்கு ராஜயோகம் தான் போங்க! இந்த இடத்துல நான் இருக்கக்கூ டாதா...?''

''எனக்கு அடிப்பட்டு நீங்க பார்த்து... காப்பாத்தின்னு...''

சிபி நீளமாய் சொல்லிக்கொண்டு போக.. நித்திலா கோபமாய் அவன் பேச்சை இடைமறித்தாள்!

''சிபி சார்.. என்ன பேசறீங்க..? இப்படியெல்லாம் அபசகுனமா பேசி ஏன் என் மனசை காயப்படுத்தறீங்க.?'' என்று துடிப்பும், தவிப்பு மாய் கோபத்துடன் கேட்க...

எனக்கு ஒன்று என்றால் இப்படி துடிச்சிப் போறதுக்கு ஆளே இல்லை, நித்திலா! முதன்முதலா எனக்காக நீங்க துடிக்கற துடிப்பும். தவிக்கிற தவிப்பும் ரொம்ப ரொம்ப பிடிச்சிருக்கு..''

''எனக்கு உங்க நட்பு பிடிச்சிருக்கு! என் காயம்பட்ட இதயத்துக்கு அருமருந்தா இருக்கு, நித்திலா! இன்றிலிருந்து நீங்களும், நானும் ஆத் மார்த்தமான தோழர்கள்! சரியா..?''

ம்... என்று அவன் முகத்தில் பதித்திருந்த கண்களை எடுக்காமல் செ ால்லி.. அவள் வெட்கப்பட...

''முதன்முறையா.. இயல்பா வெட்கப்படற பெண்ணை பார்க்கி றேன்! நித்திலா.. ஏராளமான ரோஜாக்கள் பூத்து குலுங்குது..

''தோட்டத்திலா..?''

''ம்கூம்.. உங்க கன்னத்தில்! வெட்க ரோஜாக்கள்!''

மீண்டும் பூத்த வெட்கத்தை மறைக்க இமையைக் கொட்டி.. எவ் வளவு முயன்றும் முடியாமல் போனது, நித்திலாவுக்கு!

''இன்றும் ஸ்கூலுக்கு போகலையா, நித்திலா.,.?''

''இன்று ஒருநாள் மட்டும் இந்த நாய்க்குட்டியின் அருகில் இருந்து கவனித்துவிட்டு.. நாளையில் இருந்து செல்லலாம் என்று இருக்கி றேன்!

''நாளைக்கு இந்த மகாராஜாவை யார் பார்த்துக்கொள்வது?''

''மகாராஜாவா..'' அவள் புரியாமல் கேட்க..

''இது இங்கே மகாராஜாப் போல தானே கோலோச்சிட்டு இருக்கு! இதுக்கு மகாராஜான்னே பேர் வெச்சிடலாமே, நித்திலா!''

''மகாராஜா. பேர் நல்லாதான் இருக்கு, சிபி!'' என்று சிரித்தாள்.

''நாளைக்கு வேணா என்னிடம் கொடுத்துவிட்டு போங்களேன்! மெக்கானிக் ஷாப்புக்கு எடுத்து போய் வச்சிருக்கேன்! பள்ளி முடிந்து நீங்க வீடு வந்ததும் உங்களிடம் கொண்டு வந்து கொடுக்கறேன்!''

''ஐய்யோ.. உங்களுக்கு எதுக்கு சிரமம்? பக்கத்து வீட்டுல பரிமளம் ஆயா இருக்காங்க! ரொம்ப நல்லவங்க! அவங்ககிட்ட விட்டுவிட்டு போகலாம்ன்னு இருக்கேன்!''

''குட்டிக்கு உடம்பு முடியாமல் போனால் எனக்கு போன் செய்யுங்க! தயங்காதீங்க! சரியா..?''

''உங்க போன் நம்பர்..?'' என்று நித்திலா தயங்க.. அவன் போன் நெம்பரைச் சொன்னான்.. அவள் போனிலிருந்து அவன் நெம்பருக்கு மிஸ்டுகால் கொடுத்து...

''இது தான் என் நெம்பர்.. சேவ் பண்ணிக்கங்க சிபி!''

''சரிங்க,, நித்திலா! நான் கிளம்பட்டுமா..?''

''அதற்குள்ளேவா கிளம்பறீங்க..?''

நித்திலா ஏக்கத்துடன் மனதை மறைக்காமல் கேட்டுவிட்டு.. தன் செயல் உணர்ந்து அழகாய் உதடு கடித்து தலைகுனிய.. அவன் சின்ன சிரிப்புடன்..

''வேலைக்கு நேரமாகுது, நித்திலா! எனக்கும் இங்கிருந்து போக மனசே இல்லை!'' என்று அவன் விளக்க..

''சரிங்க! பார்த்து போயிட்டு வாங்க! சிபி!'' என்று சிறு தலையசைப்புடன் விடை கொடுக்க.. பேரழகனாய், கையில் பைக் சாவியை சுற்றிக்கொண்டே சென்ற சிபியையே இமைக்காது பார்த்துக்கொண்டிருந்தவளுக்கு.. அவன் சென்றதும் அவ்விடமே இருட்டாய்.. வெற்று சூன்யமாய் தோன்றியது!

# 6

''**மி**ஸ்.. எங்கே போனீங்க..? ஏன் இரண்டு நாளா வரவில்லை?

நீங்க இல்லாமல் போர் மிஸ்!

உங்களைப்பார்க்காமல்.. உங்களிடம் பேசாமல் இருக்கவே முடியலை, மிஸ்!

நீங்க லீவு போடாதீங்க மிஸ்! நீங்க லீவு போட்டால் எங்க படிப்பு பாழாகுது மிஸ்!'' என்று மாணவர்கள் அனைவரும் எழுந்து ஒவ்வொருவராய் சொல்ல..

''தமிழ் பீரியட்ல சோஷியல் மிஸ் வந்தாங்க! தமிழ் படிக்க போன எங்களை சோஷியல் சப்ஜக்ட் தான் படிக்க வேண்டும்ன்னு ஸ்டிரிக்டா ஆர்டர் போட்டுவிட்டாங்க! மீறினால் பிரம்பெடுத்து எங்களை விலாசிடுவாங்கன்னு உங்களுக்கே தெரியுமில்லையா..? அதனால் தமிழைப் படிக்காமல் சோஷியல்தான் படித்தோம்!''

வகுப்பு தலைவன் இளங்கோ கூற..

அந்த சோஷியல் மிஸ் மீனாவின் மீது சுறுசுறுவென கோபம் வந்தது!

ஏன் மிஸ் இப்படி அநியாயம் செய்யறீங்க..? தமிழ் பீரியட்ல தமிழ் தானே படிக்கணும்! அதை விட்டு ஏன் உங்க சப்ஜக்டை படிக்க வற்புறுத்தினீங்க? என்று அந்த மீனாவைப் பிடித்து கோபமாய் நான்கு கேள்விகள் கேட்க வேண்டும் என்று தோன்றிய கோபத்தை அடக்கினாள்!

''அடிப்பட்ட நாய்க்குட்டியை தூக்கிக்கொண்டு ஹாஸ்பிட்டலுக்கு போக மக்களிடம் உதவி கேட்டு அதன் உயிரைக் காப்பாற்ற முயற்சி செய்த நான் கிரேட்டா.. இல்ல சரியான நேரத்திற்கு ஹாஸ்பிட்டலுக்கு என்னையும், நாய்க்குட்டியையும் கூட்டிப்போன சிபி சார் கிரேட்டா?

நித்திலா மாணவர்கள் முன்பு இரு கேள்விகளை வைக்க..

''நீங்க தான் மிஸ் கிரேட்!'' மாணவிகள் ஒட்டுமொத்தமாய் கூற..

அடுத்த ஐந்தாவது நிமிடம் போன் வர.,. சிபியின் எண்ணைப் பார்த்த நித்திலாவின் முகம் உடனே பல்பு எரிந்தாற் போல் பிரகாசமானது..

''ஹலோ நித்திலா.. நான் சிபி! என்ன விஷயம் சொல்லுங்க?''

சிபியின் குரல் கேட்டதும்.. இதயத்தில் தானே மகிழ்ச்சி பொங்கியது!

''நல்லாயிருக்கீங்களா, சிபி?''

''ரொம்ப நல்லாயிருக்கேன், நித்திலா? ஸ்கூல் போனீங்களா..?''

ம்..

''ஓய்வுப் பாடவேளையா என்ன?''

''ம்கூம்! பத்தாம் வகுப்பு 'அ' பிரிவுக்கு தமிழ் பாடவேளை!''

''ஸாரிங்க! மாணவர்கள் படிப்பு பாழாகிவிடுமே! நான் அப்புறம் கால் பண்ணவா..''

''சிபி.. போனை வச்சிடாதீங்க! உங்களுக்கு போன் செய்யச் சொன்னதே இந்த வகுப்பு மாணவ, மாணவிகள் தான்!''

''அட! அப்படியா..? எதுக்கு நித்திலா?'' என்று சிபி ஆச்சரியப்பட்டுப் போக..

''சிபி...''

''சொல்லுங்க நித்திலா..?''

''நான் உங்களைப் பார்க்கணும்!'' தவிப்புடன் சொல்ல..

''எனக்கும் உங்களைப்பார்க்கணும்போல இருக்கு நித்திலா!'' ஏக்கத்தோடு மறுமுனையில் பதில் வர..

''எப்போ சந்திக்கலாம்..''

''இப்போன்னால் கூட நான் ரெடி! வண்டியை எடுத்துக்கொண்டு வரட்டுமா..?'' என்று சிபி எதிர்முனையில் கிறக்கமாய் சொல்ல..

''ரெண்டு நாள் லீவுல இருந்து இன்று தான் ஸ்கூலுக்கு வந்திருக்கேன்! மீண்டும் போய் பிரின்சியிடம் லீவு கேட்டு நின்றால் நான் தொலைந்தேன்!''

''அந்தப்பிரின்சியை என்னிடம் காட்டு! நான் தொலைச்சிடறேன்! '' என்று சிபி சிரிக்க,,.

''சாயங்காலம் சந்திக்கலாமா..? ஸ்கூல் வாசல்ல வண்டியோடு நிற்பேன்! வருவீங்களா.. என்னோடு?''

''நான் காத்திருக்கிறேன், சிபி!'' என்றாள் நித்திலா!

பக்கத்து வகுப்பிலிருந்து ஓய்வு அறைக்கு நித்திலாவை அழைத்துப் போக வந்த அக்ஷிதாவிற்கு.. நித்திலாவின் பேச்சு பெரும் கவலையை ஏற்படுத்தியது.,

7

அக்ஷிதாவைக் கண்டதும் செல்போனை அணைத்து விட்டு.. மேஜை மீதிருந்த புத்தகத்தை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள், நித்திலா.

இருவருக்கும் ஓய்வு பாடவேளை என்பதால் ரெஸ்ட் ரூமுக்கு நடந்தனர்.

நித்திலாவின் செயல்கண்டு அக்ஷிதாவினுள் கோபம் பொங்கியது. இந்த மூன்று நாட்களும் நடந்தவைகளையும், சிபியைப் பற்றியும் மறைக்காமல் சொல்லிவிட்டாள் நித்திலா!

''நித்திலா.. போன்ல யாருடி?''

''சிபி சார்டி, அக்ஷி!'' என்று மலர்ச்சியுடன் சொல்ல...

''அவன் எதுக்குடி உனக்கு போன் செய்யறான்?''

''ஏய்.. ஏய்.. மரியாதை! மரியாதை! சிபியை அவன் இவன்னு சொன்னே எனக்கு கெட்ட கோபம் வரும்!'' என்று நொடியில் முகம் சிவந்து கத்தினாள்!

''ஏய்.. எதுக்குடி கத்தறே?''

''அறையாமல் விட்டேனே என்று சந்தோசப்படு!''

''சரி... சரி... மரியாதையா பேசறேன்! நில்!''

நித்திலாவும் அக்ஷிதாவும் நின்ற இடம், பெரிதாய் கிளை பரப்பி மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்த நாகலிங்க மரத்தின் அடியில்!

''பள்ளி வேலை நேரத்தில் சிபி எதுக்குடி போன் செய்தார்?''

''அவர் செய்யலை! நான் தான் போன் செய்தேன்!''

''எதுக்கு?''

''என் வகுப்பு மாணவர்களுக்கு'' என்று அனைத்தையும் சொல்லி முடிக்க..

''எதில் எல்லாம் சந்தேகம் வருது பார், உன் முட்டாள் மாணவர்களுக்கு! நல்ல மாணவர்கள்! நல்ல டீச்சர்! போடி முட்டாளே! எனக்கு ஏதாவது வாயில் வந்துவிடப்போகுது!'' என்று சலித்தவள்...

''கடைசியா நான் காத்திருக்கேன்னு சொன்னியே?''

''மாலை ஸ்கூலுக்கு வரேன்னு சொன்னார்!''

''எதுக்குடி?''

''என்னைப்பார்க்கத்தான்!''

''உன்னைப் பார்க்கணும்னு சொன்னாரா?''

நான் தான் அவரைப்பார்க்கணும்னு முதலில் சொன்னேன்! அவரும் என்னைப்பார்க்க விரும்பறதா பிறகு சொன்னார்!''

''என்னடி நித்திலா இதெல்லாம்? நீ செய்வது சரியாடி?''

''நான் என்ன செய்தேன்?''

''அந்த சிபியோட பழகறது, சரியா?''

''ஏன் தப்பா?'' அழகாய் புருவம் தூக்கி கேட்க...

''உனக்கு ஆண்களைக் கண்டாலே பிடிக்காதேடி!''

''ஆமாம்! இப்பவும் ஆண்கள்ன்னா எனக்கு பிடிக்காதுதான்!''

''அந்த சிபியும் ஒரு ஆண்தானே?''

''சிபியைத்தவிர வேறு எந்த ஆணையும் எனக்கு இன்றைக்கும் என்றைக்குமே பிடிக்காதுதான்!''

''நீ இப்படியெல்லாம் பேசுவேன்னும் மாறிப்போவேன்னு நான் கனவுலகூட நினைக்கலைடி! கஷ்டமா இருக்குடி நித்தி!''

''எதுக்கு நீ கஷ்டப்படணும்?''

''நல்ல பிரமாதமான வேலையில் இல்லை!''

''சாதாரண டூவீலர் மெக்கானிக் தானே, அந்த சிபி!''

''டூவீலர் மெக்கானிக்கா இருக்கறவங்க எல்லாரும் மனுஷங்க, இல்லையா?''

''நான் அந்த அர்த்தத்துல சொல்லலை!''

''பின், எந்த அர்த்தத்துல சொல்றே, அக்ஷிதா? அவங்க எல்லாம் ஒரு பெண்ணை மணந்து மனைவி, குழந்தைங்கள்னு இன்பமா வாழலையா? இல்ல, குறைஞ்ச சம்பளக்காரனுக்கு குடும்பம், குழந்தைன்னு பந்தம் இருக்கக்கூடாதா? அவர் நூறு ரூபா சம்பாதித்து வந்து கொடுத்தாலும்.. அதை வைத்து பாந்தமா குடும்பம் நடத்தற வழிமுறை எனக்கு தெரியும்!''

''உன் படிப்போ எம்.ஏ., பி.எட்., அவர் வெறும் பிளஸ்டூ தான்!''

''நிறைய படிச்சவங்க மட்டும் தான் இந்த உலகத்துல சந்தோசமா வாழறாங்களா? படிச்சவங்க, படிச்சவங்களா பார்த்து திருமணம் செய்து கொண்டால்... படிக்காதவங்களை யார் திருமணம் செய்துக்கிறது?''

''வாதம் செய்யறதுக்கு இதெல்லாம் நல்லாத்தான் இருக்கும், நித்தி! வாழ்க்கைன்னு வரும் போது ரொம்ப கஷ்டமாயிடும்!''

''அதையும் பார்ப்போம்!''

''நித்தி.. பார்த்து, பழகி மூன்று நாட்கள் கூட ஆகலை! உன்னோட இந்த அளவு பழகி, மயக்கி, பசைபோல ஒட்டிக் கொண்டார்! எனக்கென்னவோ அந்த சிபிமேல் சந்தேகம் வருதுடி!''

''என்ன சந்தேகம்?''

''அதுல கைதேர்ந்தவரோ?''

''எதுல?''

''பொம்பளைகளை மயக்குவதி!''

''ஏய்.. ஏய்...''

''பொறுக்கிப்பயலா இருந்துடப்போடறார்!''

''ஜாக்கிரதைடி!''

''ஏய்.. ஏய்... உன் பல்லைப்பேத்துடுவேன்!'' என்றவள் கையை ஓங்கி பின் கட்டுப்படுத்திக்கொண்டாள்!

''என் கோபத்தைக் கிளப்பாதே! என்னை எது வேண்டுமானாலும் பேசு! என் சிபியை எதுவும் சொல்லாதே! தாங்க முடியலை!'' நித்திலா

கத்தினாள்.

''சரி... சரி.. கோபம் வேண்டாம்! அவர் ஏமாற்றுக்காரரா இருந்து உன்னை ஏமாற்றி விடுவாரோ என்ற பயத்தில் தானடி இப்படி பேசறேன்!''

''நீ சிபியை நேரில் பார்த்ததில்லை! பழகினதில்லை! அதான், நீ இப்படி உளறி கொட்டறே! அவர் ரொம்ப நல்லவர், அக்ஷி! குணத்திலே, தங்கம்! பழகறதிலே வைரம்! உதவுறதிலே அந்த கர்ணனின் வாரிசு! அந்த நாய்க்குட்டியோட மருத்துவ செலவுக்கு பணமில்லாமல் முழிச்சப்போ தாமதிக்காமல் ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து நீட்டினவர், என் சிபி!

அவர் எவ்வளவு அழகு தெரியுமா? பேரழகன்! பேராண்மைக்காரன்! ராஜகுமாரன் போல என்ன ஒரு அம்சமான தோரணை! உருவம்! அசாத்தியான உயரம்! முதல் நாள் எனக்கு உதவினபோது தான் சாதாரண மெக்கானிக் போல தெரிஞ்சார்!

நேற்று வீட்டுக்கு வந்தப்போ கறுப்பு பாண்டும், ஆகாய வண்ணச் சட்டையிலும் எவ்வளவு அம்சமா இருந்தார், தெரியுமா... அக்ஷதா? பெரிய நிலப்பரப்பையே கட்டியாளும் இளவரசன் போல என்னை ஒரு களை! ''

நித்திலா ரசித்து சொல்ல..

''நீ இப்போ சொல்றதெல்லாம் தான் எனக்கு பயத்தைக்கொடுக்குது! நீ நல்லவள், நித்தி! உன் அழகு அறிவு கண்டு அந்த ஆள் ஏமாத்தலாம் இல்லையா?''

''ச்சீ.. வாயை கழுவுடி! என் சிபி ஒருநாளும் ஏமாற்றுக்காரரா இருக்கமாட்டார்!''

''நானும் கடவுள் கிட்ட நித்தி ஏமாந்துடக்கூடாதுன்னு வேண்டிக்கிறேன்!''

''ஏமாறமாட்டேன்! சிபியும் என்னை ஏமாற்ற மாட்டார்!''

நித்திலா நம்பிக்கையோடு சொன்னாள்!

''அக்ஷிதா.. நான் அவர்மேல் ஆசையும், நேசமும் கொண்டிருக்கிறேன்! அவர் மனசுல என்னை இருக்குன்னு தெரியலையே! அதுக்குள்ளவே நீ இப்படி அநியாயத்துக்கு பயப்படறியே, அக்ஷி! அக்ஷி... ஏய் சொல்லுடி... சிபியும் என்னை விரும்புவாரா?

''கண்டிப்பா அவருக்கும் உன்மேல் நேசம் இருக்கும்! விருப்பம் இல்லாதவர் உன்னை எதுக்கு சந்திக்க கேட்கணும்!''

''நிஜமாகவா, அக்ஷிதா?'' என்று நித்திலா மலர்ந்தாள்!

''எனக்கு என் தங்கைதான் உயிர்! என் தங்கைக்கு திருமணம் செய்து வைத்து அவளுடைய குடும்பம், குழந்தைன்னு வாழறதைதான் பார்ப்பேன்! நான் என் வாழ்நாள் முழுக்க திருமணமே செய்துக்க போறதில்லைன்னு சொன்னாயே, நித்தி?''

''ஆமாம்! சொன்னேன்தான்! அப்போ சிபியை பார்க்கலே! இப்போ சிபியைப் பார்த்ததும் எனக்கும் ஒரு வாழ்க்கை, கணவன், குடும்பம் வேண்டும்னு தோணுது!''

''நீ பேசியதைப்பார்த்து சாமியாரா போகப்போறீயோன்னு நினைச் சேன்!''

''உன் நினைப்புல கைப்பிடி மண்ணை அள்ளிப்போட்டுட்டேன்! அப்படித்தானே அக்ஷிதா?''

''உங்க குடும்பத்துக்கும், காதலுக்கும் ராசியே இல்லையே, நித்திலா! ''நீ கொஞ்சம் உன்னுள் பூத்த காதலை கொஞ்சம் பரிசீலனைப் பண் ணலாமே! உன் அம்மா... அப்பாவை உயிராக நேசித்தாள்! உறவுகள் வேண்டாம் என்று கேரளாவிலிருந்து நம்பி வந்து ஏமாந்துப்போனாள்! ரெண்டு குழந்தைகளோடு கஷ்டப்பட்டாள்!

அடுத்ததா, உன் தங்கையும், ஒருவனை நல்லவன்னு நினைச்சி, காத லிச்சி.. கடைசியில் அவன் கெட்டவன் என்று தெரியவர அப்போது அவனிடமிருந்து உன் தங்கையை மீட்க எவ்வளவு போராடினே, நித்தி? உன் தாய்க்கு உன் தங்கைக்கு நிறைவேறாமல் போன காதல் உனக்கு வேண்டுமா? பிளீஸ்...''

அக்ஷிதா, சொல்ல..

''சிபி ரொம்ப நல்லவர்டி! நான் ஜெயிப்பேன்! என் காதல் ஜெயிக்கும்! நீ வேணாப்பாரு அவரைக்கட்டிக்கிட்டு எவ்வளவு சந்தோசமா வாழப் போறேன்னு!''

நித்திலாவின் எண்ணம் நிறைவேறுமா?

அக்ஷிதா கவலையுடன் நகர்ந்தாள்.

## 8

**மா**லை 5.30 மணி!

பள்ளி நான்கு மணிக்கே முடிந்துவிடும்! நான்கிலி ருந்து ஐந்தரைவரை பத்து, பன்னிரெண்டாம் வகுப்புக ளுக்கு ஸ்பெஷல் கிளாஸ்!

எல்லாம் முடிந்து நித்திலாவும், அக்ஷிதாவும் வெளியே வந்தனர்.

சிபி வெள்ளை நிற முழுக்கை சட்டையும், ஆகாய நீலநிற பேண்டும் அணிந்து.. கண்களில் கூலிங்கிளாஸ் கண்ணாடி அணிந்து அந்த இளமஞ்சள் நிற பைக்கில் ஒயிலாய் சாய்ந்து மன்மத னைப்போல காட்சியளிக்க..

அதைக்கண்ட நித்திலாவின் உள்ளம் துள்ளியது! அவன் அழகையும், தோற்றத்தையும் கண்களில் நிரப்பிக்கொண்டாள்!

''மாலை வணக்கம், நித்திலா!'' புன்னகையுடன் வணங்கினான்!

''மாலை வணக்கம், சிபி!'' என்று பதிலுக்கு வணங்கினாள்.

''ஏய் அக்ஷிதா.. இவர் தான் நான் சொன்ன சிபி சார்! என்று தோழிக்கு

அறிமுகம் செய்தவள்...

''சிபி.. இவள் என் இனிய தோழி! பெயர் அக்ஷிதா! பள்ளிப்பருவத்திலிருந்து இதுநாள் வரை இணைப்பிரியாத தோழிகள், நாங்கள்!'' என்று நித்திலா கூற...

இருவரும் வணங்கிக்கொண்டனர்.

அக்ஷிதா... முதலில் அவனை ஆச்சரியத்தோடு நோக்கினாள். பின், அவன் உயரம், உடை, உருவம், நிறம், அழகு கண்டு அளவிடும் பார்வையோடு சிபியை நோக்கினாள்!

எவ்வளவு அழகாய் இருக்கிறான்! கம்பீரமாய் இருக்கிறான்! முகத்தில் பணக்காரர் களை தாண்டவமாடுகிறது! இத்தனை அருமையாய் வெள்ளையுடை அணிந்து காட்சியளிக்கிறான்!

நிஜமாகவே இவன் அநாதையாக இருப்பானா? உண்மையாகவே இவன் மெக்கானிக் தானா?

நித்திலாவின் பேரழகு கண்டும்... அவளை எத்தனையோ பேர் காதல் வலையில் சிக்க வைக்க நினைத்தும் அகப்படாத மீனாய் அல்லிராணியாய் வலம் வரும் இவளை மடக்குவதற்காக தன்னை அநாதையென்று கூறியும். தான் ஒரு மெக்கானிக் என்று கூறியும் வேவுமிடுகிறானா?

அக்ஷிதா வைத்த விழி எடுக்காமல் அவனை பார்த்துக் கொண்டு யோசனையோடு நிற்க..

'''அக்ஷிதா மிஸ்.. ஏன் அப்படி பார்க்கறீங்க?'' என்று சிபி கேட்டும்.. அக்ஷிதா பதில் சொல்லாமல் போக..

''ஏய் முன்ன பின்ன நீ ஆண்களையேப் பார்த்ததில்லையா என்ன?'' என்று நித்திலா அருகில் நெருங்கி காதில் கிசுகிசுத்து தோளில் இடிக்க இயல்புக்கு வந்தாள்!

''ஏய் நாகரீகம் கருதி நல்லதா நாலுவார்த்தை பேசுடி! ஏன் இப்படி பார்க்கறே? அவர் தப்பா எடுத்துக்கப்போறார்! பிளீஸ் அக்ஷிதா..'' என்று நித்திலா கெஞ்ச...

''உங்களைச் சந்திச்சதில் ரொம்ப சந்தோசம், சார்! எல்லோரும் வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருந்த போது உதவ வந்த உங்களை நான் ரொம்பவே பாராட்டுகிறேன், சார்!'' என்று கூறி அக்ஷிதா பாராட்ட.. அவள் பாராட்டுதலை சின்ன தலையசைப்புடன் ஏற்றுக்கொண்டான்.

''எங்க நித்திலா ரொம்ப இரக்க குணம் உள்ளவள்! புல், பூண்டு, முதல் விலங்கு, பறவை, மனிதர்கள்ன்னு பாரபட்சம் பார்க்காமல் அதுங்களுக்கு ஒன்று என்றால் உதவுவாள்! அதே போல எங்கள் நித்திலா வீராங்கனையும் கூட! யாருக்கும் அஞ்சமாட்டாள். பள்ளிப்படிப்பை பாதியில் நிறுத்தி திருமணத்துக்கு ஏற்பாடு செய்யும் பெற்றோரை எதிர்ப்பாள்!

அவர்கள் மசியவில்லையென்றால் காவல்நிலையம் கூட செல்ல

தயங்கமாட்டாள்!''

''ஓ.. அப்படியா..? நித்திலா இதுவரை எத்தனைப்பேரை காவல்நிலையத்தில் தள்ளி கம்பி எண்ண வைத்திருக்கிறீர்கள்?'' என்று சிரிப்போடு கேட்க... அந்தச்சிரிப்பின் அழகில் சொக்கித்தான் போனாள்!

''சார் உங்களைப்பார்த்தால் மெக்கானிக் கடையில் வேலை செய்பவர் போல தோன்றவில்லை! நிஜமாகவே நீங்க மெக்கானிக் தானா?''

தன் மனதில் இருந்த கேள்வியை அக்ஷிதா கேட்டு விட அந்தக் கேள்வி சிபியைக்காயப்படுத்திவிடுமோ என்று நித்திலா பதற சிபியோ வெண் பற்கள் ஒளிர சிரித்த பின்...

''மெக்கானிக்னா எப்படி இருக்கணும், அக்ஷிதா? அழுக்கா அசிங்கமா எண்ணெய் பிசுபிசுத்த சட்டையும், கரியைப்பூசிக்கொண்ட முகமுமாக இருக்கணுமா? இருப்பேன்! எங்கே தெரியுமா? மெக்கானிக் ஷாப்பில்! நித்திலா போன் செய்த பிறகு கடை முதலாளியிடம் அரைநாள் விடுப்பு வாங்கிக்கொண்டு வந்து ஒரு மைசூர் சாண்டல் சோப்பை போட்டு தேய்ச்சி தேய்ச்சி குளித்து விட்டு வந்திருக்கிறேன்! எனக்கு விதவிதமா உடுத்திக்கொள்ள ரொம்ப பிடிக்கும்! என் சம்பளப் பணத்தில் பாதியை உடைக்காக செலவிடுவேன்!''

''இந்த வண்டி? புத்தம் புதுசா இருக்கே? உங்களுதா?''

''ம்கூம்! மெக்கானிக் ஷாப்புக்கு சர்வீசுக்கு வந்த வண்டி! இந்தவேலையில் இது ஒரு சவுக்கியம் ஒவ்வொரு நாளும் விதவிதமான பைக்குகளையும், காரையும் ஓட்டிப்பார்க்கிற வாய்ப்பு கிடைக்குது!''

''எங்கே வேலைப்பார்க்கிறீங்க?''

''இங்கே தான் சஞ்சிதா மெக்கானிக் ஷாப்புல!''

நகரிலேயே மிகப்பெரிய மெக்கானிக் ஷாப்பின் பெயரைச் சொல்ல.. அக்ஷிதாவிற்கு கொஞ்சம் சமாதானமானது!

ஆனால், நித்திலாதான் தவித்துப்போனாள். அதன் வெளிப்பாடாய்...

''ஏய் அக்ஷி.. என்னடி இப்படி கேள்வி மேல் கேள்வியா கேட்டு அவரை துன்புறுத்தறே! சிபி.. அக்ஷிதா இயல்பிலே நல்லவள்! ஆனால் ஏன் இப்படி உங்களிடம் கேள்வி மேல் கேள்வியா கேட்கறாள்ன்னு தெரியலை! அதனால், நீங்க இவளை தப்பா எடுத்துக்காதீங்க, சிபி!'' என்று கெஞ்சலோடு நித்திலா சொல்ல..

''இதுல தப்பா எடுத்துக்க என்ன இருக்கு நித்திலா! அவங்க சந்தேகத்தைக்கேட்டு தெரிஞ்சிகிறாங்க! அவ்வளவுதான்!'' மிக இயல்பாய் சிபி சொல்ல... நித்திலா நிம்மதியானாள்!

''நான் கிளம்பறேன், அக்ஷி...'' என்று நித்திலா சொல்ல... அக்ஷிதா தலையாட்டினாள்!

சிபியும் விடை பெற்று பைக்கை ஸ்டார்ட் செய்ய.. நித்திலா ஏறி

அமர்ந்தாள்.

பைக் வேகமெடுத்து ஓடியது!

அவனோடு நெருங்கி அமர்ந்ததில் ஏற்பட்ட உடல் ஸ்பரிசத்தால் மேனியெங்கும் சுகமான மின்சார அதிர்வு நிகழ்ந்தது!

மாலை தென்றலின் இதமான வருடலும்... கம்பீரமான ஆண்மகனின் மேலிருந்து வீசும் மயக்கும் ஆண்வாசமும் அவனின் ஆண்மையால் கிடைத்த சுகமான கதகதப்பும் அவளை, சிபியிடம், மேலும் உருகி கரைய வைத்தது!

''வீட்டுக்குத்தானே கூட்டிப்போறீங்க? பரிமளம் பாட்டியிடம் குட்டியை விட்டுவிட்டு வந்திருக்கேன்! அது அவங்களை என்ன பாடுபடுத்துதோ என்று உள்ளுக்குள் சின்னதா பயம் இருக்கு, சிபி!''

''நேரே வீட்டுக்குத்தான் போகணுமா?''

''சரி எங்கே போகலாம்?''

''பீச்சுக்குப்போகலாமா?''

சரி! அவன் பெரிய ஹோட்டலின் முன்பு பைக்கை நிறுத்தி...

''உங்களைப்பார்த்தால் களைச்சி தெரியறீங்க! அதனால் லைட்டா டிபன் சாப்பிட்டு விட்டுப்போகலாம்! இறங்குங்க!''

''இது ஸ்டார் ஓட்டல்! சாதாரண ஓட்டலுக்கு போகலாமே!''

''முதல் முதலா உங்களோட வெளியே வரேன்! தினமும் இதுபோல இடத்துக்கு வந்து செலவு செய்யப்போறதில்லை! அதனால், இன்று ஒரு நாள் செலவு செய்வதால் ஒன்றும் குறைந்து விடாது, நித்திலா!'' என்றதும் அவள் சமாதானமாக அவன் வண்டியை பார்க்கிங்கில் விட்டுவிட்டு வர இணைந்து நடந்தனர்.

''பைக்குல இதற்கு முன்பு பயணம் செய்து இருக்கீங்களா?''

''இன்று இரண்டாவது பைக் பயணம்!''

''அப்படியானால் குட்டி அடிப்பட்ட அன்று என்னோடு வந்ததுதான் முதல் பயணமா?'' என்று ஆச்சரியத்துடன் கேட்க...

''என்னோட முதல் ஆண் நண்பர் நீங்கதான்! என்னோட முதல் ஆணின் அண்மை, ஸ்பரிசம் இதுதான், சிபி! எனக்கு ஆண்களையே பிடிக்காது! அப்பாவுக்கு அடுத்தது நான் அறிந்த ஆண் நீங்க தான்! நான் வாழ்ந்தது அம்மா, தங்கையோடு! அடுத்ததா படித்ததெல்லாம் பெண்கள், பள்ளி, கல்லூரி!''

''அட.. நான் அதிர்ஷ்டகாரன்தான்! யாருக்கும் கிடைக்காத அபூர்வ வாய்ப்பு எனக்கு கிடைச்சிருக்கே!'' என்றான், சின்ன சிரிப்புடன்.

கை கழுவி திரும்பும் போது தரையில் ஈரம் இருந்து வழுக்கி விழப்போன நித்திலாவை சட்டென்று தூக்கி நிறுத்தி விழாமல் இழுத்து இறுக்கிக்கொண்டான், சிபிசக்ரவர்த்தி!

சிபியின் பரந்த மார்பில் தஞ்சமான நித்திலா இந்தப்பூ உலகத்தையே

மறந்து போனாள்!

''பார்த்து மெல்ல நடக்கக்கூடாதா, நித்தி? நான் பதறிட்டேம்மா!''

சிபிதான் அவள் காதருகே ரகசியம் போல கிசுகிசுக்க.. தன்னை உணர்ந்து அவசரமாய் அவனிடமிருந்து விடுபட்டாள்!

ச்சே. வெட்கம் கெட்ட மனமே... என்ன தான் நீ அவன் மேல் காதல் கொண்டு இருந்தாலும் இப்படியா அவனின் அணைப்பில் தன்னை மறந்து போவாய்!

அவள் தன் மனதிற்கு புத்தி புகட்டினாள்!

இருவரும் தனியிடம் தேடி அமர்ந்ததும்...

''வாங்க சார்! நல்லா இருக்கீங்களா..?''

என்று புன்னகைத்த வெயிட்டரிடம் ஆர்டர் கொடுத்து விட்டு நித்திலாவைப்பார்க்க...

''அடிக்கடி இங்கே வருவீங்களா, சிபி..? வெயிட்டர் நலம் விசாரிக்கிறான்.''

''எப்போதாவது பிரண்ட்ஸ்களோடு வருவேன்! கொஞ்சம் தாராளமாய் டிப்ஸ் கொடுப்பேன்! அதனால் ஞாபகம் வைத்து அக்கறையாய் கேட்கிறான்! இந்த வாங்க, போங்களை விட்டு விடவா? அந்நியமா இருக்கு!'' என்றதும்..

ம்.. ஓ.கே.! என்று அவள் இதழ் சுழித்து சிரிப்பொன்றை உதிர்க்க அதையே உற்றுநோக்கியவன்..

''நித்திலா... நீ சிரிக்கும் போது ரொம்ப அழகா இருக்கு! அப்படியே உள்ளத்தை கொள்ளை கொள்ளுது!''

அவன் பாராட்ட... நித்திலா சொக்கினாள்!

கடற்கரைக்கு சென்றார்கள்!

மணலில் கால் புதைய நடந்தார்கள்!

பின் தனியிடம் தேடி அமர்ந்து எதிரும், புதிருமாய் அமர்ந்து சமூகம், அரசியல் என்று பேசினர்.

''உங்க கூட இருக்கும் போது நேரம் போவதே தெரியலை, சிபி!''

''எனக்கும் தான், நித்திலா!''

''உங்க கூட பேசுவது மனசுக்கு இதமா இருக்கு! உங்க அண்மையில் இருக்கும் போது பாதுகாப்பா இருக்கு, சிபி!''

''நிஜம் சொல்றியா, நித்தி?''

''என் தாயோட அணைப்பில், மடியில் படுத்து சுகமாய் உறங்குவது போல ஓர் உன்னத உணர்வு ஏற்படுது! உங்க உருவத்தில் என் தாயை காண்கிறேன், சிபி!''

சொன்ன நித்திலா கண்கள் கலங்க..

''ஒரு தாய் தன் குழந்தையின் கண்களில் கண்ணீர் வர விடமாட்டாள்! அதனால், உன் கண்களில் என்றுமே கண்ணீர் வர அனுமதிக்க

மாட்டேன், நித்திம்மா!''

என்றவன் பேன்ட் பாக்கெட்டிலிருந்த கர்ச்சீப்பை எடுத்து.. அவள் கண்களில் வழிந்த கண்ணீரைத்துடைத்தான்!

சிபி, இனி காலத்துக்கும் உடன் இருந்து தாயாய் தாங்கிக்கொள்வான் என்று நம்பினாள் நித்திலா!

சிபி.. அவளை தாயாய் தாங்கி கொள்வானா?

## 9

**வீ**ட்டின் முன்பு பைக்கை நிறுத்த நித்திலா மனசே இல்லாமல் அவன் தோளிலிருந்து கையை எடுத்து மெல்ல இறங்கினாள்!

''சிபி வீட்டுக்குள்ள வாங்க! அடிக்கடி இருமனீங்க! அதைக் கவனிச்சேன்! லேசா சளியும், இருமலும் இருக்கும் போல!''

''ஆமாம், நித்திலா! மார்கழி மாசத்து பனி ஒத்துக்கலை! மொட்டை மாடியில் வாசம் செய்வதால் நல்ல ஊதல் காற்று! போதாதற்கு அதிகாலையில் எழுந்து உடற்பயிற்சி, ஓட்டம்ன்னு செய்து பழகிப்போச்சு! மாற்றிக்க முடியலை! அதனால் வந்த வினைதான் இதெல்லாம்! நாளைக்கு டாக்டரிடம் போகணும், நித்திலா!''

''நைட் எப்படி தூங்குவீங்க, சிபி? வீட்டுல காப் சிரப் இருக்கா?''

ம்கூம்! என்று உதடுபிதுக்கினான்!

''பசும்பாலில் பனங்கற்கண்டு போட்டு காய்ச்சித்தரேன்! இருமல் கொஞ்சம் கட்டுப்படும்!பிளீஸ் பிளீஸ் வாங்க!''

நித்திலாவின் அக்கறையில் நெகிழ்ந்த சிபி மறுக்க முடியாமல் உள்ளே சென்றான்.

நொடியில் பாலை, பனங்கற்கண்டோடு சுண்டக்காய்ச்சி ஆற்றிக் கொடுத்தாள்!

அந்தப்பாலின் சுவையும், நறுமணமும் அபாரமாய் இருக்க. ஒரு வித ரசிப்போடு குடித்து முடித்தவன்.

''பாலின் சுவை பிரமாதம், நித்திலா! தேங்க்ஸ்! நைட்டெல்லாம் இருமலில் உறங்கமாட்டேன்னு எனக்காக கவலைப்பட்டதுக்கும் மெனி தேங்க்ஸ்! உன்னைக்கண்ட நாள் முதல் புதுசா பிறந்த மாதிரி இருக்கு! இந்த மூன்று நாட்களும் அர்த்தமுள்ளதாய் கழியறது போல இருக்கு! என் வாழ்க்கையை சுவாரசியமாக்க கடவுள் கொடுத்த தோழமைதான் உன் நட்பு! மனசு நிறைவா இருக்கு. நித்திலா! மீண்டும் சந்திப்போம்! பை நித்திம்மா!''

அவன் கையாட்டி விடை பெற்று நடக்க... நித்திலாவும் பின்னாடியே ஓடிவந்தாள்!

''ரொம்ப நன்றி ஆயா!'' என்று நாய்க்குட்டியை வாங்கி ஆசையாய்

அணைத்துக் கொண்டாள்.

''ரொம்ப தொல்லை கொடுத்ததா, ஆயா?''

''இல்லை, கண்ணு! சரியான நேரத்துக்கு பாலும், மருந்தும் கொடுக்க குடிச்சிட்டு அதுபாட்டுக்கு விளையாடி தூங்கிடுச்சு கஷ்டம் கொடுக்கலே நித்திலா கண்ணு!''

''இது ரொம்ப சமத்து ஆயா!''

''ஆமாம், நித்திலா! சரி.. யாரோ தம்பி வந்துட்டு போகுதே, அது யாரு?''

''நான் சொல்லலே, சிபி சார்ன்னு அது இவர் தான் ஆயா!''

''நித்திலா கண்ணு சில சமயம் உதவுறவங்களால பின்னாடி பெரிய உபத்திரமும் வந்துடும், கண்ணு!''

''சிபி ரொம்ப நல்லவர், ஆயா! அவருக்குன்னு யாருமே இல்லையாம், ஆயா! அவரும் எங்களைப்போல அநாதை ஆயா! அநாதைக்கு அநாதைதானே துணை!''

''ஜாக்கிரதையா பழகு தாயீ, இந்த காலத்துல யார் நல்லவங்க, யார் கெட்டவங்கன்னு கண்டுபிடிக்கிறது கஷ்டம்! நல்லவங்கன்னு நினைக்கறவங்க கெட்டவங்களா இருப்பாங்க! கெட்டவங்கன்னு நினைக்கறவங்க நல்லவங்களா இருப்பாங்க!

ஆண் பிள்ளைகள் இப்போ எல்லாம் நம்பும்படியா நடந்துக்க மாட்டேங்கிறாங்க!

நாட்டுல குற்றம், பெண்களை ஏமாற்றுதல், கொலை, கொள்ளைன்னு மலிஞ்சிகிடக்குது, தாயீ! முன்னே பின்னே அறியாதவங்க கிட்ட ஜாக்கிரதையா பழகணும், நித்திலா கண்ணு! அந்தத்தம்பியோட நீ வண்டியில வந்து இறங்கினதைப் பார்த்ததும் பகீர்ன்னு இருந்தது!

வயசு பொண்ணு தனியா இருந்தாலும் உன்னை நீ இதுநாள் வரையும் எந்த ஆண்களையும் நெருங்க விடாமல் உன்னைக்காப்பாற்றிக்கிட்டே! அப்படிப்பட்ட உனக்கு நான் புத்தி சொல்லணும்னு அவசியமில்லை!

சேலைமேல முள்பட்டாலும்... முள்மேல சேலை பட்டாலும் சேதாரம் சேலைக்குதான்!

முள்ளுக்கு எந்த பாதிப்பும் இல்லை.

பெண்களின் நிலை சேலையைப்போல கிழிஞ்சி, கந்தலாயிடுவோம்! ஆண்கள் முள்போல நிமிர்ந்து இன்னும் கம்பீரமாகி அடுத்த பெண்ணை ஏமாற்ற போயிடுவான்! உனக்கு சொல்லத்தேவையில்லை! நீ அறிவுள்ள பொண்ணு! தன்யாவுக்கு நீ தமக்கையா வாழலை! ஒரு தாயா வாழறே! அதை மறந்துடாத, கண்ணு! உனக்குன்னு நிறைய பொறுப்பும், கடமையும் இருக்கு! அதுக்கெல்லாம் நீ மனசை திடமா வச்சிக்கணும்! மனசு நைந்துபோனால் கடமையை செய்ய முடியாமல் தடுமாற நேரிடும்! போய் சாப்பிட்டு விட்டு படு, தாயீ! நான் சொன்னதையும் கொஞ்சம் அசைபோட்டு பாரு! நான் வரேன், கண்ணு!''

பரிமளம் ஆயா புத்தி புகட்டி விட்டு கிளம்பி விட்டாள்.

குட்டி நாயின் வயிற்றுக்கு பாலை வார்த்து விட்டு வெறும் வயிற்றோடு படுக்கைக்குப்போனாள்!

மூன்று நாட்களாய் மறந்திருந்த தங்கையை பரிமளம் ஆயா நினைவு படுத்த பதறித்தான் போனாள் நித்திலா!

தினம் தினம் காலை, இரவு என போன் செய்த நித்திலா சிபியின் நினைவாலும், குட்டிநாயின் வரவாலும் மறந்துபோனது உண்மை தான்!

தன்யாவுக்கு போன் செய்தாள்!

''ஹலோ தன்யா... ஸாரி ஸாரிம்மா!''

''தன்யா எப்படி பா இருக்கே? நல்லா படிக்கறியாடா?'' என்று பாசத்துடன் கேட்க.. எதிர்முனையில் தன்யா மவுனமாய் இருக்க..

''தன்யா... பிளீஸ்.... பிளீஸ்....பேசுடி!''

''என்னை மறந்து போனவள்... என்னை எதுக்கு பேச சொல்லணும்? நான் எப்படி இருந்தால் என்ன? நான் செத்தால் என்ன...? இருந்தால் என்ன...? நீ சந்தோசமா இருக்கே, இல்லையா...?''

''தன்யா ஏன்டி இப்படி பேசறே...? உன்னை நான் மறப்பேனா...?''

''தினமும் போன் செய்பவள்... இந்த மூன்று நாளும் போன் செய்யவில்லையென்றால் மறந்து விட்டாய் தானே...?''

''நீ என் உயிர்டி! உன்னை மறப்பேனா...?''

''என்னை மறக்க வைத்த நிகழ்ச்சி என்ன..? என்னை மறக்க வைத்தது யார்...?''

''அப்படியெல்லாம் யாருமில்லை. தன்யா...?''

''என்னை மறக்கறாப்போல செய்தது சிபி சக்கரவர்த்தி தானே?''

தன்யா இப்படி கேட்க... நித்திலா அதிர்ந்து போனாள்!

''அந்த மன்மதன் அழகுல மயங்கி என்னை மறந்து விட்டாய். இல்லையா..?''

''ஏய்... என்ன ஏதேதோ உளர்ற...?''

''உன் மூன்று நாள் சங்கதியெல்லாம் தெரியும்.

ஏ டூ இசட் வரை அக்ஷிதா அக்கா சொல்லிட்டாங்க!

நீ இனியும் பூசி மெழுக வேண்டாம்! அந்த சிபிராட்சசன் நாய்க்குட்டியை சாக்கா வச்சி வந்து ஒட்டிகிட்டானா...? என்னை வெட்டி விட்டுவிட்டானா...?''

''தன்யா... மரியாதையா பேசுடி! உன்னைவிட வயசுல பெரியவர்! ரொம்ப நல்லவர்!

''உதவி செய்யற சாக்குல வந்து உன்னோட அட்டையா ஒட்டிகிட்டு... உன் மனசை கெடுத்து வச்சிருக்கவன் நல்லவனா...?''

''தன்யா... அவர் நம்மைப்போல அநாதைடி!''

''அழகான உன்னை தன் வலையில விழ வைக்க தன்னை அநா

தைன்னு கூட நாடகம் ஆடலாம். இல்லையா...?''

''நீ அவரை நேரில் பார்த்தால் இப்படி குற்றம் குறை சொல்லமாட்டாய்!''

''நான் ஒருத்தன்கிட்ட காதல்ங்கிற பேர்ல விழுந்து, மீண்டுவர படாதபாடு பட்டது போதாதாக்கா...?''

என்று தன்யா கொஞ்சம் கோபத்தை விட்டு பேச...

''உனக்காகவே வாழணும்ன்னு சாமியார் போல வாழ்ந்த என் மனக்கதவை... தன் நல்ல குணத்தாலும், பேச்சாலும் தட்டி, திறந்து உள்ளே போய் உட்கார்ந்து விட்டார். சிபி! நான் உயிர் வாழணும்ன்னால் எனக்கு நீயும் வேண்டும்! சிபியும் வேண்டும். தன்யா! ஐ லவ் சிபி! ப்ளிஸ் தன்யா... என் மனசை புரிஞ்சிக்கடா! சட்டென்று நான் முதல் முதலா பார்த்த நொடி... பார்த்த கணமே ஆசைப்பட்டது சிபி மேலத்தான்!...

எப்பேர்பட்ட பணக்காரன், படிச்சவன்னு வந்து நின்னு என்னைக் கட்டிக்க கேட்டப்போ.. உனக்காகவே வாழணும்ன்னு அவங்களை மறுத்தவள், நான்! ஆனால் சிபியைப் பார்த்து என் மனம் மயங்கிடிச்சி, தன்யா!...

சிபி.. மனசுல நான் இருக்கேனான்னு தெரியலே, தன்யா! ஆனால் என் மனசு முழுக்க இருப்பது சிபி... சிபி... சிபிதான்! தன்யா.. எனக்கு சிபி வேண்டும். தன்யா! நீ படிச்சி முடிச்சி வந்து எனக்கு நல்ல மாப்பிள்ளையா பார்த்து மணம்முடிச்சி வைப்பேன்னு சொல்லுவியே! எனக்கும் சிபிக்கும் திருமணம் செய்து வை; தன்யா!

தன்யா... அவருக்கு என்னைப்போல நேசம் இருக்கான்னே தெரியாமல் நான் அவரை உயிருக்குயிரா நேசிக்கிறேன்டி!'' என்ற நித்திலா அதற்குமேல் தாங்க முடியாமல் குலுங்கி குலுங்கி அழுதாள்!

நித்தியாவின் அழுகை தன்யாவையும் அழ வைத்துவிட்டது!

முதலில் இயல்புக்கு வந்தது தன்யாதான்!

'' அக்கா.. அக்கா.. அழாதே! உன்னைக் கடந்து போகும் எந்த ஆணும் உன்மேல் ஆசைப்படலேன்னால் அவன் ஆண்பிள்ளையே இல்லை! நீ அப்படிப்பட்ட பேரழகி! சிபி மாமாவும் உன்னைக் காதலிப்பார்! உன்னையே மணந்து கைப்பிடிப்பார்! சிபி மாமா... கூடிய சீக்கிரம் உன்கிட்ட வந்து தன் காதலைச் சொல்லுவார்! அப்படி சொல்லவில்லையென்றால் நீ சொல்லு! காதலில் ஈகோ கூடாது. அக்கா!''

''அவர் என் காதலை ஏற்க மறுத்தால்...?''

நித்திலா சந்தேகமாக கேட்க...

''மறுக்க மாட்டார்! மறுத்தால்... உன் தங்கை நான் வந்து உன் மிதமிஞ்சிய காதலை அவருக்கு எடுத்து சொல்கிறேன்! மச்சினி சொன்னால் எந்த மாமனும் மறுத்தே பேசமாட்டாங்க!

எங்க பவர் அப்படி! தெரியுமாக்கா...?''

தன்யா சொல்லிவிட்டு கலகலவென சிரிக்க... தன்யாவின் சந்தோசம்

நித்திலாவையும் தொற்றிக் கொள்ள... அழகாய் இதழ் சுழித்து சிரித்தாள், நித்திலா!

அவளின் சந்தோசம் நிலைக்குமா?.

## 10

அடுத்த நாள்... மதியம் உணவு இடைவேளையில்... சிபிக்கு போன் செய்தாள், நித்திலா!

''ஹலோ... நித்திலாம்மா... என்ன விஷயம்மா... சாப்பிட்டியாடா...?''

சிபியின் அன்பான பேச்சால் சட்டென்று நெஞ்சம் நெகிழ்ந்நது!

''இனிமேல்தான்!''

''மணி ஒன்றரையாகுதே! இன்னுமா சாப்பிடவில்லை? அக்ஷிதா இதையெல்லாம் கவனிக்க மாட்டாங்களா?

சாப்பிடத்தான் சொன்னாள்! சாப்பிடல பிடிக்கலங்க, சிபி!''

''தனியே சமைத்து, சாப்பிட்டுன்னு ரொம்ப கஷ்டமா இருக்குங்க, சிபி!''

'' நீ ஏன் தனியே சமைத்து சாப்பிட்டு கஷ்டப்படறே..? துணைக்கு என்னையும் கூட்டிக்கோயேன், நித்திலா ! மூன்று வேளை ஓசியில் ச ாப்பாடு கிடைத்தால்.. மறுக்கும் முட்டாள் நானில்லைம்மா!'' என்று கூறி சிபி உறக்க சிரித்தான்.

'சிபி... என்மேல், ஆசையில்லாமல்லா இப்படியெல்லாம் பேசுவார்...?'

'என்னை துணைக்கு கூட்டிகொள் என்றால் என்ன அர்த்தம்..?'

' அவர் மனதிலும் என்மேல் விருப்பமும், நேசமும் உள்ளது என்று தானே அர்த்தம்!'

''ஹலோ... என்ன பேச்சையே காணோம்...? எங்கடா இந்த கடன்கா ரன் ஓசியில சாப்பிட வந்துடுவானோன்னு பயப்படறீயா, நித்திலா...?'' அவன் அப்படி கேட்க...

''ஐய்யோ... உங்களைப் போய் அப்படி நினைப்பேனா...? நீங்க எப்போ வருவீங்க? சமைச்சி போடலாம்னு காத்துட்டு இருக்கேங்க. சிபி! இனி இதுபோலெல்லாம் பேசி என் மனசை கஷ்டப்படுத்தாதீங்க, சிபி!'' என்று கடுமையாய் கூற...

''ஓ.கோ...ஓ.கேம்மா! என்ன விஷயமா போன் செய்தே?''

'' நம்ம மகாராஜாவை நைட் ஆஸ்பிட்டலுக்கு தூக்கிப்போகணும்! வரமுடியுமா...? இல்ல வேலையிருக்கா...?''

''ம்... வேலை யிருக்குதான்! சரி.. அதை நான் ஒத்தி வச்சிட்டு வரேன்! ஷார்ப்பா எட்டு மணிக்கு வரட்டுமா, நித்திலா?''

''ம்!''

சிபி இரவு எட்டு மணிக்கு வந்தான்! நித்திலாவையும், குட்டி

நாயையும் ஏற்றிக்கொண்டு டூவீலரில் ஆஸ்பத்திரியை நோக்கிப் போனான்!

சாம்பல் நிற ஜீன்ஸ்சும், இளம் ஆரஞ்சு வர்ண டீ சர்ட்டும்... அதற்கு மேல் குளிருக்காய் கறுப்பு நிற ஜெர்க்கினும் அணிந்திருந்தான்!

இடது கையால் மடியில் இருந்த நாய்க்குட்டியை இறுக்கிக் கொண்டு... வலது கையால் அவன் இடுப்பை உரிமையோடு அணைத்துக் கொண்டவளின் மேனியில் குளிர்ச்சியான பனிக்காற்று வந்து தீண்டி குளிரச்செய்ய... வழுவழுப்பான ஜெர்க்கின் அணிந்த சிபியின் பரந்த முதுகில் காற்றுக்குப் பயந்து தலைசாய்த்துக் கொண்டாள். நித்திலா!

அவன் பரந்த முதுகில் சாய்ந்து கொண்டது இதமாய் இருக்க... கண் மூடி அந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டே பயணித்தாள்!

'' என்ன நித்திலா குளிருதா...?'' அவன் கேட்க... ''ம்...!'' என்றாள் மெதுவான குரலில்,

''மார்கழி பனியும்... கடற்காற்றும் கை கோர்த்து.. இப்படி மனிதர்களை வாட்டி வதைக்குது, நித்திலா! பனி உனக்கு ஒத்துக்காமல் போகப்போகுது! ஜெர்கினை கழற்றித்தரேன் போட்டுகிறீயாம்மா?''

''ஐய்யோ... அதெல்லாம் வேண்டாம்!''நித்திலா வெட்கப்பட்டாள்!

ஆஸ்பத்திரியில் நாய்க்குட்டியின் காயத்தையும், கட்டையும் பிரித்துப் பார்த்த அனிமல் டாக்டர்...

''ஆஹா... நித்திலா... இந்த குறைந்த நாளில் நாய்க்குட்டி இவ்வளவு குணமாகும்ன்னு நினைச்சிக்கூட பார்க்கலேம்மா! தெருவுல திரிஞ்ச நாய்க்குட்டிக்கு இந்த அளவு வைத்தியம் பார்த்து, மருந்து மாத்திரைக் கொடுத்தது, குணமாக்கி, இதுக்கு நல்ல பாதுகாப்பும் கொடுத்து வச்சிருக்கியேம்மா! ரியலி யூ ஆர் கிரேட்ம்மா!'' என்று பாராட்டியவர் சிபியை பார்த்து சொன்னார்!

''இப்படிப்பட்ட பெண் காதலியா கிடைக்க போன ஜென்மத்தில் நீங்க புண்ணியம் செய்திருக்கணும்.சார்! யுவர் செலக்‌ஷன் வெரி பெட்டர்!''

அவர் அப்படி சொல்ல...

சிபியை விழுங்கி விடுவது போல நித்திலா பாக்க... அதற்கு கொஞ்சமும் குறையாமல்... சிபியும் மன்மதப் பார்வையை பதிலுக்கு வீசி... ஒருவரை ஒருவர் விழிகளால் விழுங்கிக் கொண்டனர்!

அதன் பிறகு வீட்டின் முன்பு சிபி வண்டியை நிறுத்த... ஒருவித மயக்க நிலையிலேயே இறங்கி நித்திலா... டாக்டரின் வார்த்தை, சிபியை ஏதாவது வருத்தப்பட வைத்திருக்குமோ என்று தோன்றவும்...

'' என்னை உங்க காதலின்னு டாக்டர் தப்பா புரிஞ்சிட்டு பேசியது.. உங்களை வருத்தப்பட வைத்தால்... அதுக்காக நான் மன்னிப்பை வேண்டுகிறேன். சிபி!... நித்திலா மன்னிப்பைக் கோரவும்...

''அதுக்கென்ன? நான் வருந்தவில்லை! நான் வரேன். நித்திலா! பை!'' என்று வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பியவனையே சோகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள், நித்திலா,

'என்மீது காதல் இருந்திருந்தால் அதில் என்ன தவறு? வருத்தப்பட எதுவுமே இல்லை! நானும் உன்னைக் காதலிக்கிறேன். நித்திலா! நீ என் காதலியா கிடைக்க கொடுத்து வைத்திருக்கணும் என்று சொல்லிச் சென்றிருப்பாரில்லையா?

இப்படி 'வருத்தம் இல்லை' என்று கூறி சாதாரணமாய் சென்றார் என்றால் அவர் என்னை நேசிக்க வில்லை. இந்தக் காதல் என்னுள் மட்டும்தான் விதைக்கப்பட்டு, மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருக் கிறது!

சிபிக்கு துளி கூட என்மீது நாட்டமில்லை!

இப்படி வந்து உதவுவதும்...

இப்படி வந்து அன்பாய் பேசுவதும்...

இப்படி வந்து அக்கறைக் காட்டுவதும்...

நானும் அவரைப்போல அநாதை என்பதால் தானா...?

அப்போ என் நேசம் ஒருதலைக் காதல்தானா... இப்படி என்னுள் முளைத்த கைக்கிளைக் காதலால் என்ன பயன்?'

இப்படி சாத்தானாய் உள்ளே புகுந்து என்னை வேரோடு சாய்த்து விட்டதே!'

'என்னால் சிபி இல்லாமல் வாழ முடியாது!'

'கடவுளே... நான் சிபியில்லாமல் உயிர்வாழ மாட்டேன்! எனக்கு சிபியை காதலனாகவும், கணவனாகவும் கொடுத்துவிடு! ப்ளீஸ்...'

நாய்க்குட்டியின் வயிற்றுக்கு மட்டும் உணவளித்துவிட்டு... கண்ட தையெல்லாம் எண்ணி, கத்தியவாறே கட்டிலில் விழுந்தவள்... நீண்ட நேரம் அழுது கொண்டே இருந்தாள்! தெரியாது! எப்போது உறங்கி னாள் என்று அவளுக்கே தெரியாது!

## 11

புலர்ந்தும் புலராத அந்தக் காலை வேளையில் பூமித்தாய் பிரசவ வலியை அனுபவித்துக் கொண்டிருந் தாள்! கொஞ்ச நேரத்தில் பூமித்தாயின் கருவறையிலி ருந்து 'கொழுக் மொழுக்' குழந்தையாய் வெளிவந்து... பிரகாசத்துடனும்... துள்ளலுடனும்... துடிப்புடனும்... கிழக்கு வானில்.. தளிர்நடைப் பயின்றுக் கொண்டிருந்த அழகான இளஞ்சூரியன்!

இன்னும் விழிக்கவில்லை!

கனவில் சிபி வந்து கன்னத்தில் அழுந்த முத்தமிட்டானா...? அல் லது கட்டி நொறுங்க அணைத்துக் கொண்டானா...? என்று தெரி யவில்லை, அவள் இதழ்களில் அழகிய புன்னகை ஒன்று மலர்ந்து

மணம்வீசி கொண்டிருந்தது!

அந்த அழகு முகத்தில் மையல் கொண்ட இளங்கதிரவன்... மூடியி ருந்த ஜன்னல் வழியே அத்துமீறி உள்ளே நுழைந்து.. அவளின் ஆப் பிள் கன்னத்தை வருடி சில்மிஷம் செய்ய... நித்திலாவுக்கு விழிப்பு வந்தது!

நேற்றைய இரவு அலட்சியமாய் சொல்லிவிட்டு சென்ற சிபியின் முகம் நினைவுக்கு வந்ததும்... கண்கள் பொத்துக்கொண்டு கண்ணீர் வழிந்தது!

ஞாயிற்றுக் கிழமையே என்றாலும் நேரத்தில் எழுந்து... வாசல் தெளித்து... கோலமிட்டு... முன்புறமிருந்த சிறிய மலர், காய்கறி, கீரை தோட்டத்திற்கு மோட்டாரைப் போட்டு நீர் பாய்ச்சி... களை எடுத்து... பின் காலை உணவை சமைத்து சாப்பிட்டு... திருத்த வேண்டிய டெஸ்ட் பேப்பர்களை திருத்தி என்று நாள் முழுக்க சுறுசுறுப்பாக இருப்பவள், நித்திலா!

அப்படிப்பட்ட நித்திலா மனசுக்குள் எழுந்த காதலால் கலங்கி, கண் ணீர் விட்டுக் கொண்டு எட்டுமணியாகியும் படுக்கையிலிருந்து எழா மல் இருந்தாள்!

அறையின் மூலையில் நாய்க்குட்டியும் நன்கு உறங்கிக் கொண்டிருந் தது!

போன் ஒலிக்க மலர்ந்தாள்! சிபி தான் போன் செய்தான்!

''ஹலோ... ஞாயிற்றுக் கிழமை என்பதால் குட்டி மகாராஜாவும்... பெரிய நித்திலா மகாராணியும் தூங்கி எழலையா என்ன...?''

அவ்வளவுதான், அவன் குரல் கேட்டதும் சந்தோசத்தில் உளறி னாள்!

'' இ... இல்லை... ஆ... ஆமாம்!''

''ஆமாவா... இல்லையா...?'' என்ற சிரிப்புடன் சிபி வினவ...

'' ஆமாம்!'' என்று முனகலோடு ஒத்துக்கொண்டவள்... '' எங்கே இருந்து பேசறீங்க, சிபி...?''

''அப்படியே ஜன்னலைத் திறந்து எட்டிப்பார்த்தால்... பூட்டிய கேட் டுக்கு வெளியே நான் தெரிவேன்!''

''ஐய்யோ... வீட்டுக்கு முன்னாடியா...? இதோ வரேன்...!'' என்று துள்ளிக் கொண்டு ஓடினாள்!

கேட்டின் பூட்டை சாவி போட்டு திறந்தவள்...

''குட் மார்னிங், சிபி!'' என்று வணங்கியவளின் முக மாற்றத்தை கண்களால் நோக்கிக் கொண்டே...

''ஹாப்பி குட்மார்னிங், நித்திலா!'' என்று அவள் பின்னாடியே வந் தான்.

''உட்காருங்க, சிபி! ஒரு நிமிஷத்தில் முகம் கழுவிட்டு வந்துட றேன்!'' என்று ஓடப்போனவளை

''நித்தி, நில்! ஆமா... உன்முகமும், கண்களும் ஏன் வீங்கி உப்பிப் போய் இருக்கு? நைட் பனியில் ஆஸ்பிட்டலுக்கு சென்றது ஒத்துக்கலையா...? என்னம்மா செய்யுது? சுரமா என்ன? ம்...?''என்று கேட்டுக் கொண்டு அருகில் வந்தவன் ...அவள் நெற்றி, கன்னம் என்று பாசமாய் தொட்டுப் பார்க்க...

அவனிடமிருந்து சற்றும் எதிர்பாராமல் கிடைத்த மயிலிறகு தொகையும்... பாசமும் நித்திலாவை என்னென்னவோ செய்தது!

அவனிடமிருந்து இப்படியொரு பாசமான வார்த்தையும், அன்பான தொடுகையும் தினமும் கிடைக்குமென்றால்... நாளெல்லாம் அழுது முகம் வீங்கிப் போக, நித்திலா ரெடி!

''ஏய்... நான் பதறி கேட்டுட்டு இருக்கேன்! நீ பதில் சொல்லாமல் சிரிச்சிட்டு இருந்தால் என்ன அர்த்தம்...?''

என்று சிறு கண்டிப்புடன் கூறியவன்... அடுத்து கழுத்தைத் தொட்டுப் பார்க்க கையைக் கொண்டு போக...

சாதாரணமாய் நெற்றியிலும், கன்னத்திலும் தொட்டதையே நித்திலாவால் தாங்கிக் கொள்ள முடியவில்லை! இதில் கழுத்தில் வேற...?

சட்டென்று பின்புறம் நகர்ந்தவள் ''அதெல்லாம் இல்லை!'' என்றாள்.

''அப்புறம் ஏன் உன்முகம் வீங்கி வாட்டமா இருக்கு?''

''அ..அது... நைட்டெல்லாம் கடுமையான தலைவலி! தாங்கிக்க முடியலை! அதனால் நைட்டெல்லாம் அழுததில்...''

''மாத்திரை போட்டாயா...?''

''போட்டும் கட்டுப்படாததால் அழுதேன்!''

''சரி கிளம்பி ஆஸ்பிட்டலுக்கு போகலாம்!''

அவன் அப்படி சொல்லுவான் என்று எதிர்ப்பார்க்காத நித்திலா... அவனின் அந்த அன்பான வார்த்தையில் அவனிடம் மேலும் கரைந்து காணாமல் போனாள்!

''இப்போ பரவாயில்லை! திரும்ப தலைவலி வந்தால் போகலாம்! இருங்க ஒரு நிமிஷத்துல வந்துடறேன்!'' என்று அங்கிருந்து அகன்றாள்.

நொடியில் தலைகுளித்து... ஆகாயவண்ண 'கிரேப் சில்க்' சேலையைக் கட்டிக்கொண்டு.. மிதமான பவுடர் பூச்சுடன் பளிச்சென்று வந்து நின்றாள்!

''காபி கொண்டு வரட்டுமாங்க, சிபி?'' கேட்டாள்.

''காபி மட்டும் தானா...? நான் காலையில் டிபனும்... மதியம் விருந்தும் சாப்பிடலாம்ன்னு வந்தேன். நீ அழைக்காமல்!'' என்று சிரித்தான்.

மதியம் ஒருமணி வாக்கில் அவளும், அக்ஷிதாவும் கிளம்பி வெளியே ஷாப்பிங், உணவு, சினிமா என்று ஊர் சுற்ற திட்டம் போட்

டிருந்தார்கள்! இன்னும் கொஞ்ச நேரத்தில் அக்ஷிதா வந்து விடுவாள்! அவளோடு ஊர் சுற்றுவது சுகம்தான்! ஆனால் ... மனதிற்கினிய சிபிக்கு தன் கையாலே சமைத்து பரிமாறி பேசி சிரித்து அவனோடு பொழுதை கழிப்பதற்கு ஈடான சுகம் இவ்வுலகத்தில் ஏது?

அதனால், இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட... அவள் என்ன முட்டாளா...?

''என்ன நித்திலா... நான் அழையா விருந்தாளியாக வந்துவிட்டேனா...?''

''ஐய்யோ அதெல்லாம் இல்லை! அக்ஷிதாவும் நானும்...'' என்றவள் பேச்சை நிறுத்தி போனை எடுத்து நம்பரைத் தட்ட அக்ஷிதா எதிர் முனையில்...

''அக்ஷிதா... நம்ம புரோகிராமை அடுத்த ஞாயிறு வச்சிக்கலாமா...?'' என்று பேசிக்கொண்டே பின் கட்டு தோட்டத்திற்கு சென்றாள்.

''ஏன்..?''

''சிபி வந்திருக்கார்டி!''

''எனக்கு இது ஒண்ணும் சரியாப்படலை! காலையிலே எதுக்கு வந்தார்...? அவரை அனுப்பிவிட்டு என்னோடு புறப்படு!'' அக்ஷிதா சீறினாள்.

''ஓட்டல்ல சாப்பிட்டு நாக்கு செத்துப் போய் வந்திருப்பவர்க்கு நான் சமைச்சி விருந்து பரிமாறப் போறன்!''

''விருந்தை உணவோட நிறுத்திக்கோ!'' அக்ஷிதா கோபமாய் சொல்ல...

''அக்ஷிதா ஏய்... ஏய்... '' நித்திலாவிற்கு பயங்கர கோபத்தில் வார்த்தைகள் வரவில்லை!

''உன் உடம்பை விருந்து வச்சிடாதே! அவர் ஏமாற்றுக்காரரா இருந்து கை கழுவிட்டு போயிட்டால் கஷ்டமாயிடும்!''

''ஏய்... ஏய்... நீ டூ மச்சா பேசறே!

உனக்கு பொறாமை! பேரழகனாய்... பேராண்மைக் காரனாய்... பேரன்பு கொண்டவனாய் எனக்கு சிபி கிடைச்சிருக்கறதை உன்னால் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் இப்படி பேசறே?''

''என்னோட தூய்மையான அன்பை சந்தேகப்படாதே! உன்மேல் கள்ளமில்லாத நட்பும், தோழமையும் கொண்டிருக்கிறேன்! நீ அவரோடு தனியா சந்திக்கிறதை, இருப்பதை குறைச்சிக்கணும்! இந்த விருந்தை திருமணத்துக்கு பிறகு வச்சிட்டால் நல்லதுன்னு அறிவுறுத்தறேன்! சிபி, உன் மனசுல நல்லா ஏறி உட்கார்ந்துட்டு உன்னை ஆட்டிப் படைக்கிறார்! நீயும் மோகத்தில் எது சரி? எது தவறு?ன்னு தெரியாமல் அறிவீலியா இருக்கே! முதலில் சீக்கிரம் அவனிடம் காதலைச்சொல்லி, திருமணம் செய்து வாழற வழியைப் பார்! உனக்காக நானும் கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்!'' என்று அக்ஷிதா முடிக்க...

''ஸாரிடி அக்ஷி!'' என்று மன்னிப்பை வேண்டினாள், நித்திலா.

''அடுத்த ஞாயிறு நம்ம புரோகிராமை வச்சிக்கலாம்! உனக்கு எதுவும் வருத்தம் இல்லையே!''

''இல்லை!'' என்று அக்ஷிதா போனை ஆப் செய்தாள்.

''நித்திலா நீ கஷ்டப்பட வேண்டாம். காலை டிபனை ஓட்டலில் வாங்கிவருகிறேன்!'' என்று கிளம்பினான் சிபி.

காலை உணவு முடிந்தது!

''சிபி என்ன சமைக்கட்டும்? உங்களுக்கு எந்தமாதிரி உணவு பிடிக்கும்?'' என்று நித்திலா கேட்க...

''சிக்கன், மட்டன், பிஷ் அத்தனை அசைவ உணவையும் விரும்பி உண்பேன். நித்திலா! மதியம் மட்டன் பிரியாணி, சிக்கன் வறுவல், பிஷ் பிரைன்னு செய்யேன்!'' என்றதும்...

''ரொம்ப நல்லப் பெண்ணா இருக்கீயே!

ஓ.கே! சைவமே சமைச்சிக் கொடு!'' என்றான், சிபி.

நித்திலா தோட்டத்திற்கு போய் முருங்கை, கத்தரி, பொன்னாங் கன்னி கீரை, சிறுகீரை, தக்காளி, கொத்தமல்லி தழை என்று பறித்துக் கொண்டு வந்தாள்!

நித்திலா மறுக்க மறுக்க அவள் எதிரே தரையில் அமர்ந்து கீரையை ஆய்ந்து கொடுத்தான்! பூண்டிற்கு தோல் உரித்து கொடுத்தான்!

அவளோடு சமையற்கட்டுக்கும் வந்துவிட்டான்! அவள் கையில் இருந்த கரண்டியை வாங்கிக் கொண்டு அடுப்பில் இருந்தவைகளைக் கிண்டி கிளறினான்!

நித்திலாவின் முகத்தில் அரும்பிய வியர்வையைக் கண்டவன் ''ஆஹா.. உன் முகத்தில் தான் எத்தனை முத்துக்கள்!'' என்று கவி தையாய் பேசி... அவன் பாண்ட்பாக்கெட்டிலிருந்த கைக்குட்டையை எடுத்து அவள் முகம் பற்றி வியர்வையைத் துடைத்தான்!

அவன் மூச்சுக்காற்றும்... அவள் மூச்சுக்காற்றும் கலந்து நலம் விசா ரித்துக் கொண்டன!

நித்திலா சிபியின் அருகாமையில் தன்னையே மறந்தாள்! அவ னையே விழி விரியப் பார்க்க...

''என்ன நித்திலா...?'' என்று அவன் கேட்க... ''ம்கூம்!'' என்று நாணத்தோடு தலைகுனிந்தாள்.

பொன்னி அரிசியின் வெண்மையான சாதம், முருங்கை சாம்பார், கீரை கூட்டு, சேனைக்கிழங்கு வறுவல், ரசம், அப்பளம், உளுந்து வடை, பாயாசம் என்று எக்கச்சக்கமான உணவு வகைகளை நித்திலா தயாரித்து விட்டாள்!

தோட்டத்திற்கு சென்று பெரிய இளம் குருத்தான தலைவாழை இலையை அறுத்து வந்தாள்!

அவனை சாப்பாட்டு மேஜையில் அமர்த்தி இலைப்போட்டு...

சாதத்தை பரிமாறி, சாம்பார் பொறியல், கூட்டு, அப்பளம், வடை, டம்ளரில் பாயாசம் என்று அடுக்கினாள்.

''நீயும் உட்கார், நித்திலா!''

''ம்கூம்! நீங்க முதல்ல சாப்பிடுங்க!'' சிபி உண்டான்!

''நித்திலாம்மா ரொம்ப பிரமாதம்! உணவின் சுவை அருமை! இவ் வளவு சாப்டா உளுந்து வடையை நான் உண்டதில்லை!''

இலையில் மீண்டும் சாதத்தை வைத்து ரசம் வார்த்தாள்! அந்த மிளகு ரசத்தின் சுவையில் ரசித்து ரசித்து சாப்பிட்டான்! கையில் ஊற்றச்செ ால்லி ரசத்தை உறிஞ்சி உறிஞ்சி குடித்தான்! அவனின் செயல்களால் நித்திலா மனம் குளிர்ந்துப் போ னாள்!

பின், நித்திலாவை அமர்த்தி சிபி நின்றவாறு பிரிமாற... அவளோ ஒரு நாணத்தோடு உண்டு முடித்தான்!

உணவு முடிந்து ஹால் சோபாவில் போய் அமர்ந்தான்! நித்திலா தூரத்தில் கிடந்த நாற்காலியில் அமர்தாள்!

சிபி.அவனையே வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந் தான். பின்...

''நித்தி... நித்திலாம்மா.. இங்கே வா!'' என்று அழைக்க... அருகில் வந்தவனை '' இங்கே உட்கார்!''என்று சோபாவில் தன்னருகில் காட்ட

நித்திலா இதயம் படபடக்க அவன்அருகே அமர்ந்து... சிப்பி இமையை விரித்து மைவிழிக்கண்களால் அவனையே ஆழ்ந்த நோக்க.. அவனோ இன்னும் நெருங்கி அமர்ந்து... அவள் விழிகளில் பார் வையைப் பதிக்க... நித்திலாவின் இதயம் பட்டாம்பூச்சியாய் படபடத் தது!

சட்டென்று அவளது வலதுகையை பற்றினான்!

அவனின் தொடுகை அவளுள் மின்சாரத்தைப் பாய்ச்சியது!

'' இந்தக் கையால் சமைத்த உணவை நான் காலமெல்லாம் உண்ண வேண்டும். நித்திம்மா!''

சிபியின் குரலில் மென்மையும், கிறக்கமும் கலந்து ஊடுருவ... அந்த வார்த்தை அவள் உயிர் வரைச்சென்று தித்திக்க வைத்தது!

மகிழ்ச்சியில் பட்டாம்பூச்சியாய் படபடத்த இமையைக் கொட்டிய நித்திலா,'' சிபி.. நானும் இந்தக் கையால் சமைத்து உங்களுக்கு காலமெல்லாம் பரிமாற வேண்டும்!'' என்று மனதில் உள்ள காதலை மறைக்காமல் வார்த்தைகளால் வெளிப்படுத்தினாள்.

''நித்திம்மா.. உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்குடா!'' சிபி உரு கினான்.

''சிபி... எனக்கும் உங்களை ரொம்ப பிடிச்சிருக்குப்பா!'' நித்திலா காதலோடு சொன்னாள்.

''கண்ணே... ஐ லவ் யூ டா!''

''சிபி ... ஐ லவ் ஷோ மச்!''

''நித்திம்மா... நீ எனக்கே எனக்குன்னு பிறந்த தேவதைடா!'' சிபி. நித்திலாவின் பூ முகத்தை கைகளில் தாங்கி... விழியோடு விழி நோக்கி சொல்ல...

''சிபி... நீங்க எனக்கே எனக்குன்னு பிறந்த மன்மதன்!'' என்று நித்திலா காதலில் கரைய...

''என் கண்ணே... என் நித்திலமே...''

சிபி.தாளமாட்டாமல் நித்திலாவை இழுத்து இறுக்கிக் கொண்டான்.

சிபி கொடுத்த முத்தத்தில் நித்திலாவின் கன்னங்கள் இரண்டும் கன்றிப்போனது!

பின், சிறியதாய் இருந்த சிப்பி இதழில் தன் முத்திரையைப் பதித்தான்!

அந்த முகத்தின் தித்திப்பில் கண்கள் சொக்கி... அவளும் அவனின் இதழ்களைச் சிறைசெய்தாள்! ஆசையாசையாய் அவனைக் கட்டியணைத்துக் கொண்டாள்!

இத்தனை சீக்கிரம் காதல் நிறைவேறும் என்று நினைக்காத நித்திலா... உருகிப் போனாள்!

அவளுக்கெங்கே தெரியப் போகிறது. இந்த காதலால் எத்தனை அவஸ்தைகளை அனுபவிக்கப்போகிறோம் என்று!

## 12

**பி**ன்னர், அதற்கு பிறகு வந்த நாட்கள் சொர்க்கமாய் கழிந்தது!

தினமும் போனில் மணிக்கணக்காய் கொஞ்சிக் கொண்டனர்.

சில நாட்கள் காலை, மாலை பள்ளிக்கு அழைத்துப் போய் திரும்ப கொண்டு வந்து விடுவான்!

தனியே இருக்கும் பெண்ணான நித்திலாவை வேறொரு ஆணாய் இருந்தால்... இந்நேரம் அவள் உணர்ச்சிகளைத் தூண்டி அவள்கற்பை ருசிபார்த்திருப்பான்! அத்துமீறி உரிமை எடுத்ததில்லை!

நேசமான தொடுகை... முத்தம்.. அணைப்பு...

அதோடு சிபி கண்ணியமாய் நகர்ந்து கொள்வான்.

அந்த நேர்மை, நியாயம், கண்ணியம்... அவளை மேலும் மேலும் அவன் காதலுக்கு அடிமையாக வைத்தது!

சிபி அங்கே அடிக்கடி வருவது அக்கம் பக்கத்து மனிதர்களுக்கு தெரிய வர... நித்திலாவை நிறுத்தி புத்திபுகட்டி எச்சரித்தனர்.

''நித்திலா... நீ நல்லப் பெண்! கல்யாணமாகாத நீ இப்படி ஒருத்தனோட சுத்துறதும்... அவன் நினைச்ச நேரம் உன்னைப் பார்க்க வர்றதும் நல்லதில்லை! தாய், தகப்பனோட இருக்கற பெண்களையே

இந்த ஆண் வர்க்கம் காதல்ங்கிற பேர்ல ஏமாத்தி... அவள் கற்பை அனுபவிச்சி கை கழுவி விட்டு போற கலியுக காலம்'' இது ! நீ கொஞ்சம் ஜாக்கிரதையா இரு!''

அன்று பரிமளம் ஆயா நித்திலாவிடம் கேட்டாள்.

''அந்த தம்பியிடம் திருமணம் பத்தி பேசினியா கண்ணு?''

''இன்னும் இல்லை, ஆயா! திருமணத்துக்கு என்ன அவசரம் ஆயா...? தன்யா படிப்பு முடிய இன்னும் ஆறுமாசம் இருக்கே!''

''திருமணம் உனக்கா...? இல்லை, உன் தங்கைக்கா...? அவள் படிப்பு முடியுற போது முடியட்டும்! நீ அந்தத் தம்பியைக் கட்டி குடித்தனம் செய்யற வழியைப் பார்!

அந்த தம்பி மேல் சந்தேகப்பட்டு சொல்லலே! அவர் நல்லவராத் தான் தெரியறார்!''

''நல்லவர்தான், ஆயா! எங்க திருமணத்துக்கு யாரோட குறுக்கீடோ, தடையோ வர வாய்ப்பில்லை!

யாரோட அனுமதியைப் பெறணும்ன்னும் அவசியமில்லை!

ரெண்டு பேரும் பெற்றோர் இல்லாத அநாதை!

தன்யா படிப்பை முடிச்சி வந்ததும்... எங்க திருமணம் நடக்கும்!''

''என் காதுபடவே இந்த தெரு ஜனங்க உன்னைப் பற்றி அவதூறா, அசிங்கமா பேசறாங்க, நித்திலா கண்ணு!

எனக்கு மனசு தாங்கலே, கண்ணு! சீக்கிரம் நீ அந்தத் தம்பியை கட்டிகிட்டால் ஒரு நாய் நாக்கு மேல பல்லைப் போட்டு பேசுமா...?''

''பேசாது தான்! உங்க ஆசையை சீக்கிரமே நிறைவேத்தறேன், ஆயா!'' என்றாள் நித்திலா.

தன்யா தினம் போன் செய்து ''மாமா நல்லா இருக்காரா...? நீ நல்லா இருக்கீயா...? உங்க காதல் நல்லா போயிட்டு இருக்கா....?'' என்று நித்திலாவை பாசமாய் கேட்டுக் கொண்டிருந்தாள்.

அன்று ஒன்றாம் தேதி!

இரவு எட்டுமணி வாக்கில் சிபி வந்தான்!

நிறையபழமும், ஸ்வீட்டும் வாங்கி வந்திருந்தான். ஒரு பெரிய கவரை எடுத்து அவள் கைகளில் திணித்து

''நித்திம்மா... இந்த சேலை பிடிச்சிருக்கா...? பாரேன்! இதை செலக்ட் செய்ய ரொம்ப கஷ்டப்பட்டேன்டா!''

''இன்று சம்பள நாள்! உனக்கு சேலை வாங்கி தர ஆசைப்பட்டேன்! அதான்! பிடிச்சிருக்கா?''

''ரொம்ப பிரமாதம்! பிடிச்சிருக்கு! சேலையோடு உங்களையும் ரொம்ப பிடிச்சிருக்கு!''

சொன்ன நித்திலா அவனை இழுத்து இறுக்கி அவன் நெடு நெடு உயரத்திற்கு எம்.பி... அவன் இதழ்களில் மோகத்தோடு முத்தம் ஒன்று பதித்து விலக...

''ஏய்...'' என்று விலகியவளை இழுத்து இறுக்கிக் கொண்டவன்...

''ஒரு சேலைக்கு ஒரு முத்தம்தானா...?'' அவன் கண்டித்து கேட்க...

''ஏய் நாட்டி...!'' என்று அவள் அவன் நெஞ்சில் குத்த...

''இப்படியெல்லாம் நீ கணக்கு பார்த்து எண்ணித்தான் முத்தமிடு வேன்னு தெரிஞ்சிருந்தால்... வாங்கின சம்பளம் முழுவதுக்கும்... சேலையா வாங்கிட்டு வந்து கொடுத்து.... முத்தம் வாங்கி இருப்பேன்!'' என்று கண்சிமிட்டி அவள் நெற்றியோடு தன் நெற்றியை வலிக்காமல் மோதி சொல்லி அழகாய் சிரிக்க...

''எல்லாத்தையும் சேலையா வாங்கி கொடுத்து விட்டால்... செல வுக்கும், வயிற்றுக்கும் என்ன செய்வீங்களாம்?''

''அதுவும் சரிதான்!'' என்றவன் சட்டைப் பையிலிருந்து கத்தையாய் பணத்தை எடுத்து அவள் கையில் திணித்தான்!

''என் சம்பளம் பணம்!'' என்றான்.

''அதை ஏன் என்கிட்ட கொடுக்கிறீங்க?''

''உன்கிட்ட கொடுக்காமல் வேறு எவளிடமாவது கொடுக்கட் டுமா...?'' என்று சின்ன சிரிப்போடு புருவம் உயர்த்தி கேட்க...

''கொலை... கொலை விழும்!'' என்று கூறி கண்களை உருட்டி மிரட்டினாள்.

''அப்போது சம்பளப்பணத்தை வாங்கிகிட்டு... உன் கையால் என் செலவுக்கு கொஞ்சம் கொடு!''

''நான் இப்போ உங்க காதலி! உங்க கையால் ஒரு தாலியை வாங்கி கிட்டு... உங்க மனைவியான பிறகு உரிமையோடு உங்க சம்பளத்தை வாங்கிக்கிறேன், சிபி!'' என்று நித்திலா கலங்கிய விழிகளோடு சொல்ல...

''ஏய்... நான் உன்னை என்னைக்கு முதல் முதலா பார்த்தேனோ... அன்றிலிருந்து நீ என் பொண்டாட்டிடி!'' என்று நேசமுடன் சிபி கூற...

''சிபி... சிபி... என்ன சொல்றீங்க?'' என்று ஆனந்தக் கண்ணீர் வடிக்க...

''இந்தப் பேரழகு பெட்டகத்தை... சந்தனச்சிலையை... பார்த்த நொடி... பார்த்த நிமிடமே... மானசீகமா தாலிகட்டி என் பொண்டாட் டியாக்கிகிட்டவன், இந்த சிபி! என்று சட்டைக் காலரை தூக்கி விட...

''நீயும் நானும் சந்தித்து நாற்பது நாள் ஆகுது! மகாராஜா பூரண குண மாயிட்டான்! இன்னும் எவ்வளவு நாளைக்கு உன்னோடவே இவனை வச்சிக்கபோற, நித்திலா?'' என்று காலை வந்து முட்டிய நாய்க்குட் டியைப் பார்த்து கேட்க...

''உங்களையும், என்னையும் சேர்த்து வைத்த இவனை என்னோ டவே வச்சிக்கப் போறேன், சிபி! இவன் இல்லேன்னால் நீங்க எனக்கு கிடைச்சிருக்க மாட்டீங்க! அதுக்கு பிரதிபலனா இவனை என்னோ

டவே வச்சிக்கப் போறேன்!'' என்றவள் மயக்கும் பார்வை ஒன்றை அவன் மேல் பாய்ச்சி.. வெட்கத்துடன் தலை குனிந்தாள்!

''உன்கிட்ட எனக்கு ரொம்ப பிடிச்சதே, இந்த இயல்பான நாணம் தான், நித்திம்மா! உன் மூக்கும், முழியும்... உன் மிரளலும் பார்க்க... வேடனைக்கண்டமானின் மருளல் போல இருக்குடா, நித்தி! ஆனால், நான் இந்தப் பெண்மானை வேட்டையாட வந்த வேடனல்ல! தெரிஞ்சி க்கோ!'' என்று உதட்டைக் கடித்து அழகு காட்டி...சிபி அழுத்தத்துடன் சொல்ல...

''நீங்க வேடனல்ல! திருடன்! அதுவும் சின்ன திருடன் இல்லை! பெரிய திருடன்!''

''ஏய்.. நான் திருடனா....? உன்கிட்ட இருந்து அப்படி நான் என்னடி திருடினேன்....?''

''என் இதயம் என்னிடம் இல்லை! அது காணாமல் போயிடிச்சி! அதை திருடினது நீங்கதானே...?

திருடிய என் இதயத்தை திருப்பி கொடுங்க, சிபி?''

நித்திலா அழகாய் உதடு சுழித்து அதிகாரத்துடன் கேட்க..

''நீ தான் திருடி! கள்ளி! என் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்ளி! ஏய்.. நீயும் கொடுத்துடிடி என் இதயத்தை? சுட்டு விரல் நீட்டி சிபியும் கேட்க...

''நான் உங்க இதயத்தையும்... நீங்க என் இதயத்தையும் திருடின திரு டர்கள், நாம் இருவரும்!''

என்ற நித்திலா இதழ் விரித்து சிரிக்க...

''நூறு சதவீதம் சரிடி... என் நித்திலா குட்டி!''

என்றவள் அவளை இழுத்து மூக்கோடு மூக்கு உரசி... அவள் மேனி நோகும் வண்ணம் நொறுங்க அணைத்தான்!

அன்று...

காலை முதல் மாலை வரை சிபிக்கு போன் செய்து ஓய்ந்துப் போனாள்! ரிங் போனது! ஆனால் சிபி எடுக்கவே இல்லை!

கொஞ்ச நேரத்தில் சிபியிடமிருந்து போன் வந்தது!

போனை ஆன் செய்த நித்திலா கத்தி கதறிவிட்டாள்!

''நித்தி... நித்திம்மா... ப்ளீஸ்.... ப்ளீஸ்டாம்மா... அழாதடா செல்லம்!'' என்று சிபி அவளைச் சமாதானப் படுத்தியும் அவளின் அழுகை ஓய்ந்த பாடில்லை!

சிபி எதிர்முனையில் அமைதியாய் அவள் அழுகை ஓயும் வரைக் காத்திருந்தான்!

கொஞ்ச நேரத்தில் அவள் அழுகைக்கட்டுப் பட்டு... திக்கலும் தேம் பலுமாய் பேசினாள்.

''ஏ...ஏன் எ... எனக்கு போன் செ... சிபி?'

''நைட் போனுக்கு சார்ஜ் போட மறந்துட்டேன், நித்தி காலையில்

எழுந்ததும் என் முதலாளி என் வீட்டுக் கதவை தட்டறார்! என்னன்னு கேட்டால் ஆட்டோமொபைல் ஸூக்கும், மெக்கானிக் ஷாப்புக்கும் தேவையான பாகங்கள் வாங்கணும்ன்னு கூட்டிட்டு போயிட்டார்!

''எங்கே?'

''கல்கட்டாவுக்கு!''

''ஐய்யோ... நீங்க கல்கட்டாவுல இருக்கீங்களா..?''

''ம்... மார்னிங் சிக்ஸ் ஓ க்ளாக் ப்ளைட் பிடிச்சி கல்கட்டாவுக்கு போய் பர்சேஸ் பண்ணிட்டு இப்போதான் ஹோட்டலுக்கு திரும்பி னோம்! ஹோட்டல் ரூம்ல காலையில சார்ஜ்ஜை போட்டவன் மறந்து போனை வச்சிட்டு போயிட்டேன்! முதலாளியும் என்னோடு இருந்த தால் பூத்தில் போயும்...உனக்கு போன் செய்ய சங்கடமாக இருந்தது! அதான் போன் செய்யவில்லை! இப்போதான் ரூமுக்கு திரும்பினேன்! என்னை மன்னித்துக் கொள், நித்திம்மா! ப்ளீஸ்...''

சிபி தன் நிலையை விளக்க... நித்திலா சமாதானமாகி...

''சரி... சரி... இப்போ கிளம்பி காலையில் வந்துடுவீங்க இல் லையா...?''

''ம் கூம்! நாலைந்து நாட்கள் ஆகும், நித்திம்மா! கல்கட்டாவிலி ருந்து அடுத்ததா மும்பை, டில்லின்னு போய் பர்சேஸை முடித்து... லோடு ஏத்தி கப்பலிலும், ப்ளைட்டிலும் அனுப்பி விட வேணும்மா! என் நிலைமையை புரிந்து கொள்டா! நான் அவரோட நம்பிக்கைக்கு உரியவன்! இதுக்கு தனியா எக்ஸ்ட்ராவா நிறைய பணம் தருவார்! அது நம்ம திருமணத்துக்கு பயன்படும், நித்திம்மா!''

''ம்கூம்! நீங்க அப்படியெல்லாம் அலைந்து, திரிந்து சம்பாதிக் கணும்ன்னு அவசியமில்லை! நம்ம திருமணத்துக்கு பிறகு இது போல வேலையெல்லாம் செய்யத் தேவையில்லை! நீங்க என்னைப் பிரியாமல்.. என்னோடவே இருந்து ஒரு ஐயாயிரம் ரூபாய் சம்பாதித்து கொண்டு வந்து கொடுத்தால் கூட என்னால் அழகாய், நிறைவாய் குடும்பம் நடத்த முடியும்!''

''சரிடி.. என் செல்லக்குட்டி! இனி இது போல உன்னைப் பிரிந்து செல்ல மாட்டேன்! இந்த ஒரு பிரிவை மட்டும் தாங்கிக் கொள்! இனி காலத்துக்கும் உன்னைப் பிரியாமல் உன்னோடே இருக்கிறேன்! சரியா....? சந்தோசமா.....? நிம்மதியா இந்த மச்சானை நினைத்துக் கொண்டு தூங்கு, நித்திம்மா! கதவை நல்லா பூட்டிக்கோ! உன் தெரு ரவுடி பயல்களுக்கு உன்மேல் வன்மம்! அவனுங்களை நிராகரித்து விட்டு என்னைத் தேர்ந்தெடுத்ததில் பகையோடு இருக்கானுங்க! நான் ஊரில் இல்லேன்னு தெரிந்து எவனாவது கதவைத் தட்டி உன்னிடம் வம்பு செய்யப் போறான்!''

''எவனுக்கு அவ்வளவு தைரியம் இருக்கு? நான் நெருப்பு! தொட் டால் அழிச்சிடுவேன்னு அவனுங்களுக்கெல்லாம் தெரியும்!''

''எனக்கு மட்டும் நீ தென்றல்! சரியா..?'' என்று கூறி நகைத்தவன்... பின்...

''நித்தி கண்ணே... நான் சீக்கிரம் வர முயற்சி செய்யறேன்டா! தினம் காலை, மாலை போன் செய்யறேன்!''

''உங்களுக்காக ஒருத்தி காதலில் கரைந்து, உருகி காத்திருக்கேன்கிற எண்ணம் உங்க மனசுல இருக்கணும், சிபி!'' என்று கண்டிப்புடன் நித்திலா சொல்ல..

''கண்டிப்பாடா! குட் நைட்டா! நித்தி செல்லம்... ஒரு இச் கொடுடா!'' என்று சிபி குழைய...

''நேர்ல வாங்கப்பா... ஓராயிரம் தரேன்! குட் நைட்!''

''ரொம்பதான் பாரு... இல்லடி? ஏய் அரக்கி... ராட்சசி... நான் கொடுக்கிறேன்! வாங்கிக் கொள்!!''

என்று சிபி போனில் முத்தமிடும் சத்தம் காதின் வழியே இதயத்தில் இறங்கி நித்திலாவை இம்சித்தது!

நித்திலா சிபியைப் பார்க்காமல் ரொம்பவே தவித்துப் போனாள்!

உணவு இறங்கவில்லை!

உறக்கம் பிடிபடவில்லை!

அவனை சந்தித்த நாள் முதல் இப்படி ஒரு நெடிய பிரிவு ஏற்பட்டதில்லை!

ஸ்கூலுக்கு சென்ற நேரம் தவிர மீதி நேரம் கண்ணீரும் கம்பலையுமாய் பொழுதைக் கழித்தாள்!

இரண்டு நாளில் கடும் சுரம் வந்து விட அக்ஷிதா ஆஸ்பிட்டலுக்கு அழைத்துப் போய் கூட்டி வந்தாள்!

''உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? ஏன் இப்படி உன்னை வருத்திருக்கிறே? போனவன் வராமலா போயிடுவான்! நாளைக்கு ஏதாவது உன் காதலுக்கு பிரிவு வந்தாலோ... அல்லது உன் மனசை இந்த அளவு கெடுத்து வச்சிருக்க அந்த கடன்காரனுக்கு ஆக்ஸிடெண்ட் ஏதாவது ஆகி பொட்டுன்னு போய் சேர்ந்தாலோ... நீ எப்படி உயிர் வாழுவே!''

''சிபி இல்லாமல் உயிர் வாழ மாட்டேன்!

எங்களுக்குள் நீ சொல்றாப் போல பிரிவு வந்தால்... நான் உயிரோடே இருக்க மாட்டேன்! செத்துப் போயிடுவேன்!''

நித்திலா அழுதாள்!

''பெரிசா வீரத்தோடு இருந்தவளை... இந்த காதல் புகுந்து உன்னை கெடுத்து இவ்வளவு கோழையாக்கி வச்சிருக்கே!'' அக்ஷிதா கோபப் பட...

''காதலில் ஆன்னா... ஆவன்னா கூட தெரியாத உனக்கு என்ன தெரியும்? நீயும் காதலிச்சிப் பார்!

உனக்கு என் நிலைமைப் புரியும்!!'' நித்திலாவும் பதிலுக்கு கோபப்

பட்டாள்!

''சிபி சார் ஊர் திரும்ப முயற்சி செய்யுங்க! இந்தப் பைத்தியக்காரி தன்னை வருத்திக் கிட்டு உடம்பை கெடுத்துக் கொண்டு படுத்துக்கிடக் கிறாள்!'' என்று சிபிக்கு நித்திலா நிலையை விளக்கினாள்!

நித்திலாவின் இதயத்துக்குள்.. பொல்லாத சிபியின் மேலுள்ள உயிர் காதல் ஏறிநின்று... பெரிதாய் கண்ணாமூச்சு ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டு... அக்ஷிதாவே அதிசயித்துப் போனாள்!

## 13

**நி**த்திலா கடும் சுரத்திலிருந்து மீண்டாள்!

பரிமளம் ஆயாதான் மூன்று வேளை உணவையும் சமைத்து கொடுத்து... உன்னை வைத்து... கருத்தோடு பார்த்துக் கொண்டாள்!

ஆறாம் நாள் இரவு எட்டு மணிக்கு சிபி வந்தான்!

''சிபி...'' என்று கத்திக் கொண்டே ஓடிப்போய்... அவன் விரித்த கைகளுக்குள் புகுந்து... அவன் மார்பில் தஞ்சமடைந்தாள்!

கண்ணீரால் அவன் சட்டையைப் பாழ்படுத்தினாள்!

''சிபி... சிபி...'' என்று கதறியவளை இன்னும் இறுக்கிக் கொண் டான்.

''சிபி... என்னை விட்டு ஏன் போனீங்க? உங்களைப் பிரிஞ்சி இருக்க முடியலே, சிபி! என்னை இப்படி தவிக்க விடாதீங்க, சிபி! என்னால் தாங்க முடியலே, சிபி! நான் நீங்க இல்லாமல் எப்படியெல் லாம் துடிச்சிப் போயிட்டேன், தெரியும்....?''

''கூல்... கூல் பேபி...'' என்று கதறியவளின் கண்ணீரைத் துடைத்து... முகம் நீவி... முடி கோதி... முகமெங்கும் ஆசையாசையாய் முத்தமிட் டான், சிபி!

''வா... வந்து உட்கார்!'' என்று கட்டிலுக்கு அழைத்து போய் அமர வைத்து எதிரில் அமர்ந்தான்.

நித்திலா அப்படியே அவன் மடியில் கவிழ்ந்தாள்! அவன் இடுப்பை சுற்று கைகளால் இறுக்கிக் கொண்டாள்! அவன்மடி பெரும் நிம்மதியைத் தர... மீண்டும் அடக்க முடியாமல் அழுகை வர... முதுகு குலுங்க விம்மினாள்.

''ஏய் நித்தி... என்ன இது சின்னக்குழந்தை போல! ஒரு ஆறுநாள் என் னைப் பிரிந்து இருந்ததுக்கே இந்த ஆர்ப்பாட்டம் என்றால்..'' எனக்கு ஏதாவது ஆகி நிரந்தர பிரிவு வந்தால் எப்படிடி தாங்கி வாழுவே?''

''நீங்க இல்லாமல் நான் வாழவே மாட்டேன்! சத்தியமாய்...! நிச்சய மாய்...!'' என்று தேம்பியவளிடம்...

''உன் அன்பு கண்டு... உன் நேசம் கண்டு நான் பி ரமித்துப் போகி றேன்டி, நித்தி! ஆனால், இது முட்டாள்தனமான எண்ணம்! நேசி

ச்ச ஆண், பெண்ணிடம் பிரிவு வந்தால் வாழமாட்டேன்னு சொல்லி சாகப் போனால் நாட்டில் மனித இனமே கூண்டோடு அழிந்து விடும்! எது வந்தாலும் வாழ்வதற்கு பழகிக்கொள்ள வேண்டும், நித்திம்மா!'' சிபி புத்தி புகட்ட...

''என்னால் முடியாது, சிபி! என்னை நீங்க கோழையென்றும், தன்னம்பிக்கை இல்லாதவளென்று இகழ்ந்தாலும் பரவாயில்லை!'' நித்திலா சொல்லிவிட்டு வீறிட்டழுதாள்!

''நித்திலா கண்ணே... என்னை எவ்வளவுடா பிடிக்கும்? ம்?'' என்று புருவம் உயர்த்தி அழகாய் சிபி கேட்க...

''வானத்தின் விஸ்தீரணமாய்...

''ரியலி...?''

''நீலக்கடலின் அழகாய்...''

''நித்தி...நித்தி...''

''புவியின் பெரும் பரப்புமாய்...என்னுள் விரவி பரவி இருக்கும் உங்களை ரொம்பவே பிடிக்கும்ப்பா, சிபி!''

''நித்திம்மா...'' சிபி உயிர்நேசத்தோடு அழைத்து அவள் கைகள் இரண்டையும் எடுத்து கன்னத்தில் வைத்துக் கொண்டான்.

''இன்னொரு சிம்பிள் எக்ஸாம்பில் சொல்லட்டுமா, சிபி?''

''ம்...!''

''எந்த ஒரு ஒழுக்கக்கேடான செயலும் செய்திராமல்...விதி வசத்தால் உங்களுக்கு ஆக்ஸிடெண்ட் ஆகி... அப்போது நன்கு பரிசோதிக்கப்படாத ரத்தம் ஏற்றியதாலோ... அல்லது ஊசியின் மூலமோ.. 'ஹெச்.ஐ.வி.' பாதிப்பு ஏற்பட்டு... நீங்கள் ஒரு 'எய்ட்ஸ் நோயாளி' என்று இந்த நிமிடம் தெரிந்தாலும்... என் காதல் கடுகளவு கூட குறையாது! உங்களைத் தான் கட்டிப்பேன்! உங்களோடுதான் காலமெல்லாம் வாழ்வேன்! இதுக்கு மேல் என் காதலையும்... உங்களை எனக்கு எவ்வளவு பிடிக்கும்ன்னு சொல்ல தெரியலை, சிபி!'' என்று சிறு குழந்தையாய் கூறி, நித்திலா அவனை உற்று நோக்க...

அவளின் மிகுதியான நேசத்தைக் கண்டு சிபி மிரண்டு விட்டான்!

''நித்தி... நித்திம்மா... என் கண்ணே...!'' என்று அன்புடன் தழுவிக் கொண்டான்!

சிபியின் மேல் நித்திலா வைத்த உயிர் நேசம் போல... சிபிக்கும் அவள்மேல் தீவிரமான அதே காதல் இருக்குமா....?

தேங்காய் சட்னி, நெய்யில் குழைத்த பொடியுடன் அவள் தோசை வளர்த்துக் கொடுக்க... அங்கேயே வயிறுமுட்ட சாப்பிட்டு விட்டு பத்து மணியளவில் கிளம்பினான், சிபி சக்ரவர்த்தி!

கேட்டை பிடித்துக் கொண்டு... அவன் உருவம் மறையும் வரை கையாட்டிக் கொண்டே இருந்தவள்... சிபியை பார்த்த சந்தோசத்தில்.... உள்ளே போக மனமில்லாமல், அவன் போன பாதையையே பார்த்துக்

கொண்டு... கேட்டிலேயே தலை சாய்ந்து நின்றாள்.

ஒரு கால்மணி நேரத்தில்... போலீஸ் வேன் ஒன்று வந்து நின்றது! அதிலிருந்து நாலைந்து போலீஸ்காரர்கள் இறங்கி அருகில் வந்தனர்.

''ஏய்... என்ன அடுத்த கஷ்டமருக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கியா...?''அந்த போலீஸ் அதிகாரி கேட்க...

''ஐய்யோ...'' தலையில் தணல் விழுந்த கணக்காய் அலறினாள்.

''இப்போதான் ஒருத்தன் உன்னோட ஜல்சாவா இருந்துட்டு போனான்! அது போதாதா....? ஆனாலும், இந்த கட்டுடலை வச்சிகிட்டு... கட்டுகட்டா கரன்சியை சம்பாதித்து... சொகுசாதான் வாழுவே போல?ம்?'' என்று ஏளனமாய் அந்தப் போலீஸ் பேச... நித்திலாவுக்கு பெரும் கோபம் வந்து விட்டது!

''சார்... மரியாதையா பேசுங்க! நான் அந்த மாதிரி பெண்ணில்லை!''

''சதையை வித்து பிழைப்பு நடத்தற விபச்சாரி நீ? உனக்கு மரியாதை ஒரு கேடா...?

''அளவுக்கு மீறி பேசறீங்க, சார்!'' என்று நித்திலா எச்சரித்தாள்.

''நான் இங்கு புதுசா சார்ஜ் எடுத்துக்கிட்ட இன்ஸ்பெக்டர்! போலீஸ் ஸ்டேஷனுக்கு போகணும்! ஏறுடி வண்டியில்!''

''போலீஸ் ஸ்டேஷனுக்கு என்னைக் கூப்பிடற அளவு நான் தப்பு செய்யலை!''

''நீ விபச்சாரம் செய்து இந்த தெரு பேரை கெடுக்கறதா கம்ப்ளைண்ட் வந்திருக்கு!''

''யார் கொடுத்தது?''

''ரகசியம்! அதெல்லாம் சொல்ல முடியாது!''

ஏறு வண்டியில்!'' அந்த போலீஸ் அவள் கையைப் பிடிக்க...

''ச்சீ...'' என்று உதறிவிட்டாள், நித்திலா.

சத்தம் கேட்டு தெருவே கூடி நின்று வேடிக்கைப் பார்த்தது!

நித்திலாவிற்கு பெருத்த அவமானமாய் போய் விட்டது! கண்கள் கண்ணீரை சொரிந்தது!

'நமக்கேன் வம்பு' என்று அனைவரும் நின்றிருக்க... பரிமளம் ஆயா தான் பரிதவிப்புடன் வந்தாள்.

''வயசுப் பெண்ணை இந்த நேரத்துல எதுக்கு ஸ்டேஷனுக்கு கூப்பிடறீங்க? எங்க நித்திலா நல்லப் பெண்? வேண்டாம் விட்டுருங்க!'' கையெடுத்து கும்பிட்டு கெஞ்சினாள்.

''தள்ளும்மா! நீ யார்? அதிகம் பேசினே, வயசுக்கு கூட மரியாதை கொடுக்காமல்... இவளுக்கு துணையா... உன்னையும் வண்டியில் அள்ளிப் போட்டுட்டு போயிடுவேன்!'' என்று அந்த இன்ஸ்பெக்டர் இரக்கம் இல்லாமல் பேச... பயந்து போன பரிமளம் ஆயா... வாயை மூடிக் கொண்டாள்.

''உங்களுக்கு யாரோ ராங்கான இன்பர்மேஷன் கொடுத்திருக் காங்க!''

''அதெல்லாம் இல்லை! உன் பேர் தானே நித்திலா...?''

''ஆமாம்!''

''காந்தி நகர், செவன்த்க்ராஸ் 24ம் நெம்பர் தானே கதவு எண்? நிர்மலா மெட்ரிகுலேசன் பள்ளியில் தானே வேலை செய்யுறே, நீ? இந்த அட்ரஸ்ல இருக்க நீதான் சதையை விற்று பிழைப்பு நடத்தறதா கேஸ் போட்டிருக்காங்க!''

நித்திலா மிரண்டு விட்டாள்!

'எனக்கு யார் எதிரிகள் இருக்கிறார்கள்?'

'இந்த தெருவில் என் பின்னாடியே வந்து என்னிடம் திட்டும், செருப்பையும் வாங்கிய பொறுக்கிகளா...?'

'தற்சமயம், அவளிடம் படித்த பத்தாம் வகுப்பு மாணவியின் திரும ணத்தை நிறுத்தியதற்காக... அவள் பெற்றோர் செய்த சதியா...?'

'அல்லது இந்த ஏரியா கவுன்சிலருக்கும் அவளுக்கும் பகை உண்டு! அவன் செய்த சதியா? அந்த கவுன்சிலர் ஏதோ தொழில் தொடங்க அவள் வீட்டிற்கு அருகில் இருக்கும் மனையை வாங்கிப் போட்டி ருக்கிறான்! அது போதாமல் போக அவள் இடமும் தேவைப்பட்டது! வீட்டை விலைக்கு கேட்க... அவள் மறுத்துவிட...! உன்னை நிம்மதியா வாழ விட்டுடுவேனா?! என்று ஒரு நாள் சூலுரைத்தான்! அந்தக் கவுன் சிலர் போலீசிடம் தவறான கம்ப்ளைண்ட் கொடுத்திருப்பானா...?'

''கிளம்பலாமா...?''

''என் சிபிக்கு ஒரு போன் செய்து விட்டு வருகிறேன், சார்!'' என்று அழுதாள்.

''எந்த கொம்பனுக்கும் நீ தகவல் தர வேண்டாம்!'' ஏறும்மா!'' என்று கழுத்தில் கை வைக்காத குறையாய் சொல்ல... அவமானத்தோடே ஏறி அமர்ந்தாள்.

போலீஸ் ஸ்டேனில்...

''ஐயாவை இரவு முழுக்க சந்தோசப்படுத்தினால் நாளை காலையில் உன்மேல் எப்.ஐ.ஆர். போட்டு உள்ளே தள்ளாமல் விட்டுவிடுவார்! என்ன சொல்றே?''

சேலையை இழுத்து போர்த்திக் கொண்டு கண்ணீரோடு அமர்ந்தி ருந்த நித்திலாவைப் பார்த்து அந்த கான்ஸ்டபிள் கேட்க..

''ச்சீ.. த்தூ...'' என்று காறி துப்பினாள், அந்த போலீஸ்காரனின் முகத் தில்,

''நாளைக்கு டி.வி, பேப்பர்ல நியூஸ் வந்து நாறினால் தான் உன் திமிர் அடங்கும்! எப்படியும் ஆறேழு மாதம் உள்ளே களி திண்ண வேண்டி வரும்! உன்னை யார் வந்து காப்பாத்தறாங்கன்னு பார்க்கறோம்! அநா தைக்கழுதைக்கு இவ்வளவு திமிர் கூடாதுடி!'' என்றவன் கன்னத்தில்

ஓங்கி ஒரு அறைவிட்டு விட்டு சென்றான்.

நித்திலா தலையில் அடித்துக் கொண்டு அழுதாள்.

'சிபி.. சிபி... என் நிலைமை உங்களுக்கு தெரியாதே!'

'சிபி.. உன் காதலி இங்கே கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறேனே! உனக்கு எப்போது செய்தி தெரியும்!'

'சிபி.. நீ இந்த கயவர்களிடம் இருந்து என்னைக் காப்பாயா...?'

'அல்லது நான் நிஜமாகவே விபச்சாரியாய் இருப்பேன் என்று நம்பி என்னை வெறுத்து, ஒதுங்கிப் போய்விடுவாயா.....?'

நிஜ விபச்சாரிகளை அடைக்கும் அறையில் அவர்களோடு சேர்த்து இவளையும் அடைக்க.... நித்திலா மனசுக்குள் மரித்துப் போனாள்.

## 14

பரிமளம் ஆயா, விடியற்காலையில் அக்ஷிதா வீட்டிற்கு ஓடிப்போய் செய்தியைச் சொல்ல... அக்ஷிதா மூலம் செய்தி அறிந்த சிபி.. போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடினான்!

சிறை கம்பிகளுக்கிடையே இருந்த நித்திலா.... சிபியைக் கண்டதும்..

'சிபி... என் உயிரே....' என்று கதறிவிட்டாள்.

சிபி ஓடிப்போய் கம்பிகளுக்கிடையே கை விட்டு... அவள் தோள் மீது கை வைத்து..

''நித்திம்மா.. நான் வந்துட்டேன்... இல்லையா? அழாதடா! அழாதம்மா!'' என்று'' இருடா... நான் போய் அந்த இன்ஸ்பெக்டர் ராஸ்கலைப் பார்த்துவிட்டு வரேன்!''

சிபி வேகவேகமாய் இன்ஸ்பெக்டர் அறைக்கு போன கொஞ்ச நேரத்தில் முகத்தில் கோபத்தோடு வர... பின்னாடியே ஒரு போலீஸ்காரன் சாவியைக் கொண்டு வந்து பூட்டை திறக்க.... வில்லிருந்து புறப்பட்ட அம்பாய் ஓடிவந்து சிபியைக் கட்டிக் கொண்டாள், நித்திலா.

சிபி அவளை இழுத்து தன்னோடு இறுக்கிக் கொண்டு கையணைப்பிலேயே வெளியே அழைத்து வந்தான்!

சிபியின் தவிப்பும், துடிப்பும், அணைப்பும் நித்திலாவை கட்டுப்படுத்தியது!

ஆயிரம் வார்த்தைகள் கூறி சமாதானப்படுத்தியிருந்தாலும் நித்திலா சமாதானமாகியிருக்கமாட்டாள்! அவனுடைய ஆறுதலான பார்வையும், அழுத்தமான அணைப்பும் அவளுக்கு அருமருந்தாய் இருந்தது!

''வண்டில ஏறு, நித்திம்மா! வீட்டுக்குப் போய் பேசிக்கொள்ளலாம்!''

''வீடா....? நான் மாட்டேன், சிபி! அந்த தெருவே நின்று வேடிக்கைப்

பார்த்தது சிபி! எந்த முகத்தை வைத்துக் கொண்டு அங்கே வருவேன்! என்னால் முடியாது, சிபி! மனிதர்கள் அற்ற சூழலில் தனிமையில் ஏதாவது இருட்டு அறைக்குள் ஒளிஞ்சிக்கணும்னு தோணுது! சிபி.. என் கண்ணா.... அப்படி ஒரு இடத்துக்கு கூட்டிப்போயேன்! பிளீஸ்....'' அவன் மார்பில் முகம் புதைத்து அழுகையோடு சொல்ல....

''என் நண்பனோட பண்ணையும், பண்ணை வீடும் மகாபலிபுரம் தாண்டி ஒரு ஐம்பது கிலோ மீட்டர்ல இருக்கு! அங்கே வேணா போகலாமா, நித்திம்மா?''

''உங்க பிரண்டோ'' குடும்பம் இருக்குமே, சிபி!''

''என் பிரண்ட் பெரிய பணக்காரன்! பிசினஸ் விஷயமா கனடா சென்றிருக்கிறான்! வர ஆறு மாசத்துக்கு மேலாகும்! நான் அடிக்கடி அங்கேப் போவேன்! ஒரு செட் சாவி என்கிட்ட இருக்கு! நீ சரின்னு சொன்னால் அழைத்துப் போகிறேன், என்ன?''

நித்திலா தலையாட்டி வண்டியில் அமர வண்டி சீறிப் பாய்ந்தது!

இடையில் வண்டியில் நிறுத்தி உணவு உண்டனர்! ஜவுளிகடைக்கு சென்று அவளுக்கு தேவையான துணிகளையும், அவனுக்கு தேவையான பேண்ட், சர்ட்டும் வாங்கிக் கொண்டு கிளம்பினர்!

மதியம் அங்கே போய் சேர்ந்தனர்.

பண்ணை முழுக்க ஏக்கர் ஏக்கராய் திராட்சை, மாதுளை, கொய்யா, வாழை எனப் பழத்தோட்டங்களும்.. தென்னந்தோப்பும்... ஒரு பக்கம் கரும்பு, நெல் வயல்களும்.. ஒரு பக்கம் பெரிதாய் பாக்குத் தோட்டமும் என விரவிப் பரவியிருந்தது!

நடுவே பெரிய ஆடம்பரபங்களா!

எங்கும் பசுமை! எங்கும் குளிமை!

எங்கும் இயற்கை காற்று! நெஞ்சத்தை கொள்ளைக் கொண்டது!

அங்கிருந்த வேலைக்காரர்கள் அவனுக்கு பவ்யமாய் வணங்க.... அவன் இன்முகத்தோடு அவள் கைப்பற்றி மாடிக்கு அழைத்துச் சென்றான்!

சாவி போட்டு ஒரு அறையை திறக்க.... உள்ளே சென்றதும் விலையுயர்ந்த கட்டில், மெத்தை பெரிய டி.வி., டி.வி.டி. பிளேயர் என்று சகலவசதியுடன் பெரிய சொர்க்கலோகமே விரிந்தது போல இருந்தது!

''நீ குளித்து ஓய்வெடு, நித்திலா! பக்கத்து அறை என்னுடையதுதான்! உதவின்னால் கேளும்மா! நானும் குளித்து சின்னதா குட்டித் தூக்கம் போட்டுவிட்டு வருகிறேன்!''

சிபி போய்விட்டான்!

நித்திலா பாத்ரூம் போய் வெந்நீரில் தலையோடு குளித்துவிட்டு வந்தாள்!

அடர்ந்த வயலட் நிற மைசூர் சில்க் சேலையை எடுத்து கட்டியவுடன்.... அவளின் சிவந்த மேனிக்கு அம்சமாய் இருந்தது!

அவள் இருப்பிடம் வந்து சேர்ந்த உணர்வு ஆட்கொள்ள உறக்கம் அவளைத் தாலாட்டியது! தலையை சரியாய் துவட்டாமல் மெத்தையில் படுத்துக் கொண்டாள்!

இரவெல்லாம் லாக்கப்பில் மனமொடிந்து அழுததாலும்... கடுங்குளிரில் போர்வையின்றி நடுங்கிக் கொண்டு இருந்ததிலும்... ஏற்கனவே கடும் சுரம் கண்டு சரியான உடம்பில் லேசாய் சுரம் விரவிப் பரவி விட்டது!

அடுத்ததாய் பைக்கில் அவ்வளவு தூர பயணம்! வெந்நீரில் குளித்தாலும்... நீண்ட அடர்ந்த முடியை சரியாய் துவட்டாமல் படுத்துக் கொண்டதும்.. ஏசியின் குளிரும் சேர்ந்து நித்திலாவின் லேசான சுரம் கடும் சுரமானது!

அதன் விளைவாய் படுக்கையில் சுருண்டு அணலாய் கொளுத்தும் காய்ச்சலோடு ''சிபி.. சிபி....'' என்று புலம்பிக் கொண்டிருந்தாள்!

உறக்கம் கலைந்து எழுந்த சிபி மணியைப் பார்க்க ஏழு எனக் காட்டியது!

முகம் கழுவி, தலைவாரி லேசாய் பவுடர் போட்டுக் கொண்டு கீழிறங்கி போய் வேலைக்காரி போட்டு வைத்திருந்த டீயை எடுத்துக் கொண்டு வந்து வெறுமனே மூடியிருந்த அறைக்கதவைத் தள்ளி திறந்து உள்ளேப் போனான்!

நித்திலாவின் நிலைக்கண்டு அதிர்ந்தான்!

''நித்தி.. நித்திம்மா... என்னம்மா செய்யுது?'' என்று பதறிக் கொண்டே... கட்டிலில் அமர்ந்து.... அவள் தலையை மடியில் தூக்கி வைத்து... கழுத்து, கன்னம் என்று தொட்டுப் பார்க்க.... அவள் உடல் அனலாய் கொதிக்கவும்....

''ஏய்... என்ன இது இவ்வளவு சுரம்? இப்போ என்ன செய்வேன்? நாம் இருப்பது நடுக்காட்டில்! ஆஸ்பிட்டலுக்கு போகணும்ன்னால் எப்படியும் நூறு கிலோமீட்டராவது பயணிக்கணும்! அடுத்ததா டூவீலர்ல இப்படி இருப்பவளை எப்படி அழைத்துப் போவேன்?''

சிபி கூறிக் கொண்டே மண்டையைப் போட்டு குழப்பிக் கொண்டான்.

''சிபி.. ரொம்ப குளிருது! முடியலே, சிபி!'' என்று கூறி உதடு நடுங்கியவளை இழுத்து அணைத்துக் கொண்டான்.

''நைட் மாத்திரை போட்டுக் கொள், நித்திம்மா! சுரம் குறையலேன்னால் சிட்டிக்கு போய் டாக்டரிடம் காட்டிவிடலாம்!''

'உணவு வேண்டும்' என்று போனில் உத்தரவு இட... ஹாட்பாக்ஸில் சூடான இட்லியும், சட்னியும், சாம்பாரும் வந்தது!

தட்டில் இரண்டு இட்லியை வைத்து மார்பில் சாய்த்துக் கொண்டு... இட்லியை சட்னி சாம்பாரில் நனைத்து கொஞ்ச கொஞ்சமாய் ஊட்டிவிட்டான் சிபி!

*சிபியின் அன்பு நெஞ்சை நனைக்க... அது கண்களில் கண்ணீராய் வழிந்தது! ''ஏய்...'' என்று கடிந்தவாறே கண்ணீரை மறுகையால் துடைத்து விட்டான்!*

*இரண்டு இட்லி முடிந்து மூன்றாவது இட்லியை விண்டபோது ''போதும், சிபி''! வாமிட் வராப்போல இருக்கு, சிபி!'' என்று கெஞ்சினாள்.*

*'ஓ.கே... ஓ.கே... '' என்றவன் அவளுக்கு நீர் புகட்டி.. வாயை துடைத்துவிட்டு.. காய்ச்சலுக்கான மாத்திரையை அலமாரியிலிருந்து எடுத்து வந்து கொடுத்தான்!*

*நித்திலா மாத்திரையை விழுங்கினாள்!*

*தானும் அங்கேயே உண்டான்! வேலைக்காரி வந்து மீண்ட உணவை எடுத்து போனாள்!*

*பின் நித்திலாவை படுக்க வைத்து.. போர்வையை எடுத்து கால்முதல் கழுத்துவரைப் போர்த்தி.. அவள் முகம் பற்றி கன்னத்திலும், உதட்டிலும் அழுந்த முத்தமிட்டு.. தன் அன்பை வெளிப்படுத்தி..*

*''நித்தி.. நல்ல பவர்புல் மாத்திரை சாப்பிட்டிருக்கே! இன்னும் கொஞ்ச நேரத்தில் சுரம் குறையலாம்! இல்லேன்னால் காலை ஆஸ்பிட்டலுக்கு அழைத்துப் போறேன்! சரியா....? குட் நைட், நித்திம்மா!''*

*சிபி கிறக்கமாய் கூறிவிட்டு கிளம்ப.. சட்டென்று நித்திலா படுத்தவாறே அவன் கையை எட்டிப் பிடித்து*

*''சிபி... என்னை விட்டுப் போகாதீங்கப்பா! எனக்கு பயமா இருக்குப்பா!'' என்று கெஞ்ச... மறுக்க முடியாமல் சிபி கட்டிலில் அவள் தலைமாட்டில் அமர்ந்தான்!*

*நித்திலா, அவன் மடியில் தலையை வைத்துக் கொண்டாள்! படுத்த படியே அவன் இடுப்பை சுற்றி கைகளால் இறுக்கிக் கொள்ள..*

*அவளின் குளிருக்கு... அவன் உடலின் வெப்பம் இதயமாய் இருக்க...*

*அவன் மார்பில் பற்றி படர்ந்து.. அப்படியே போர்வையை இழுத்து அவனுக்குமாய் போர்த்தி தன்னோடு படுக்க வைத்துக் கொண்டாள்!*

*ஒரு போர்வைக்குள் திருமணமாகாத இரு வாலிப உள்ளங்கள் கட்டுண்டு கிடந்தன!*

*இரவு... இளமை... தனிமை.. கடும் குளிர்.. ஷாம்புவில் அலசிய நித்திலாவின் கூந்தலின் நறுமணம்... நித்திலாவின் மேனியில் வீசிய இயற்கையான பெண்மையின் வாசம்....நித்திலாவின் மேனி தந்த மென்மை... இதம்... எல்லாமும் சேர்த்து சிபியை மயக்கியது!*

*இதுநாள் வரை, நித்திலாவுடனான வெறும் அணைப்பும், முத்தமும் பாடாய்படுத்தி ஆசையைத் தூண்டினாலும்... எளிதாய் அணை போட்டவன், சிபி!*

*அப்படிப்பட்டவனால் அவளோடு வெறுமனே படுத்திருக்க முடியா*

மல்... உணர்வுகளால் உடல் முறுக்கேற.... அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியாமல் ஆசையாசையாய் முத்தமிட்டு முன்னேறினான், சிபி.

அந்த அணைப்பும், கதகதப்பும்.. இன்பமும்... இதமும்... நித்திலாவின் புண்ணாய் போன இதயத்திற்கு அருமருந்தாய் இருக்க.. அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் இணங்கித்தான் போனாள், நித்திலா!

நித்திலா.. அவனுள் தொலைந்தாள்!

நித்திலா... அவன் உயிரினுள், உடம்பினுள் கரைந்தாள்!

நித்திலா... தன்னை முற்றிலும் இழந்து அவனுடையவளானாள்!

விடிந்து நீண்ட நேரமாகியும் இருவரும் உறக்கம் கலைந்து எழவில்லை!

முதலில் விழிப்பு வந்தது நித்திலாவிற்கு தான்!

இரவு நடந்த நிகழ்வை எண்ணியதும், கண்களில் அருவியாய் நீரைக் கொட்டியது! நீண்ட நெடுநேரம் முழங்காலில் முகம் புதைந்து சத்தம் வராமல் அழுதுகொண்டிருந்தாள்!

கண் விழித்த சிபியும் கலங்கிப் போனான்!

''சாரி... சாரி நித்திம்மா! நான் நானா..? எனக்கு குற்ற உணர்வில் உன்னைக் காண கூசுதுடா! நடந்த தவறுக்கு நீ என்ன தண்டனை தந்தாலும் நான் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்கிறேன்!'' என்று சிபி அவள் முன்பு மண்டியிட்டு அவள் கைப்பற்றி கெஞ்சலுடன் சொல்ல....

இரவு நடந்த தவறுக்காய் வருந்திக் கொண்டிருந்த நித்திலா.... அவனின் முகம் வாடலைக்கண்டு பொறுக்க முடியாமல் சட்டென்று நெகிழ்ந்தாள்!

''சிபி நடந்த நிகழ்ச்சிக்கு நீங்க மட்டும் காரணமில்லை! நானும் தான் காரணம்! நீங்க ஆட்கொள்ள நினைத்தபோது எனக்கு மறுக்க தோணலை! என்னால் நான் அந்த அளவு உங்களை சுவாசமாக நேசிக்கிறேன்! உங்க சந்தோசத்திற்கு தடைபோட விரும்பாமல்தான் நான் என்னை உங்களிடம் இழந்தேன்! என்னைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றிய உங்களுக்கு பரிசா என் கற்பை விரும்பித்தான் கொடுத்தேன்''

''ஓ.. நித்தி... என் கண்மணி!'' என்று அவள் கைகளை எழுத்து கண்களில் ஒற்றிக் கொண்டான்!

''சிபி... என்னை ஏமாற்றிவிட மாட்டீங்களே?''

''ஏய் ராட்சசி...! என்ன வார்த்தை கேட்டுவிட்டே? நான் அப்படி பட்டவனா....? என்னைப் பார்த்தால் ஏமாற்றுக்காரனாய் தெரிகிறேனா...? சொல்லுடி...?'' என்று சிபி கோபம் கொள்ள.....

''ஸாரிப்பா... நான் கேட்டது தப்புதான்!'' என்று நித்திலா மன்னிப்பை கோரினாள்!

சுரம் குறைந்திருக்க... ஆஸ்பிட்டல் செல்ல வேண்டிய நிலை ஏற்படவில்லை!

அதன்பிறகு வந்த நாட்களில்...

நித்திலாவும், சிபியும் கை கோர்த்து பண்ணையின் பழத்தோட்டங்களில் உலா வந்தார்கள்!

நாளெல்லாம் பேச்சு, சிரிப்பு, சிபியின் அண்மையில், அரவணைப்பில் சந்தோசமாய் பொழுது கழிந்தது!

அதன்பிறகு அப்படி ஒரு தவறை அவர்கள் செய்யாமல் கண்ணியம் காத்தார்கள்!

''நாம் ஊருக்கு திரும்பின உடனே தன்யாவை வரழைச்சி திருமணம் செய்துக்கலாமா, சிபி? உங்களுக்கு சம்மதமா, சிபி? நித்திலா கேட்க...

''ரொம்ப ரொம்ப சந்தோசம், நித்திம்மா! நாம் கணவன்- மனைவியாகப் போகும் நாளுக்காக நான் வழிமேல் விழி வைத்து காத்திருக்கிறேனடி, என் பொண்டாட்டியே!''

சிபி அவள் கன்னத்தைக் கிள்ளி கொஞ்சினான்!

அங்கிருந்து கிளம்புவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு...

''சிபி இந்தப் பண்ணையைவிட்டு போகணும்னு நினைக்கும் போது ரொம்ப வருத்தமா இருக்குப்பா! இதுபோல பெரிய பண்ணையை வருங்காலத்தில் நம்மால் விலை கொடுத்து வாங்க முடியாது! ஆனால், பாரதி சொன்னது போல காணி நிலமும், அதைச் சுற்றி கரும்புத்தோட்டமும் நம்மால் வாங்க முடியும்தானே, சிபி?''

நித்திலா கண்களில் ஆசை மின்ன ஆவலோடு கேட்க...

''கண்டிப்பா, உன் ஆசையை நிறைவேற்றுவேன், நித்தி செல்லம்!''

பத்து நாள் முடிந்து பதினோறாவது நாள் அவர்கள் கிளம்ப ஆயத்தமாயினர்!

## 15

**சி**பியும், நித்திலாவும் ஊர் திரும்பினார்கள்!

அடுத்த நாளே நித்திலா பள்ளிக்கு சென்றாள்!

எப்படியோ பிரின்சியின் காதுகளில் இவள் விஷயம் விழுந்துவிட்டு இருந்தது!

''என்ன பெண்ணம்மா, நீ? எவ்வளவு ஒழுக்கமானவள், நீ! உனக்கு போய் இப்படி புத்தி கெட்டுப் போகலாமா....? கண்ட நேரத்துல யாரையோ வீட்டுக்குள்ள விட்டு கொஞ்சிட்டு இருந்திருக்கியே! அது பிடிக்காது போன நபர் உன்னைப்பற்றி தவறா கேஸ் கொடுத்து... ச்சே...!''

பிரின்சி அருவெறுப்புடன் முகம் சுளிக்க.... அந்த நிமிடம் நித்திலா செத்தே விட்டாள், மனதளவில்!

''கரஸ்பான்டண்ட் நீ திரும்ப வேலைக்கு வந்தால் சேர்க்க வேண்டாம் என்றார்! அவள் நல்ல பெண்! நூறு சதவீதம் தேர்ச்சி தருபவள்!

அவள் மேல் உள்ள பொறாமையில்.. யாரோ கேஸ்போட்டு பேரைக் கெடுக்க நினைத்திருக்கிறார்கள்! அந்த பொய்யான வதந்தியை நம்பி நம்ம நிர்வாகம் ஒரு நல்ல ஆசிரியையை இழக்க வேண்டாம்ன்னு கெஞ்சி, கூத்தாடி உன் வேலையை நிலைக்க வைத்திருக்கிறேன்! உன் வீட்டு நிலைமையும், வறுமையும், உன் கடமையும் எனக்கும் தெரியும்மா! இனியாவது உன் பேரில் எந்த ஒரு கரும்புள்ளியும் வராமல் பார்த்துக் கொள்! அந்த சிபியை உடனே மணந்து வாழபார்!''

''சரிங்க, மேடம்!''

''உன் தங்கை தன்யாவுக்கு இந்த விஷயம் தெரிய வேண்டாம்! பைனல் இயர்! இதனால் அவள் படிப்பு பாழாகிவிடும்!''

பிரின்சி அறையிலிருந்து ஓய்வறைக்கு வர அங்கே அக்ஷிதா இருந்தாள்! அருகில் வந்து ஆதரவாய் கைப்பற்றிக் கொண்டாள்!

''இந்த பத்து நாளும் எங்கே இருந்தாய்? உனக்கு போன் பண்ணினால் 'ஸ்விட்ச் ஆப்ன்னே வந்தது! கலங்கிட்டேன், நித்தி!'' அக்ஷிதா வருத்தத்துடன் சொன்னாள்!

''எந்த ஊருக்குடி போயிருந்தே...?''

''தெரியாதுடி!'' நித்திலா உதடு பிதுக்கி சொல்ல....

''தெரியாதா..? ஏய் மடச்சி... எந்த ஊர்? எங்கே போயிருந்தாய், அவரோடு?''

''எங்கோ மகாபுலிபுரம் தாண்டி ஐம்பது கிலோ மீட்டர் கடந்து போனோம்டி! சிபியோடன்னால் நரகத்துக்குகூட நான் இன்பமாக போகிறவள்ன்னு தெரிந்தவள் தானே, நீ? அவர் நண்பரோட பண்ணைக்கு போனோம்! இயற்கை சூழல்ல அருமையான வாழ்க்கை வாழ்ந்தேன்!...

எனக்கு நடந்த சதிக்காக நான் எவ்வளவு கலங்கினேன், அக்ஷி! ஆனால், அந்த சதி எனக்கு எவ்வளவு பெரிய சந்தோசத்தை தேடிதந்து விட்டது! என் சிபியின் மித மிஞ்சிய அன்பை தெரிந்து கொள்ள நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது! அக்ஷி... சோதனைகளும், வேதனைகளும் கடைசியில் மகிழ்ச்சியைத்தான் கொடுக்கும் போல!'' என்று நித்திலா சிரிக்க....

''ஏய் பைத்தியமே....! நான் கலங்கிப் போய் இருக்கேன்! உனக்கு சிரிப்பு வருதா...? நித்திலா... நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக் காதே! ஆனாலும் நீ அவர்மேல் இவ்வளவு காதல் பைத்தியமா இருக்க வேண்டாம்!'' என்று சொன்ன நித்திலா நினைத்துக் கொண்டவளாய் கேட்டாள்!

''ஏய் நித்தி... ரெண்டு பேரும் தனிமையில் இருந்திருக்கீங்க! காதலர்கள் வேற! எதுவும் உங்களுக்குள்ள தப்புதண்டா நடக்கலையே!'' என்று கேட்க...

பொய்யே சொல்லி அறியாத நித்திலா சட்டென்று பொய் சொன்

னாள்!

''நான் அப்படி பட்டவளாடி, அக்ஷி?''

''இல்லைதான்! உன்மேல் எனக்கு பயங்கர நம்பிக்கை! உன் வயசுமேல சின்ன சந்தேகம் வந்து கேட்டுட்டேன், ஸாரிடி!''

அக்ஷிதா மன்னிப்பை கோர... நித்திலாவுக்குள் குற்ற உணர்வு பெரும் முள்ளாய் தோன்றி, குத்தி... அவள் இதயத்தைக் கிழித்தது!

## 16

**அ**டுத்த நாள் காலை சிபிக்கு போன் செய்ய... மாலை வருவதாய் கூறினான்.

அவன் வருகைக்காக பள்ளிவிட்டு சென்றவள் குளித்து, உடுத்தி, லேசாய் பவுடர் பூசி... கண்களுக்கு மைதீட்டி... நீண்ட ஜடையில் சரம் சரமாய் அடுக்கு மல்லிகை மலர்களைச் சூடிக் கொண்டு... தேவதை போல அழகுடன் சிபிக்காக காத்திருந்தாள், நித்திலா!

நேரம் கடந்ததே தவிர அவன் வந்தபாடில்லை! போனும் செய்ய வில்லை!

காத்திருந்து நேரம் கரைய கரைய.. அழுகை முட்டிக் கொண்டு வந் தது!

ஈகோவை விட்டு சிபியின் நெம்பருக்கு முயற்சிக்க... அது ''ஸ்விட்ச் ஆப்'' என்று சொன்னது!

மீண்டும் மீண்டும் இரவெல்லாம் முயற்சித்தும் ஸ்விட்ச் ஆப் என்றே சொல்ல.... நித்திலா கலங்கிவிட்டாள்!

விடிய விடிய கண்ணீர் விட்டாள்!

அக்ஷிதா அவள் கோலம் கண்டு....

''நித்தி.. என்னாச்சிடி?'' என்று கேட்க....

''சிபி நேற்று மாலை வரேன்னார்! வரவில்லை! போனும் ஸ்விட்ச் ஆப்ன்னு வருது''

நீர் நிறைந்த கண்களுடன் நித்திலா சொல்ல....

''அவசர வேலையா இருக்கும்! அல்லது போன் தொலைஞ்சி உனக்கு செய்தி சொல்ல முடியாமல் போயிருக்கலாம்! இதுக்கெல் லாமா அழுது உன்னை வருத்திக்குவே?''

''என் நெம்பர் தெரியுமில்ல? யார் போனிலாவது தகவல் சொல்லியி ருக்கலாம் இல்ல?''

''என்ன அவசரமோ வரமுடியாமலும், போன் செய்ய முடியாமலும் போயிருக்கலாம்! கலங்காதே! வருவார்!''

மாலை பள்ளிவிட்டு அக்ஷிதாவும், நித்திலாவும் நடந்தனர்!

சிபியை நெஞ்சம் நினைக்க.. சட்டென்று கண்கள் பொங்கியது!

''ஏய் நித்தி.... உனக்கு அறிவே இல்லையா...? கோழையா, நீ?''

''முடியலே, அக்ஷிதா!''

''அவருக்கு என்னானதோ என்று பதறும் நீ.. ஒரு வேளை சிபி ஏமாற்றுக்காரரா இருந்து ஏமாற்றி விட்டு போயிருந்தால்ன்னு சின்னதா கூட நினைப்பு வரலையா, நித்தி...?''

''ச்சீ.. வாயைக் கழுவு, அக்ஷி! என் சிபி அப்படிப்பட்டவரா இருக்க மாட்டார்!'' என்று நித்திலா சீறினாள்!

''அப்படிப்பட்டவரா இருக்கக்கூடாதுங்கிறது தான் என்னோட வேண்டுதலும்! ஒரு வேளை இருந்து விட்டால்...?''

''கண்டிப்பா நாளை நேரில் வந்து நிற்பார்!''

''நிற்கவில்லையென்றால்...?''

''ஏன் அக்ஷி... இப்படி எதிர்மறையா பேசறே....?''

''ஒரே கோணத்தில் யோசிக்காமல் இப்படி இருந்தால்ன்னு அடுத்த கோணத்துல யோசிக்க சொல்றேன்! அவர் தங்கி இருக்கிற இடத்தோட அட்ரஸ் தெரியுமா...?''

''ம்கூம்!''

''வேலை செய்யறதா சொன்ன மெக்கானிக் ஷாப் இருக்கிற இடம் தெரியுமா...?''

''சஞ்சிதா மெக்கானிக் ஷாப்! தாம்பரத்துல இருக்கு!''

''அங்கே நாளைக்கு போகலாம்!''

போனார்கள்!

மிகபிரமாண்டமாய் இருந்தது, ஷாப்!

இதயம் படபடக்க உள்ளே நுழைந்து கேட்க... அப்படி யாரும் இல்லையென்றார்கள்!

நித்திலா தலையில் வானமே இடிந்து விழுந்தது கணக்காய் துடிதுடித்துப் போனாள்!

அந்தப் பகுதியில் இருந்த மெக்கானிக் ஷாப்புகளில் அவன் பெயரையும், அடையாளங்களையும் சொல்லிக் கேட்க உதடு பிதுக்கினர்!

இரண்டு மூன்று நாள் அலைந்ததுதான் மிச்சம்! சிபியைக் கண்டுபிடிக்க முடியவில்லை!

''நல்லவன் போல வேஷம்போட்டு உன்னை நல்லா ஏமாத்தி விட்டு போயிட்டான்! இதுவரைக்கும் நீ தப்பித்தது, பெரிசு! இதுவே உன் கழுத்தில் ஒரு தாலியை கட்டி வயிற்றில் பிள்ளையை கொடுத்து விட்டு போயிருந்தால் என்ன செய்ய முடியும்? அவனை தலை முழுகி இனிவரும் காலத்தை சந்தோஷமாக வாழப்பார்.''

அக்ஷிதா அறிவுறுத்த அவள் மடியில் அப்படியே கவிழ்ந்து அழுதாள்.

''சிபி இல்லாமல் நான் எப்படி உயிர் வாழ்வேன் அக்ஷிதா?''

''அந்த கேடுகெட்டவனை மறக்கற வழியைப் பார். உன்னை நம்பி கல்லூரியில் ஒருத்தி இருக்காள். அவளுக்கொரு நல்ல வாழ்க்கையை ஏற்படுத்தி கொடுக்க வேணுமில்லையா? அதுக்கு இப்படி அறிவு கெட்

டத்தனமா உளறுவதை நிறுத்துடி.''

''சிபி இல்லாமல் என்னால் வாழ முடியாது. சத்தியமா நான் செத்து தான் போவேன்.''

''சாகறதுக்கு முன்பு தன்யாவை வரவழைச்சு அவளுக்கும் துளி விஷத்தை கொடுத்து ரெண்டு பேரும் சேர்ந்து செத்துப் போங்க.''

அக்ஷிதா... என்று அலறலோடு அழுதாள் நித்திலா.

''பின்னே? நீ நிம்மதியா போய் சேர்ந்து விட்டால் அவளுக்கு யார் இருக்கா? அவளுக்கு இருக்கும் ஒரே உறவு, பாதுபாப்பு எல்லாம் நீ தான். நீ போயிட்டா அவள் எப்படி வாழ்வாள்? அதனால் சாகறதா இருந்தா ரெண்டு பேரும் செத்துப் போங்க. வாழறதா இருந்தால் ரெண்டு பேரும் வாழுங்க.''

''சிபியை என் உயிரா நினைச்சி வாழ்ந்தேனே சிபி இல்லாமல்...''

''நிறுத்துடி. மீண்டும் அவனை உயிர் கியிர்னு சொன்னே, அப்புறம் நானே கத்தியை எடுத்து உன்னை ஒரே சொருகா சொருகிடுவேன். அந்த ஏமாத்துக்காரன் பேரைக்கூட நீ சொல்லக்கூடாது. அந்த துரோகியோட நினைப்பை உன் நெஞ்சிலிருந்தும் நினைவிலிருந்தும் தூக்கி தூர வீசி எறி.

சிபின்னு ஒரு கடன்காரனை நீ சந்திக்கலேன்னு நினைச்சிக்கோ. நீ எந்த மாதிரியான வீரம் செறிந்த பெண். உன் வீரம் உனக்கே தெரியும். நான் உனக்கு சொல்லித் தெரிய தேவையில்லை.''

அக்ஷிதா பேசப்பேச நித்திலாவின் அழுகை அதிகமானதே தவிர குறையவில்லை.

''நித்தி இனக்கவர்ச்சி காதல் கண்ராவின்னு நினைச்சி வழி தவறிப் போக இருந்த மாணவிகள் சிலரை சீர்படுத்தியவள் நீ. அப்படிப்பட்ட உன்னை மாற்ற புதுசா ஒருத்தர் வர வேண்டாம். முதல்ல இந்த அழுகையை நிறுத்து. பெண்களோட பலகீனமே இந்த அழுகை தான். நீ இப்போ அழறதில் என்ன லாபம்? ஏமாற்றி விட்டுப்போன சிபி வரப்போறானா? அவன் தோற்றம், உடை, பேச்சு எல்லாவற்றிலும் ஒரு பணக்காரத்தனம் தெரிந்தது. அதான் அவன் மெக்கானிக்குன்னு சொன்னதை நம்பாம உன்னை எச்சரித்தேன். உனக்கு காதல் போதையில் அதெல்லாம் கண்ணில் படாமல் போய்த்தான் இப்படி உன்னையும், உன் மனசையும் பாழ்படுத்திக் கொண்டாய். விடு போனதை நினைத்து வருத்தப்படுவதால் எதுவும் சீராகிப் போவதில்லை.

ஒருவேளை அவனுக்கு விபத்து நேர்ந்து சந்திக்க முடியாது போயிருந்தால் அவன் தப்பித்தான்! அவனைப் பற்றிய தகவல் தெரிந்தால் எப்பாடு பட்டாவது உன்னை சேர்த்து வைப்பேன். அவன் ஒருவேளை ஏமாற்றுப் பேர்வழியாக இருந்து... அவன் அட்ரசோ, அவனைப் பற்றிய விபரமோ தெரிய வந்தால் தேடிப்போய் அவனை உண்டு இல்லைன்னு சொய்துடணும், நித்திலா நீ கஷ்டப்படாதே! உனக்கு துணையா நான்

இருக்கேன்.''

அக்ஷிதா அன்று இரவு அங்கேயே தங்கி விட்டாள். உணவு சமைத்து வற்புறுத்தி சாப்பிட வைத்து அவளோடு படுத்துக் கொண்டாள்.

# 17

**நி**த்திலாவின் கண்களிலிருந்து வழிந்த நீர் தலையணையை நனைத்தது.

சிபி நீ ஏன் என் கண்ணில் பட்டாய்?

சிபி ஏன் என் கல்லாய் இருந்த இதயத்தை காதலால் கரைத்தாய்?

சிபி உன்னை ஒரே பார்வையில் பிடித்துப்போனதே. நீ நல்லவன் என்று நம்பித்தானே உன்னிடம் என் மனதை பறிகொடுத்தேன். என் உயிரினும் மேலான கற்பையும் உன்னிடம் இழந்தேன்.

சிபி என் மனம், உடல் இரண்டையும் கெடுத்து விட்டு நீ எங்கே ஓடி ஒளிந்து கொண்டாய்?

சிபி நீ யார்?

சிபி நீ எங்கிருந்து வந்தாய்?

சிபி நீ எப்படிப்பட்டவன்?

சிபி உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்?

சிபி ஏன் எனக்கு இப்படி ஒரு தண்டனையை கொடுத்தாய்?

சிபி நான் செய்த தவறு என்ன?

சிபி நான் உனக்கு செய்த துரோகம் என்ன?

சிபி என் இயத்தை உருக வைத்து உடைத்து சின்னாபின்னமாக்கி சென்றிருக்கிறாயே இதனால் உனக்கு என்ன லாபம்?

சிபி இப்படி என் மனதில் அடித்து விட்டாயே?

சிபி எவ்வளவு வலிக்கிறது தெரியுமா?

சிபி என் உடம்பில் அடித்திருந்தாலும் இவ்வளவு வலி வலித்திருக்காதே. எத்தனை வலியும், வேதனையும் என்னை ஆட்கொண்டிருக்கிறது தெரியுமா?

சிபி உன்னை உண்மையாக காதலித்ததற்கு இந்த பெரும் தண்டனையை வழங்கி விட்டாயே?

சிபி நீ காட்டிய அன்பு, பாசம், நேசம் எல்லாம் பொய்யா?

நிஜ நேசத்திற்கும், பொய்யான நேசத்திற்கும் வித்தியாசம் தெரியாத மூடாத்மாவா நான்?

இப்படிப்பட்ட நான் வாழ்வதற்கு தகுதியானவளா?

உடம்பையும், மனதையும் உன்னிடம் ஒப்படைத்து வெறும் உயிரற்ற ஜடமாய் வாழ்வதில் என்ன அர்த்தம்?

தன்யாவிற்கு இப்படி ஒரு தமக்கை இருப்பதை விட இறப்பதே மேல்.

நித்திலா எழுந்தாள். அக்ஷிதா நல்ல தூக்கத்தில் இருப்பதை தெரிந்து கொண்டு ஹாலுக்கு வந்தாள்.

பெரிய ஸ்டூலை இழுத்துப் போட்டு சேலையை மாட்டி சுருக்கு முடிச்சிட்டு கழுத்தில் மாட்டி தொங்க....

ஐயய்யோ... என்ற வீறிடலோடு அக்ஷிதா கதவை உடைத்துக் கொண்டு வந்து விட்டாள்.

அவள் உத்திரத்தில் தொங்கிக் கொண்டிருக்க... ஓடி வந்து தாங்கி தூக்கிப் பிடித்து அலறின அலறலில் அக்கம் பக்கத்தில் இருந்து வந்து விட்டார்கள்.

நித்திலாவை கீழே கிடத்தினார்கள். மயங்கி இருந்தவளிடம் மூச்சி ருந்தது.

ஆம்புலன்சை வரவழைத்து ஆஸ்பத்திரியில் சேர்த்து ஐ.சி.யூ.வில் வைத்து காப்பாற்றி விட்டது.

ஒரே வாரத்தில் முழுவதும் குணமாகி வீடு திரும்பினாள்.

ஆஸ்பத்திரி செலவு முழுக்க அக்ஷிதாவின் தந்தையே பார்த்துக் கொண்டார்.

''இனியாவது புத்தியா இரு! சாகறதுக்கு போகாதே. காதலே வாழ்க் கையாகி விடாது. வாழ்க்கையின் ஓர் அங்கம் தான் காதல்.

இன்று நூற்றுக்கு தொண்ணூற்று ஐந்து பேரோட காதல் நிறைவேறு வது இல்லை. அப்படி நிறைவேறலைன்னு எல்லோரும் சாகறதுக்கு போகவில்லை. அதை உதறி தள்ளிவிட்டு வேற வாழ்க்கையை தேடி சந்தோஷமாகத்தான் இருக்காங்க.

நீ கவலைப்படாதே. உனக்கொரு நல்ல மாப்பிள்ளை ராஜகுமாரன் போல வருவார். கட்டி கண்ணுக்குள்ள வச்சி காப்பாத்துவார். அக்ஷிதா உன்னோடு உன் வீட்டில் இன்னும் நாலு நாள் இருக்கட்டும். என்னை உன் தகப்பனா நினைத்து என் பேச்சை கேட்டு புத்தியா பொழைக்கிற வழியைப் பார்.''

அக்ஷிதாவின் தந்தை இவ்வாறு கூறி விட்டு செல்ல, நித்திலா தன்னை தேற்ற வழி தெரியாது கண்ணீர் விட்டு கலங்கினாள்.

## 18

**நி**த்திலா நடைபிணமானாள்.

பள்ளிக்கு சென்றாள். அவளின் சிவந்த நிறம் குறைந்து கறுத்து இளைத்து ஐயோ பாவம் என்பது போல காட்சியளித்தாள்.

அவள் தூக்குமாட்டி ஆஸ்பத்திரியில் சேர்ந்ததை மறைத்து கடும் சுரம் வந்து சேர்ந்தாள் என்று அக்ஷிதா அங்கே செய்தி பரப்பியிருந்தாள்.

வேலை நேரம் போக இந்த பாழாய்ப்போன மனது ஸ்ரீராமஜெயம் உச்சரிப்பது போல சிபி சிபி சிபி என்றே புராணம் பாடியது.

அன்று இரவு தன்யா போன் செய்தாள்.

நித்திலாவின் விஷயம் தன்யாவுக்கு தெரியாது.

''அக்கா நல்லாயிருக்கியா?''

ம்... தன்யாவின் குரல் கேட்டதும் கண்கள் கோடை மழையாய் பொத்துக் கொண்டது.

''சிபி மாமா எப்படி இருக்கார்? நலம் தானே? அவரைப் பார்க்கணும்னு போல இருக்குக்கா. பரீட்சை முடிச்சிட்டு வந்ததும் உனக்கும் அவருக்கும் மேரேஜ் செய்து பார்க்கணும்னு ஆசையா இருக்குக்கா. என்ன பேச மாட்டேங்குற? வெட்கமா? சரி நான் படிக்க வேண்டும். போனை வச்சிடறேன்.''

நித்திலா, தன்யாவின் பேச்சால் இரவு முழுக்க பிழிய பிழிய அழுதாள்.

நான்காம் நாள் இரவு.

பேப்பர் திருத்தி முடித்து விட்டு வேண்டா வெறுப்பாய் டி.வி.யை போட்டு ஒவ்வொரு சேனலாய் மாற்றிக் கொண்டு போக தலைமுறை டி.வி.யில் நம்ம வீட்டு நிச்சயதார்த்தம் நிகழ்ச்சி ஓடிக் கொண்டிருந்தது.

பெரிய மண்டபத்தில் மக்கள் கூட்டம் அலை மோதியது. கேமராவை கொஞ்ச கொஞ்சமாய் நகர்த்தி மணமேடையை காட்ட. அங்கே கண்ட காட்சியில் நித்திலாவின் கண்கள் இரண்டும் விரிய... விதிர்விதிர்த்துப் போனாள்.

அங்கே மாப்பிள்ளை கோலத்தில் கோட் சூட் அணிந்து படிய வாரிய தலையும், அடர்ந்த மீசையுமாய் மணப்பெண்ணின் அருகே அம்சமாய் மன்மதனைப் போல் சிபி வீற்றிருக்க, மணப்பெண்ணோ நொடிக்கொரு தரம் சிபியைப் பார்த்து நாணத்துடன் புன்னகைக்க என காட்சி ஓடிக் கொண்டிருந்தது.

அங்கே இருந்த ஆண்களிலும், பெண்களிலும் பணக்கார களை மின்னியது.

நித்திலாவோடு பழகியபோது சிறிய மீசையும், வலது பக்கமாய் வகிடெடுத்து சீவிய தலையுமாய் பொறுப்பற்று திரியும் கட்டிளம் காளையாய் காட்சியளித்தவன் சிபி.

இப்போது வகிடெடுக்காமல் மேல்நோக்கி அழுந்த வாரிய தலையும், உதட்டை மறைத்து சீராய் நறுக்கப்பட்ட அடர்ந்த மீசையிலும் கன கம்பீரமாய் பணக்கார களை மின்ன அறிவுஜீவியாய் காணப்பட்டான்.

வித்தியாசம் அதிகமில்லை என்றாலும் அவன் சிபிதானா அல்லது வேறு ஒருவ?'' தற்போதைய மனநிலையில் எந்த ஆணிலும் சிபி இருக்கிறானா என ஆராய்வதால் அப்படி தெரிகிறதா என சந்தேகம் எழுந்தது.

உடனே அக்ஷிதாவிற்கு போன் செய்து விஷயத்தை சொன்ன

இரண்டே நிமிடத்தில்...

ஏய் ஏய் அந்த திருட்டு ராஸ்கல் சிபி தாண்டி அவன் என்று உறுதிப் படுத்தினாள்.

தமிழ்நாட்டின் நெம்பர் ஒன் இளம் தொழிலதிபர் சிபி சக்கரவர்த் திக்கும் அவருடைய மாமன் மகள் தீபனாவிற்குமான திருமண நிகழ்ச்சியில் ஏராளமான தொழிலதிபர்களும், திரையுலகின் பிரபல நட்சத்திரங்களும் திரளாக வந்து கலந்து கொண்டனர் என்று அங்கே வாசிப்பாளினி சொல்லிக் கொண்டிருந்தாள்.

பெரிய பணக்காரன் தனது பிசியான வேலைகளையெல்லாம் விட்டு விட்டு வந்து சாதாரண மெக்கானிக்காய் என்னுடன் பழகியது ஏன்?

நான் கூப்பிட்ட நேரத்திற்கெல்லாம் என்னைப் பார்க்க வந்து சிரித்து, பேசி மகிழ்ந்து என் இயத்தை கவர்ந்தது ஏன்? என்னை நேசித்தது ஏன்?

இந்த சூழ்ச்சி எதற்காக? ஏன்?

நான் இந்த சிபியை எந்த விதத்தில் பாதித்தேன்? இப்படி எனக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது ஏன்?

என் வாழ்க்கையை நாசப்படுத்தி சூனியமாக்கி செல்ல என்ன காரணம்?

''நித்தி அவனைப் பற்றி சொன்னதை எல்லாம் கேட்டாயா?'' அக் ஷிதா போனில் கேட்டாள்.

ம்.

''பெரிய இளம் பிசினெஸ் மேனாம். தகப்பனுக்கு ஓய்வு கொடுத்து விட்டு தொழிலை செய்கிறான். இவ்வளவு பெரிய பணக்காரன் உனக்கு உதவின்னு நாய்க்குட்டியை ஆஸ்பத்திரிக்கு தூக்கிப்போக உதவியது ஏன்? தன்னை ஒரு மெக்கானிக் என்று சொல்லி உன்னுடன் நட்பு கொண்டது ஏன்? உன்னிடம் காதலை சொல்லி நன்றியுள்ள ஜீவனாய் சுற்றியதேன்?

யோசிக்க யோசிக்க குழப்பமா இருக்குடி. உனக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? என்ன உறவு இருக்கப் போகிறது? அப்புறம் ஏன் தேடி வந்து உன்னை காயப்படுத்தி விட்டு போக வேண்டும்?''

''எனக்கும் புரியலை அக்ஷி. காரணம் தெரிந்தால் கூட நான் ஓரளவு என்னை சமாதானப்படுத்தி என் தங்கைக்காக வாழ்ந்து விடுவேன்.'' நித்திலா சொல்லிவிட்டு கதறினாள்.

''அட்ரஸ் குறிச்சி வச்சிருக்கேன். நாளைக்கு பள்ளிக்கு விடுப்பு கொடுத்து விட்டு போகலாம். அவனைக் கூண்டில் ஏற்றி சந்தி சிரிக்க வைக்கணும்.''

''அதெல்லாம் வேண்டாம் நித்தி.''

''ஏன்?''

''அவர் ஆசைப்பட்ட பெண்ணை மணந்து சந்தோஷமாக

வாழட்டும்.''

''நித்தி நித்தி நீ ஏன்?''

''ஏன்னா ஏன்னா நான் அவரை உண்மையா உயிருக்குயிரா நேசிக்கி றேன் அக்ஷி'' - என்று தழுதழுத்தாள்.

ஐயோ இப்படி ஒரு நல்ல உள்ளத்துக்கு சொந்தக்காரியை ஏமாற்ற எப்படித்தான் மனசு வந்தது? பாவி அவன் உனக்கு பண்ணின பாவத் திற்கு நல்லா அனுபவிப்பான் பாரு'' என்று கோபமாய் சாபமிட.

''அவரை சபிக்காதே அவரை சபிக்கிறது என்னை சபிக்கிறதுக்கு சமம்.''

''நாளைக்குப் போய் பார்த்து காரணத்தை கேட்கணும். போக லாமா?

''கண்டிப்பா அவரை நேர்ல பார்க்கணும்னு மனசு கிடந்து அடிச்சுக் குது. ஒரே ஒரு முறை அவரை கண்ணில் பார்த்து விட்டால் போதும். அவர் பிம்பத்தை இதயத்தில் நிரப்பிக் கொண்டு வந்து காலமெல்லாம் அவரையே நினைத்து வாழ்ந்து விடுவேன்'' என்று நித்திலா பேச...

''திருந்தாத ஜென்மமே. உன்னை திருத்தவே முடியாதுடி. நம்மை ஒருத்தன் காதலிச்சு ஏமாற்றி விட்டு போவானாம், அந்த அயோக்கிய னையே நினைச்சி இவ வாழ்வாளாம். முட்டாள் பெண்ணே.'' அக் ஷிதா கோபத்தோடு சொல்லி போனை ஆப் செய்தாள்.

விடியாத இரவை சபித்துக் கொண்ட சிபியை காணப்போகும் ஆசை யை விழிகளில் தேக்கி ஏக்கத்தோடு கொட்ட கொட்ட விழித்திருந்தாள் நித்திலா!

## 19

புரசைவாக்கம் மத்தியில் அவ்வளவு மிகப்பிரமாண்டமாய் வானு யர அந்த நகரையே சின்னதாக்கி உயர்ந்து விரிந்திருந் தது, சிபியின் அலுவலகம்.

நித்திலாவும், அக்ஷிதாவும் உள்ளே போனார்கள்!

''யாரைப் பார்க்க வேண்டும்?'' பியூன் கேட்க,

''சிபி சாரை.''

''அப்பாயின்ட்மென்ட் இல்லாமல் பார்க்க முடியாதுங்கம்மா.''

''கண்டிப்பா பார்க்கணும். தயவு பண்ணுங்க சார். பிளீஸ் நித்திலா வந்திருக்கேன்னு சொல்லுங்க அவர் அனுமதிக்கலைன்னா போயி டறேன்.'' என்று கெஞ்சவும் மனமிரங்கி உள்ளே சென்று திரும்பிய பியூன்.

''உங்களை உடனே வரச்சொன்னாருங்கம்மா...'' என்று கதவு திறந்து விட்டான்.

யெஸ் கமீன்... என்ற சிபியின் ஆண்மை ததும்பும் கம்பீரக்குரல் செவியில் விழுந்து அமுதமாய் தித்தித்தது.

பெரிய மேஜைக்குப் பின்னால் போடப்பட்ட சுழல் நாற்காலியில் கம்பீரமே கால் முளைத்து அமர்ந்திருப்பது போல சிபி அழகாய் அமர்ந் திருந்தான்.

அவனுக்கு பின்னே இருந்த சுவரில் நயாகரா அருவி நீரே அள்ளித் தெளித்து அறைக்கு இன்னும் அழகு கூட்டிக் கொண்டிருந்தது.

அவனைப்போலவே அறையும் அழகும், கலைநயமும், கம்பீரமும் நிறைந்திருந்தது.

''ஆக என் இருப்பிடம் கண்டுபிடித்து கண்ணகியாய் நீதிகேட்டு வந் தாகிவிட்டது சரியா?''

சிபி சின்ன சிரிப்புடன் மமதையோடு கேட்க, நித்திலா கண்கள் விரிய அவனை விழிகளால் விழுங்கிக் கொண்டிருந்தாள். சிபியை கண்ணாரக் காணவும், ஆற்றாமை மிகுதியில் கண்ணில் சரசரமாய் கண் ணீர் பூக்கள் மலர்ந்தது.

''ஏய் உட்காருடி. சிபி கோபமாய் சொல்ல, உட்காருவதா? வேண் டாமா?'' என்று யோசித்து நிற்க,

உட்கார் என்று கட்டளையாய் உறும, நித்திலா அமர்ந்து முந்தானை யால் கண்களை துடைத்து அழுகையை மென்றாள்.

''டி.வி.யில் என் நிச்சயதார்த்த நிகழ்ச்சி பார்த்து வந்திருக்கே அப்ப டித்தானே?'' அவளை நேருக்கு நேராய் பார்த்துக் கேட்க,

''சிபி என்னோட பழகி என் மனசை கவர்ந்து என்னை பைத்திய மாக்கி என்னோடு உடல் ரீதியாகவும் கலந்து நான் உங்களில் கரைந்து கடைசியில் இப்படி சொல்லிக் கொள்ளாமல் மறைந்து விட்டீங்களே சிபி. ஏன் சிபி இப்படி செய்தீங்க?'' உதடுகள் துடிக்க, கண்ணீர் பொங்கி வழியும் கண்களுடன் நித்திலா கேட்டாள்.

''ஏன்னு தெரியாதா?''

ம்கூம் அவள் அப்பாவியாய் தலையை ஆட்ட,

சட்டென எழுந்து தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணிபர்சை எடுத்து பிரித்து அதிலிருந்து ஒரு போட்டோவை எடுத்து அவள் முன்பு காட்டி...

''இது யார் என்று தெரிகிறதா?''

''பிரணவ் என் தங்கையை காதலிச்சவன்.''

''இந்த பிரணவ் யார் என்று தெரியுமா?''

ம்கூம்.

''என் தம்பி. என் உயிரினும் மேலான சகோதரன். எங்க வீட்டு செல் லக்குட்டி. குட்டி இளவரசன். இப்போ பிரணவ் எங்க இருக்கான்? என்ன ஆனான்? இருக்கானா? இல்லையா? செத்தானா? தெரியலை. அவன் காணாமல் போனதும் தாய் பக்கவாதம் வந்து படுக்கையில விழுந்து போனாள்.''

''ஐயோ சிபி'' நித்திலா அலறினாள்.

''தகப்பன் மன அழுத்தம், ஹார்ட் அட்டாக்குன்னு விழுந்து இப்போ லேசா நார்மலாகி இருக்கார். என் தம்பியை இழந்து நானும் என் குடும்பமும் எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். தெரியுமா?'' சிபி கோபத்துடன் பற்களை நறநறவென்று கடித்துக் கேட்க,

''சிபி... சிபி...''

''இவ்வளவுக்கும் காரணம் நீயும், உன் தங்கையும் தானே?''

''சிபி சிபி''

''என் தம்பி அப்படி என்னடி தவறு செய்தான்? உன் அருமை, பெருமையான தங்கையை காதலிச்சான். அது தவறா?''

உன் தங்கையும் அவன் காதலை ஏற்றுக் கொண்டு அவனோடு சுற்றித் திரிந்து அவனை பைத்தியமாக்கி கடைசியில் கழற்றி விட்டு விட்டு காதல் தோல்வியால் மனமுடைந்து வீடு, படிப்பு எல்லாத்தையும் தூக்கி போட்டு விட்டு எங்கே போனான்? என்ன ஆனான்னே தெரியலை.''

''சிபி உங்க தம்பியை பற்றி முழுமையாக தெரியாமல் பேசாதீங்க! அவன் கிட்ட இருந்த கெட்ட பழக்கத்தை பார்த்து விட்டுத்தான் என் தங்கை விலகி விட்டாள்.''

''என்னடி கெட்ட பழக்கம்? பணக்கார வீட்டு பிள்ளைங்க கிட்ட நல்ல பழக்கத்தை எதிர்பார்க்கிறது தப்புன்னு உன் தங்கைக்கு தெரியாதா? சிகரெட் பிடிப்பான். நல்ல நாட்களில் தண்ணியும் கூட அடிப்பான். இதெல்லாம் ஒரு கெட்ட பழக்கமா?'' என்று நித்திலாவை குற்றவாளி கூண்டில் ஏற்றி சிபி கேள்விகள் கேட்க....

''இல்ல வேற ஏதோ கெட்ட பழக்கம் இருப்பதைக் கண்டு விலகி விட்டாள். இது தப்பா?''

''அதுதான் என்னன்னு சொல்லித் தொலையேன்டி?''

''என் தங்கை என்னிடம் சொல்ல மறுத்து விட்டாள் சிபி. உயிருக்குயிரா உண்மையா காதலிச்சேன் பிரணவ்வை. அதனால் அவனை அசிங்கப்படுத்த விரும்பலைன்னு அழுதாள்.''

''பொய் சொல்லாதீங்கடி. உன் தங்கை விலகிப்போக மீண்டும் மீண்டும் காதலை கேட்டு என் தம்பி உன் தங்கையை சுற்றி வந்தான்.

அது ஒரு பெரிய தப்புன்னு நீ அவனை ஈவ்டீசிங் கேஸ் கொடுத்து உள்ளே தள்ளினாய். அவனை கேஸ் இல்லாமல் அழைத்து வர எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா? அதுவும் அந்த சமயம் நான் தொழில் விஷயமாக வெளிநாடு சென்றிருந்தேன். என் நண்பன் டாக்டர் ரவி தான் அவனை கேஸ் இல்லாமல் வெளியே அழைத்து வர உதவினான். விஷயம் பேப்பர், மீடியாவுக்கு தெரிந்திருந்தால் எங்க குடும்பமே இந்நேரம் தற்கொலை செய்து செத்திருப்போம். எங்க பணம், செல்வாக்கை வைத்து பிரணவ்வை வெளியே அழைத்து

வந்தும்... அவமானம் தாங்காத தம்பி எங்கோ கண்காணாமல் போய் விட்டான்.

இந்த செய்திகள் எதுவும் நித்திலாவுக்கு தெரியாது! அதனால் வாய யடைத்துப் போய் நின்று விட்டாள்.''

''இப்படி எங்க குடும்பமே சிதறி சின்னாபின்னமாகிப்போக காரண மாக இருந்த உன்னை பழிவாங்க எண்ணினேன்.

நாலு அடியாளை வைத்து அடித்தால்... உடல் காயம் ஓரிரு மாதத்தில் ஆறி விடும். அதுவே உன்னை கொலை செய்தால் நீ எந்த கஷ்டமும் அனுபவிக்காமல் நிம்மதியாய் போய் சேர்ந்து விடுவாய்.

அதனால் உன்னை அடிக்கவோ, கொல்லவோ விரும்பவில்லை.

உன்னை அடிக்க வேண்டும், நீ எழவே முடியாத அளவு. என்ன வென்று யோசிக்க உன் மனதில் அடித்தால் நீ மீளமாட்டாய் என்பதை உணர்ந்தேன். உன் மனதை அடிக்க கங்கணம் கட்டி உன் பின்னாடியே திரிந்தேன். என் கோடிக்கணக்கான பிசினெஸ்ஸை விட்டு விட்டு...

உன்னைப் பற்றி விசாரித்தேன். நீ சரியான திமிர் பிடித்தவள்! அடங் காப்பிடாரி. ஆண்களை வெறுக்கும் அல்லிராணி என்று தெரிந்து கொண்டேன். உன்னை என் ஆணவத்தால் வெல்ல முடியாது என் பதை உணர்ந்தேன்.

அன்பாலும், இரக்கத்தாலும் மட்டுமே உன்னை வெல்ல முடியும் என்று தெரிந்து கொண்டு உன் பின்னாடி நாயாக அலைந்த ஒருநாள் தான் அந்த தெருநாய் குட்டி அடிபட்டு விட்டது. நீ அதைக் காப்பாற்ற துடிக்க, உள்ளே புகுந்து உனக்கு உதவ ஆஸ்பத்திரி வந்து பின் வீடு திரும்பி பிறகு நாய்க்குட்டியின் நலம் விசாரிப்பை சாக்காய் வைத்து மீண்டும் மீண்டும் வந்து நான் ஒரு அநாதைன்னு கூறி உன் இரக்கத்தை சம்பாதித்து உன் ரசிப்போடு கூடிய பார்வையின் அர்த்தம் புரிந்து உன்னை சுற்றலில் விட்டு காதலை சொல்லி என்னை பிரிந்து இருக்க முடியாத நேசத்தை உன்னில் ஆழமாய் ஊன்றி என் தம்பி பட்ட அவ மானத்தை நீயும் பட வேண்டும் என்று போலீசில் சொல்லி நீ விபச ார கேஸில் விடிய விடிய ஸ்டேசனில் கண்ணீர் விட காலையில் காப் பாற்ற வந்தேன்.''

''அப்போ என்னை விபசார கேஸில் உள்ளே தள்ள நீங்க தான் கார ணமா சிபி?'' என்று கோபமாய் கேட்க,

''அந்த இன்ஸ்பெக்டர் என் நண்பன்.''

''பணம் செலவு செய்து கேஸ் இல்லாமல் செய்தேன்னு சொன்ன தெல்லாம்?''

''பொய் தான். அடுத்ததா இவளை அவமானப்படுத்தியாகி விட் டது! இவளை விட்டு பிரிந்தும் பெரும் வேதனையை கொடுக்க வேண்டும் என்று நினைத்த சமயம்... எங்காவது ஆளில்லாத இடத் துக்கு அழைத்துப் போகச் சொல்லி கெஞ்சினாய். மறுக்க முடியாமல்

அழைத்துப் போனேன்.''

''அப்போ என்னை உங்களோடு கூட்டிப்போக போன பண்ணையும், பண்ணை வீடும் உங்களது தானே? நண்பனோட பங்களான்னு பொய் சொன்னீங்களா சிபி?''

''ஆஹா என் செல்லம் கரெக்டா கண்டு பிடிச்சுட்டாளே.'' என்றவன் ''அவள் அருகில் வந்து அவள் கன்னத்தை நிமிண்ட, பெரும் ஆத்திரம் கொண்ட நித்திலா அவன் கையை பட்டென்று தட்டி விட்டாள்.

அவளின் அந்த செய்கையால் கோபமுற்ற சிபி ஓங்கி நித்திலாவின் கன்னத்தில் ஐந்து விரலும் பதியும் வண்ணம் அறைந்து விட்டான்.

## 20

**நி**த்திலா நிலைகுலைந்து போனாள். வலியில் உயிரே போய் விட்டது. தலைச்சுற்றி மயக்கமே வரும் போல இருந்தது. கண்களில் கண்ணீர் தாரை தாரையாக ஒழுகதது.

கொஞ்ச நேரம் தன்னை ஒருநிலைப்படுத்திக் கொள்ள நேரம் எடுத்துக் கொண்ட நித்திலா பின் எரி மலையாய் சீறினாள்.

''என்னை நீங்க காதலிக்கலைன்னு சொல்றீங்க. அப்புறம் எந்த உரிமையில் என்னை தொட்டு அறைஞ்சீங்க சிபி? ம்..?'' என்று கண் களை உருட்டி மிரட்டலுடன் கேட்டாள்.

''என்னோடு சுமார் ஒரு மாசம் அளவில் கை கோர்த்து ஒட்டி உரசி, கட்டின்னு திரிஞ்சியே அந்த உரிமையில் தான் அறைஞ்சேன். என் னிடம் யாரும் மரியாதை குறைவா இதுவரை நடந்ததில்லை. ஏய் நீ நான் தொட்டதுக்கு எதுக்கு அவ்வளவு அருவெறுப்பு காட்டினாய்? நீ முகம் சுளிக்காமல் இருந்திருந்தால் உன்னை அறைந்திருப்பேனா? '' என்று ஏளனமாய் கேட்க, நித்திலா கூசிப்போனாள்.

''சிபியின் மேல் இருந்த அளவு கடந்த பிரியத்தாலும், நம்பிக்கையாலும் தானே, அவனோடு ஒட்டி, உரசி, சுற்றி திரிந்தது. அதை எவ்வளவு இழிவாய் சொல்லி குத்திக் காட்டுகிறான். தேவை.. எனக்கு இது தேவை தான். ஆண்களையே பிடிக்காமல் வெறுத்து ஒதுக்கியிருந்த நான் சிபியிடம் தடுக்கி விழுந்ததுக்கு இந்த குத்தல் பேச்சு வேண்டும் தான்.

''ஏன்டி அரக்கி... மேலே மேலே என்னை கெட்டவனாக்குகிறே? உன் உடம்புல எங்கெங்கே மச்சம் இருக்கு. எத்தனை மச்சம் இருக்குன்னு அறிந்தவன், நான். அப்படிப்பட்ட நான் தொட்டதும் ஏன் இப்படி அவசரமாக தட்டி விட்டாய்?''

சிபியின் கேள்வியால் மேலும் மேலும் குன்றி கூசி நின்றவள்.

''அப்போ நீங்க என் சிபிங்கிற உரிமையில் தொட அனுமதித்தேன். இப்போ நீங்க என் சிபியில்லை. என் உயிர் நேசத்திற்குரிய சிபி நீங்க

இல்லை. வேறொருத்திக்கு சொந்தமாக போகிற நீங்க தொட்டதும் அருவெறுக்குது.

உங்களை நான் தொட அனுமதித்தால் என் மனசுல மன்மதனா, என் கணவனா, என் இதயத்தை திருடிய கள்வனா குடிவச்சிருக்க, என் சிபிக்கு அது பிடிக்காது. அவருக்கு நான் துரோகம் செய்தாற்போலாகும். என் சிபியோட கற்பனையில் வாழ்ந்துகிட்டு இருக்கேன். இன்னும் என் காலமெல்லாம் வாழ்வேன்'' என்று உணர்ச்சிகள் மின்ன நித்திலா பேசி முடிக்க அருகில் வந்து அவள் கண்கள் இரண்டையும் துளைக்கும் வண்ணம் பார்வை பார்த்த சிபி.

''ஏய் நான் மனம் இளகி உன்னை ஏத்துக்குவேன்னு நாடகம் நடிக்கறீயா?''

''நான் யாரிடமும் நடிக்க வேண்டிய அவசியமில்லை. என் நெஞ்சிலிருந்து வரும் நிஜ உண்மையை நம்பறதும், நம்பாததும் உங்க விருப்பம். அதுக்காக நான் கவலைப்படவும் போறதில்லை.''

''எனக்கும் தீபனாவுக்கான திருமணங்கிற பேச்சு, சிறு வயதிலிருந்து இருக்கு. நான் கட்டிக்கப்போற பெண்ணுக்கு உண்மையானவனா, கற்புள்ளவனா இருக்கணும்ன்னு நினைச்சேன். அதை தான் கடைப்பிடிக்க முடியாமல் போனது. நான் கட்டுப்பாடோடு தான் இருந்தேன். ஆனால் சூழ்நிலையும், உன் சுரமும், இளமையும், தனிமையும் சேர்ந்து அப்படி வழி தவற வைத்து விட்டது. ஆனாலும் இப்படி தேவதை போன்ற அழகியிடம் என் கற்பபை இழந்ததில் என் கற்புக்கு பெருமை தான்.''

சிபி பேசப் பேச, நித்திலாவின் இதயம் கடலாய் கொதித்தது.

இதைச் சொல்ல நான் வெட்கப்பட வில்லை. உன்னை சந்தித்த கொஞ்ச நாளில் உன் அழகிலும், உன் அறிவிலும், உன் பிரியத்திலும், உன் ஜீவகாருண்யத்திலும் என் மனமும் மதிகெட்டு மயங்க ஆரம்பித்தது. வந்த வேலையை விட்டு விட்டு உன்னில் மயங்கி முரண்டு செய்த மனதிற்கு பலமான குட்டு போட்டு, பெரிய கயிறு போட்டு கட்டி என் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர பெரும் சிரமப்பட்டேன்.

உன்னை நல்ல சூழ்நிலையில் சந்தித்திருக்க கூடாதா என்று யோசித்து யோசித்து இப்போதெல்லாம் என் தூக்கமே போய் விட்டது. உன் நினைப்பை என்னிடமிருந்து அணை போட்டு நிறுத்த தான், இந்த தீபனா திடீர் திருமணம். நீ எதற்கு வந்தாய்? இந்த திருமணத்தை நிறுத்தவா?'' என்று புருவம் உயர்த்தி கேட்க.

''அவ்வளவு மட்டமான பெண் நானில்லை. எனக்கும், சுய கவுரவம், சுய மரியாதையெல்லாம் நிறைய இருக்கு, சிபி சார்.''

''சாரா?'' விழியுயர்த்தி நம்பாமல் பார்த்து கேட்க...

''ம்... அந்நியரை சார் என்று மரியாதையாய் அழைப்பது தானே பண்பாடு! சிபி சார் என்னை ஏமாற்றிய காரணம் தெரிந்து போக

வந்தேன். உங்களிடம் வாழ்க்கை பிச்சை கேட்க வந்தேன்னு நினைச்சீங்களா? காதல்... கெஞ்சிப் பெறுவதோ, கேட்டுப் பெறுவதோ இல்லைன்னு தெரியும். அது தானா இரு இதயங்களின் சங்கமத்தால் அரும்ப வேண்டும்ன்னும் தெரியும், மிஸ்டர் சிபி.''

நியு இயர் கொண்டாட்டத்தை தனது தோழிகளுடன் கொண்டாடப்போகிறேன்னு என்னிடம் பொய் சொல்லி, உங்க தம்பியோடு மகாபலிபுரம் சென்ற தன்யா, உங்க தம்பியிடம் என்ன கண்டாளோ தெரியவில்லை. ஒரேயடியாய் சொல்ல மறுத்து விட்டாள். அதன் காரணமாய் உங்கள் தம்பியை வெறுத்து வேண்டாம் என்றாள்.

உங்கள் தம்பி அவளை விடாமல் மீண்டும் தொல்லை தந்தான். உங்கள் தம்பியை நானும் நேரில் சந்தித்து எச்சரித்தேன். என் எச்சரிப்பையும் லட்சியம் செய்யாததால் போலீசில் புகார் செய்தேன்.

ஒரு வேளை நாங்கள் நிரபராதியாக இருந்து உங்கள் தம்பி குற்றவாளியாக இருந்தால் நீங்கள் எனக்கு கொடுத்த தண்டனையை சீர்படுத்த முடியுமா, சிபி சார்?''

நித்திலாவின் கேள்வியால் சிபி சிலையாய் நின்று விட்டான், பதில் பேச முடியாமல்.

''என் மனசு, என் கற்பு எல்லாத்தையும் அழித்து, என் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கிய உங்களை இப்போது கூட என்னால் சபிக்க முடியாது சிபி! என்னால் என் உயிர் நேசத்திற்கு உரியவர், நீங்கள். நீங்க அந்த தீபனாவை கட்டி சந்தோஷமா, நிறைய பிள்ளைகளைப் பெற்று இணை பிரியாமல் வாழ வேண்டும். சரி நான் வருகிறேன்.''

நித்திலா எழுந்து கம்பீரமாய் வெளியே செல்ல நடக்க... இது நேரம் வரை மூச்சு விட மறந்து சிலையாய் நின்ற சிபி,

''ஏய் நில்லுடி'' என்று குரலில் கடுமை காட்டி கத்த நின்று மலர்ச்சியோடு திரும்பிப் பார்த்தாள்.

''எக்கச்சக்க தொழில்கள், பெரிய பெரிய மால்கள், தியேட்டர்ஸ் சொந்தமாய் ஏகப்பட்ட சொகுசு பேருந்துகள் பெரிய நிலப்பரப்புடன் கூடிய பண்ணையும், பழந்தோட்டங்களும் ஊட்டி, கொடைக்கானலில் தேயிலை, டீ எஸ்டேட்ஸ் இப்படி ஏகப்பட்ட சொத்துக்களுக்கு சொந்தக்காரனான நான் உனக்கு கிடைக்கவில்லையேன்னு வருத்தமில்லையா?'' என்று சிபி கேட்க, சிறிய கேலிப் புன்னகையை உதிர்த்த அவளுடைய உதடுகள்.

''நான் நேசிச்சது சிபியின் மனசைத் தான். நான் நேசிச்ச சிபி பணக்காரன்னு இப்போ தான் தெரியும். பணத்தின் மேல் ஆசையுள்ளவளாய் இருந்திருந்தால் மெக்கானிக்குன்னும்,

அனாதைன்னு சொன்ன உங்களை நிராகரிச்சிட்டு என் அழகுக்காகவும், அறிவுக்காகவும் என்னையே வட்டமிட்ட என் பள்ளி கரஸ்பாண்டண்ட் மகனையும், என் தெரு பணக்கார பசங்களில் ஒருத்தனையும் தேடிப் பிடிச்சில்ல, என் மனசை ஒப்படைச்சியிருப்பேன். சேனம் பூட்டின குதிரையா உங்களைப் போல நேர்கோட்டுல, நியாயம் தப்பி யோசிக்கிற உங்களிடம் என்னைப் புரிய வைக்க முடியாது. இனி புரிய வைக்கணும்ன்னும் ஆசையில்லை. நீங்க நல்லா இருங்க, சிபி! காப் பிளஸ் யூ'' கூறி விட்டு வெளியேறிய நித்திலா எதிரில் வந்த டாக்டர் ரவியை கவனிக்காமல் மோதி விழப் போக அவளைப் பிடித்து நிறுத்தியவன்

''பார்த்து பார்த்து ஜாக்கிரதைம்மா'' என்று அன்பாய் கூற.

''ஜாக்கிரதையாய் இருந்திருந்தால் ஏன் அண்ணா எனக்கு இந்த நிலைமை?'' என்று வெளியேறினாள்.

அவள் கூறிய அண்ணாவும், கண்களில் தேங்கி நின்ற கண்ணீரும், அதில் தெரிந்த சோகமும் ரவியின் நெஞ்சை நெகிழ்த்தியது.

## 21

**''ஹா**ய் ரவி, என்னடா திடீர் விசிட்?'' என்று கூறி சிரித்த சிபியைப் பார்த்து...

''யார் அந்தப் பெண்? கண்ணில் கண்ணீரும், முகத்தில் வேதனையும், சோகமுமாய் போகிறாள்?'' என்று கேட்க,

''சிபி மவுனம் காத்தான்.

''உனக்கு தெரிஞ்ச பெண்ணா, சிபி?''

''உன்கிட்ட மறைக்க விரும்பவில்லை ரவி. அவள் பேரு நித்திலா. உனக்கே தெரியாமல் இந்த இரண்டு மூன்று மாதத்தில் சில ரகசியங்கள் இருக்கு ரவி.''

''ரகசியமா? அது தான் என்ன? அந்தப்பெண் உன்னால் பாதிக்கப்பட்டவளா?''

''என்னை கெட்டவனாக்கியதே அவள் தான். அவள் யார் தெரியுமா? தன்யாவோட அக்கா. என் தம்பியை போலீஸ் ஸ்டேஷன் அனுப்பியவள். நான் வெளிநாட்டில் இருக்க, உன் உதவியாய் எங்க குடும்ப மானம் சந்தி சிரிக்காமல் போனது. என் தம்பியை இழந்து, குடும்பம் பெரிய பாதிப்புக்கு உள்ளாக காரணமா இருந்த நித்திலா இவள் தான்.''

''இவள் மேல் என்னடா தப்பு? பிடிக்கலேன்னு சொல்லியும் அவள் தங்கை பின்னாடி சுத்தினது நம்ம பிரணவ் தான். பிரணவ்வை கட்டுப்படுத்த முடியாமல் போக தான் காவல் நிலையத்தின்

உதவியை நாடி இருக்கிறாள். அவள் நிலையில் நீ இருந்தாலும் இந்த வேலையைத்தான் செய்திருப்பாய்.''

''என் தம்பியின் காதலை ஏற்று அவன் பின்னாடி தன்யாவும் சுத்தியிருந்தாள்.''

''நல்லவன்னு நினைச்சி காதலிச்சா. அவன் கெட்டவன்னு தெரிஞ்சி விலக்கப் பார்த்தவளை விட்டு இருக்கனுமில்லையா, பிரணவ்?''

''என் பிரணவ் கெட்டவனா இருப்பான்னு நீ நினைக்கிறீயா?''

''ஒருவேளை இருந்திருந்தால்?''

''கண்டிப்பாய் மாட்டான். குடிப்பான். பொண்ணுங்களை சைட் அடிப்பான். இதைத்தவிர எதுவும் கெட்டப் பழக்கத்தை நான் பார்த்ததில்லை.''

''உன் கணிப்புபடி பிரணவ் நல்லவனாவே இருக்கட்டும். சரி, நீ இந்தப் பெண்ணை என்ன செய்தே?''

''மூன்று மாசமா மெக்கானிக், அனாதைங்கிற போர்வையில் அவளோட சுற்றி, அவள் மனசை கெடுத்து'' என்று ஆரம்பித்து முழுவதையும் ரவியிடம் சொல்லி முடித்தான் சிபி.

''நீ அப்பப்போ காணாமல் போக இது தான் காரணமா? சரி... நீ அவள் மனசை மட்டும் தான் திருடினாயா? இல்ல இவ்வளவு அழகான பெண்ணோட'' என்று கூறி அதற்கு மேல் கேட்க நாக்கு வராமல் நிறுத்தி விட்டு சிபியைப் பார்க்க...

''அவளே விரும்பி ஒரு நாள் என்னை நம்பி அவளை எனக்கு கொடுத்தாள்'' என்றவனின் இதழ்கள் அழகாய் விரித்து புன்னகையை சிந்த...

''ச்சே... இப்படி ஒரு நம்பிக்கை துரோகியா, நீ? சிபி, நீ எவ்வளவு நல்லவன். இப்படி ஒரு கீழ்த்தரமான செயலில் எல்லாம் ஈடுபட்டிருப்பேன்னு என்னால் இன்னமும் நம்ப முடியவில்லை. உனக்கு மனசாட்சின்னு ஒண்ணு இருக்கா? இப்போ இரண்டு பெண்களோட நம்பிக்கையை இப்படி நாசமாக்கி இருக்கிறாயே. தீபனா உன்னை எவ்வளவு நல்லவன்னு நம்பிக் கொண்டு இருக்கிறாள். இந்தப் பெண் நித்திலா ஒருபடி மேலே போய் சகலமும் நீதான்னு உன்னிடம் தன்னையே கொடுத்து விட்டு ஏமாந்து இருக்காளே.''

''அவள் செய்த தவறுக்கு தண்டனை, இது.''

''உடம்பில் காயம் பட்டால் ஆறி விடும். ஆனால் மனதில் பட்ட அடியும், ரணமும் அவள் உயிர் உள்ளவரை ஆறுமா? நல்ல பெண் போல தெரிகிறாள். அவள் எதிர்காலத்தை வீணடித்து விட்டு வந்திருக்கியே. இது உனக்கே நியாயமா? சரி ஒரு பெண்ணின் மனதை கெடுத்து, கற்பையும் களவாடி விட்டு வந்த கள்வன் நீ. உனக்கு என்ன தண்டனை தரலாம்? ம்? அவள் தவறே செய்திருந்தாலும் தண்டனையைத் தர நீ யாரடா? அந்த வேலையை கடவுளிடம் கொடுத்து விட்டு, நீ உன்

வேலையை பார்த்து இருக்கலாம், இல்லையா?''

தீபனா உடனான திருமணத்தையும் நிறுத்த முடியாது. நிச்சயதார்த்தம், தேதி, பத்திரிகைன்னு போயாச்சு. இப்போ கண்ணீரோடு வந்த நித்திலாவுக்கும் எதுவும் செய்ய முடியாது.''

''ஏய் ரவி அவளோட பழகின எனக்கே அவள் மேல் இரக்கம் இல்லை. உனக்கு ஏன் இந்த பரிதாபம், பச்சாதாபம், இரக்கமெல்லாம்? உன் வேலையை மட்டும் பார், ரவி!'' என்று சிபி கடுமையாய் கூற...

''சிபி உன் நெஞ்சை தொட்டு சொல்லுடா? நித்திலாவோடு பொய்யாப் பழகி பொய்யா காதலிச்சேன்னு சொல்றீயே! நீ எந்த சந்தர்ப்பத்திலும் நித்திலாவிடம் நெகிழவில்லையா, நேசம் வைக்கவில்லையா?''

இப்படி ரவி கேட்டதும், உடனே பதில் சொல்ல முடியாமல் குனிந்த சிபி, பின்...

''நானும் பொய் சொல்ல விரும்பலை. ரவி. நித்திலாவிடம் நிறைய நேரம் நெகிழ்ந்திருக்கிறேன். அவள் எனக்காக ஏங்கி தவித்தபோது, சமைத்து ஆசையா பரிமாறியபோது நிஜமாவே நான் அனாதைன்னு நினைச்சி என் மேல் அன்பை பொழிந்தபோது, அந்த முட்டை கண்ணை விரிச்சி விரிச்சி என்னை ஒரு பார்வை பார்த்து மூடுவா பாரு. அதுக்கெல்லாம் நான் அடிமையாகிப் போனேன் தான்.

அவளை விட்டு பிரிஞ்சி வந்தும், அவள் நினைவு நெஞ்சுக்குழியில் இருந்து சதா நிம்மதியா இருக்கவிடலே, ரவி. சாப்பிட முடியாமல், தூங்க முடியாமல் ரொம்ப கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

அந்த கஷ்டத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க தான் தீபனா உடனான நிச்சயம் எல்லாம் நடந்தது.

இதுநாள் வரை அந்த முட்டைக்கண்ணு ராட்சசி என் நெஞ்சுக்குழியில் இருந்து தான் நிம்மதியை கெடுத்துக் கொண்டு இருந்தாள். ஆனால், இப்போது நேரில் கண்ணீரோடு வந்து காரணத்தை தெரிந்து போக வந்தேன். கல்யாணத்தை நிறுத்த வரவில்லை. நீங்க நல்லாயிருங்க, சிபி'ன்னு வாழ்த்த வேறு செய்துட்டுப் போறாள்.

என் இதயத்தை திருடிய கள்ளி, என் தம்பி காணாமல் போனதுக்கு காரணமாகி இருக்காமல் இருந்திருக்க கூடாதா? என்று என் மனசு சதா புலம்பிக்கிட்டே இருக்கு ரவி. நித்திலாவை, நான் நல்ல சந்தர்ப்பத்தில் கண்டு, அவள் மேல் காதல் கொண்டு இருக்க கூடாதா, ரவி?'' என்று வாடிய முகத்துடன் சிபி சொல்ல.

''இது துரோகம். பச்சை துரோகம், சிபி. நித்திலாவை மறக்கவும் முடியாமல் தீபனாவை நினைக்கவும் முடியாமல் எப்படிடா நீ தீபனாவைக் கட்டி வாழுவே?''

''நித்திலாவை மறக்க முயற்சிக்கிறேன், ரவி.''

''எதுக்கு மறக்கணும்? அப்பாவிடம் நான் பேசட்டுமா?''

''வேண்டாம், ரவி. எனக்கும் தீபனாவிற்குமான முடிச்சி சிறு

வயதிலிருந்தே இருக்கு. இடையில் புகுந்து குழப்பிகிட்டது, நான். நித்திலாவை தண்டிக்க போய் என் மனசுக்கு நானே தண்டனையை தருவது எந்த விதத்தில் நியாயம்? என் குடும்பம் உருகுலைய காரணமான நித்திலாவுக்கு நான் சரியான தண்டனையை தான் கொடுத்திருக்கிறேன். அவள் அனுபவிக்கட்டும்.

என்னோடவே வளர்ந்ததாலோ என்னவோ தீபனா மேல் துளி கூட நேசம் வந்ததில்லை. இனி, தீபனாவை மணந்து அவளை உயிருக்குயிரா நேசிக்க போறேன்.''

சிபி இப்படி கல் மனசுடன் கூற, ரவிக்கோ..

''அய்யோ... நித்திலா பொண்ணு பாவமாச்சே. தன்னால் அவளுக்கு உதவ முடியவில்லையே'' என்று அவனின் சின்ன இதயம் பதறியது.

சிபி வெளிநாட்டில் இருந்து வந்த கொஞ்ச நாளில் அவளின் அட்ரஸ் கேட்க, ரவி தான் தந்தான்.

சிபி இப்படி அந்த பெண்ணை பழிவாங்க புறப்படுவான் என்று அப்போது ரவிக்கு தெரியாது.

சிபி மட்டும் சொல்லியிருந்தால், இவ்வளவு பெரிய தீங்கிழைக்க சிபியை விட்டிருக்க மாட்டான் ரவி.

நித்திலாவுக்கு ஏற்பட்ட பரிதாப நிலை.

நித்திலாவை தண்டிக்க சென்று, தனக்கே தண்டனையை கொடுத்துக் கொண்ட சிபியின் பச்சாதாபத்திற்குரிய நிலை.

தனக்கு கணவனாகப் போகும் சிபி, ராமனுக்கு ஒப்பான கற்புக்கரசன் என்று நினைத்துக் கொண்டிருக்கும் தீபனாவின் நம்பிக்கை பொய்த்துப் போன நிலை.

இது எதுவும் நேர ரவி விட்டிருக்க மாட்டான், சிபி மட்டும் உண்மையை சொல்லியிருந்தால்!

## 22

**மா**லை 5.00 மணி.

வானத்தை மேகங்கள் சிறைப்பிடித்திருந்தன.

சிறைபட்ட வானமோ அழ ஆரம்பிக்க, அதன் விழிகளில் இருந்து சொட்டு சொட்டாய் இறங்கிய நீர், நேசத்துடன் பூமியை செல்லமாய் தீண்டி சிலிர்க்க வைத்துக் கொண்டிருந்த அந்த பொழுதில்.

சிபியின் அலுவலகத்தில் இருந்த அனைவரும் மழையை காரணம் காட்டி நேரத்தோட சென்று விட்டனர்.

சிபி, அவனது அறையில் கையெழுத்திட வேண்டிய கோப்புகளை புரட்டிக் கொண்டிருந்தபோது,

சார்... மழை வலுக்கும்போல இருக்கு. லேசா இருக்கும்போதே வீட்டுக்கு கிளம்புங்க என்று பியூன் வந்து கூற...

நான் கிளம்பிக்கிறேன். நீ கிளம்பு என்றதும் பியூன் சென்று விட்டான்.

சிபி எழுந்து தனது அறையின் ஜன்னலை திறக்க மழை பூப்பூவாய் தூறிக் கொண்டிருந்தது.

மழையை கண்டவுடன் நித்திலாவின் அழகு முகம் ஞாபகத்தில் வந்தது.

நித்திலாவுக்கு மழையென்றால் ரொம்ப பிடிக்கும். மழையை கண்டவுடன் ஆனந்தமாகி விடுவாள்.

''ஏய் நித்தி... ஏன் நனையறே? வா வீட்டுக்குப் போகலாம்.'' சிறு கண்டிப்புடன் கூறி அவள் கைப்பற்றி இழுக்க,

''ம்கூம்! மழையில நனையணும், சிபி. சிபி, மழையில் நனைந்தபடி உங்க வண்டியில உங்க பின்னாடி பயணிக்கணும்ன்னு ஆசை ஆசையா இருக்கு, சிபி. அதுக்காக தான் அழைச்சேம்பா.''

''மண்ணாங்கட்டி, உடம்புக்கு வந்து படுத்து விட்டால் போ... போய் இப்படிப்பட்ட சில்லரை தனமான ஆசையை கை விட்டு பெரிய பிசினஸ் மேன் போல நடந்துக்கோ. அம்மா மென்மையாய் மிரட்டியனுப்பினாள்.''

அன்று இரவு மழை ஒத்துக் கொள்ளாமல் போய் சிபி நல்ல சுரத்தில் தவித்துப் போனான்.

மறுநாள், சுரம் குறையாமல் போனாலும் நித்திலா தன்னைப் பார்க்காமல் தவித்துப் போவாள் என்று காலையிலேயே போய் நிற்க.

அவனை அனலாய் கொதிக்கும் சுரத்தோடு கண்டவள்.

''சிபி... என் கண்ணா, ஸாரிப்பா ஸாரி.'' அவனை இழுத்து மடியில் போட்டு, அவள் தவித்த தவிப்பும், துடித்த துடிப்பும், அவனை கட்டிக் கொண்டு அழுத அழுகையும்...

இன்னும் மறையாமல் சிபியின் நெஞ்சத்தில் ஊஞ்சல் கட்டியாடியது.

நித்திலா நீ எப்படி இருக்கே?

அவனையே அனுமதி கேளாமல் அவன் வஞ்சக நெஞ்சம் கேள்வி கேட்டது.

நித்திலாவின் நினைவுகளில் சுகமாய் தவழ்ந்து கொண்டிருந்தபோது தீபனா உள்ளே நுழைந்ததை அவன் அறியவில்லை.

தீபனா அருகில் வந்து அவன் பின் பக்கமாய் கட்டியணைத்து அவன் கழுத்தில் இதழ் பதிக்க.

சட்டென்று உடலில் தீப்பற்றிக் கொண்ட கணக்காய் அவளை தட்டி தள்ளி விட்டு,

''ச்சீ... என்று அருவெறுப்பு காட்ட.''

‘‘இன்னும் கொஞ்ச நாளில் உங்களை கட்டிக்கப் போறவள்! என்ன தப்பு? ஏன் இப்படி அருவெறுக்கறீங்க, அத்தான்?’’ என்று தீபனா கொஞ்ச...

‘‘ஏய்... போய் போயிடு!’’ என்று கத்த தீபனா கோபத்தோடு ‘‘நான் ஆயிரம் கனவுகளோடு நம்ம திருமணத்தை எதிர்பார்த்து காத்திருக்க, நீங்க இப்படி சாமியார் போல இருக்கீங்களே. உங்களை கட்டி நான் என்னை சுகத்தைக் காணப் போறேனோ. உங்களுக்கு, என்னை பிடிக்கவில்லையா? பிடிச்சிருக்கா? எனக்கு இப்பவே தெரியணும்.’’

‘‘ஏய்... போ... போய் வேலையைப் பார்.’’

‘‘போக முடியாது. பதில் சொல்லுங்க?’’

‘‘உன் கேள்விக்கெல்லாம் பதில் சொல்ல முடியாது.’’

‘‘வேற யார் கேட்டால் பதில் சொல்வீங்க?’’

‘‘ச்சீ... தள்ளு! நீ போக வேண்டாம். நான் போறேன்’’ என்று சாவியை எடுத்துக் கொண்டு சிபி விருட்டென்று கிளம்ப, தீபனா கண்ணீர் சிந்த நின்று விட்டாள்!

சிபியின் கார் கிளம்பி விட்டது.

தீபனாவின் அணைப்பு பிடிக்கவில்லை.

தீபனாவின் முத்தம் பிடிக்கவில்லை.

நித்திலாவின் அணைப்பும், முத்தமும் பிடிச்சிருக்கா? அவன் மூளை அவனை கேள்விக் கேட்டது.

ஆமாம்! என்று மனம் ஒத்துக் கொண்டது.

நித்திலாவின் அழகு சிபிக்கு பிடித்துப் போனது.

நித்திலாவின் மேனியில் வீசும் இயற்கையான பெண் வாசம் பிடித்துப் போனது.

நித்திலாவின் மாயப் புன்னகை பிடித்துப் போனது.

நித்திலாவின் விழிப்பார்வையும், நேசமான தொடுகையும் காதலோடு கூடிய அணைப்பும் அந்த சின்னஞ்சிறு சிப்பி இதழ் ஒற்றலும் ரொம்பவே பிடித்துப் போனது.

தீபனாவை கொஞ்சம் கூட நெஞ்சம் ஏற்றுக் கொள்ளவில்லை.

பிடிக்காத ஒருத்தியோடு இன்னும் மூன்று மாதத்தில் திருமணம்.

நேசம் ஒருத்தி மேல்.

வெறுப்பு ஒருத்தி மேல்!

நேசம் கொண்டவளை மணக்கவும் முடியாமல், வெறுப்பு கொண்டவளை ஒதுக்கவும் முடியாமல், அய்யோ என் நிலைமை இப்படியா மோசமாய் போக வேண்டும்.

நித்திலா... நித்தி, நித்திம்மா.

உன்னை நினைத்த ... இன்னொருத்தியை நினைக்க

முடியவில்லையே.

உன்னை தொட்ட கையால் இன்னொருத்தியை தொட முடியவில்லையே.

ஏய் வஞ்சக்காரி. ஏன்டி இப்படி என்னை வஞ்சிக்கிறே?

சிபி தன் நினைவின்றி காரை வேகமாய் ஓட்டிச் செல்ல, ஒரு திருப்பத்தில் எதிரில் வந்த லாரி மீது கார் மோதி பெரும் விபத்து நேரிட்டது.

சிபிக்கு மண்டை உடைந்து தலையிலிருந்து ரத்தம் சொட்ட அப்படியே ஸ்டீரியங் மேல் சரிந்து மயக்கமானான்.

## 23

ரவி மருத்துவமனை!

ஐ.சி.யூ.வில் சிபி அனுமதிக்கப்பட்டான்.

தலையில் அடிப்பட்ட இடத்திற்கு கட்டு போடப்பட்டது.

வலது கையில் எலும்பு முறிவு.

வயிற்றில் பலமான அடி.

சிகிச்சை முடிந்து ஆழ்ந்த மயக்கத்தில் இருந்தான், சிபி.

சிபியின் தாய் மரகதம் சக்கர நாற்காலியில் ஆஸ்பத்திரிக்கு வந்து சிபியை கண்டு கதறி விட்டாள். அவளைத் தேற்ற சிபியின் தந்தை ராமநாதன் ரொம்பவே கஷ்டப்பட்டு விட்டார்.

''ஆண்ட்டி அங்கிள் இனி பயமில்லை! தலையில் அடி பலம் தான்! வலது கையில் எலும்பு முறிவு! சீக்கிரம் குணமாகிவிடும்!'' என்று ரவி பெற்றவர்களை தேற்ற முயன்றான்!

''சிபி அத்தான் எப்போ முழிப்பார்?'' தீபனா கண்ணீரோடு கேட்க

''மயக்க மருந்து செலுத்தி இருக்கும்மா! டிரீட்மென்ட் கொடுத்திருக் கிறோம்! மருந்தின் வீரியம் குறைந்து விழிப்பான்!''

''இன்னும் மூன்று மாதத்தில் திருமணம்! சிபியின் உடம்பு குணமா யிடுமா, ரவி அம்மா'' கேட்க..

''சரியாயிடும் ஆன்ட்டி! கவலைப்படாதீங்க!''

ரவி பெரியவர்களைத் தேற்றினான்

மறுநாள் காலை சிபி கண் விழித்தான்!

அத்தனை பேரும் மகிழ்ந்தனர்!

அவர்களை குளித்து, உண்டு வருமாறு வற்புறுத்தி அனுப்பி வைத் தான், ரவி!

ரவியும், சிபியும் மட்டும் அந்த அறையில் இருந்தனர்!

''சிபி மழை நேரத்துல காரைப் பார்த்து ஓட்டக் கூடாதா? கவனத்தை

எங்கே வச்சிருந்தே? காரணம் என்ன, சிபி?'' என்று பாசமாய் ரவி சிபியிடம் கேட்க.

''எல்லாத்துக்கும் காரணம், அவள்தான்!''

''யார்? தீபனாவா?''

''ம்கூம்! நித்திலா!'' அந்தப் பேரை சிபி மெல்ல உச்சரிக்க ஆச்சரிய மாகிப் போன ரவி...

''நித்திலாவா? அவளைத்தான் நீ மறந்துவிட்டதா சொன்னியேடா!''

''மறந்துவிட்டேன் மறந்துவிட்டேன்னு சொல்லிக்கொண்டு அவளை மறக்க முடியாமல் நெஞ்சம் மருகுதுடா, ரவி! அந்த வஞ்சகக்காரி அந்த அரக்கி அந்த ராட்சசி இங்கே இங்கே இருந்து ரொம்ப கஷ்டப்படுத்த றாடா, ரவி!'' என்றவன் தனது நெஞ்சத்தைத் தொட்டுக் காட்டினான்!

''ரவி என்னால் அவளை மறக்க முடியலேடா! அவளோடு பழகின இனிமையான தருணத்தையும், ஒவ்வொரு நிமிஷத்தையும் இந்த பாழாய்போன இதயம் அசைப்போட்டு அசைப்போட்டு என்னை வேத னைப்படுத்துது! நான் என்ன செய்வேன், ரவி? நேற்று ஆபீஸ் வந்த தீப னாவைப் பார்க்க பிடிக்கலே! தீபனா என்னைத் தொட்டது பிடிக்கலே! இப்படிப்பட்ட மனநிலையில் எப்படிடா நான் தீபனாவை மணப்பேன்? அவளோடு மனம் ஒன்றி வாழ்வேன்? இதையெல்லாம் நினைச்சிட்டே வண்டியை ஓட்டிதான் இந்த ஆக்ஸிடென்டே நடந்தது!''

சிபியின் கண்களில் லேசாய் கண்ணீர் எட்டிப் பார்த்தது!

அவன் கண்ணீரைக் கண்டு ரவியினுள் அந்த எண்ணம் எழுந்தது!

சிபியின் உடல் ஓரளவு தேறி வந்தது!

தலைக்கட்டு பிரிக்க ஓரளவு காயம் ஆறி இருந்தது!

கை கட்டு பிரிக்கப்பட்டு புதிதாய் மீண்டும் கட்டுப் போடப்பட் டது!

அன்று மாலை வந்த தீபனாவை, ரவி தன்னறைக்கு அழைத்துப் போய் அமர வைத்தான்,

''தீபனா நான் உனக்கு சொல்லப்போற விஷயம் ஷாக்கா இருக்க லாம்!''

''பீடிகை வேண்டாம்! சொல்லுங்க, ரவி.''

''உனக்கு குழந்தைகள்ன்னா ரொம்ப பிடிக்குமா?''

''ரொம்ப ரொம்ப பிடிக்கும்! சிபியை மணந்து ஆணும், பெண்ணு மாய் ஒரு பதினைந்தாவது பெத்து கொஞ்சி மகிழணும்னு ஆசையா இருக்கு, ரவி!''

தீபனா கண்கள் பளபளக்க கூறினாள்.

''இந்த ஆக்ஸிடெண்ட்ல சிபிக்கு வயிற்றில் நல்ல அடி தீபனா! அத னால்... அதனால்...''

''அதனால்?''

''மனசை தேற்றிக்கோ, தீபனா! இந்த ஆக்ஸிடெண்டில் சிபியின்

ஆண்மை நரம்பு பாதிக்கப்பட்டிருக்கு!''

''ஐயோ ரவி!''

''சிபியால் ஒரு பெண்ணை படுக்கையில் சந்தோசப்படுத்த முடியும்! அதில் எதுவும் குறையிருக்காது! ஆனால், அவனால் ஒரு குழந்தைக்கு தகப்பனாக முடியாது, தீபனா!''

''நிஜமா? நிஜமா?'' பதறினாள்.

''அதுக்கான டிரீட்மென்ட் எடுத்துக் கொண்டால் பாதிக்கப்பட்ட நரம்பு சரியாகி குழந்தை இருக்கலாம்! அல்லது சரியாகாமல் போய் குழந்தை இல்லாமலும் போகலாம்! பார்த்து பழகின பெண்ணுக்கு துரோகம் செய்ய முடியலை! அதான் உண்மையைச் சொல்கிறேன்!'' ரவி முடிக்க தீபனா அழுதாள்!

கொஞ்ச நேரம் கழித்து அவள் அழுகை கட்டுப்பட்டதும் ரவி கேட்டான்.

''இந்த குறையோடு சிபியை உன்னால் பரந்த மனதோடு ஏற்றுக் கொள்ள முடியுமா, தீபனா?''

''ம்கூம்! முடியாது, ரவி! எனக்கு குழந்தைகள் என்றால் கொள்ளைப் பிரியம்!''

''ஏதாவது குழந்தையை தத்தெடுத்து வளர்க்கலாம், தீபனா!

ம்கூம்! எனக்கு என் உணர்வில் மலர்ந்து உயிரில் கலந்து தோன்றும் குழந்தை தான் வேண்டும், ரவி!''

''சிபி பெரிய பணக்காரன்! அப்படிப்பட்டவனை இந்தச் சின்னக் காரணத்துக்காக இழக்கலாமா. தீபனா? நீ நினைச்சால் ஆயிரம் குழந்தைகளை தத்தெடுத்து வளர்க்கலாம்! அல்லது சிபி உனக்கு குழந்தையாகவும், சிபிக்கு நீ குழந்தையாகவும் மாறி வாழலாமே, தீபனா!''

எனக்கு பணத்தைவிட எனக்கே எனக்கென்று என்னில் மலரும் குழந்தை தான் முக்கியம்! அதனால் இந்த காரணத்தை அத்தை, மாமாவிடம் சொல்லி திருமணத்தை நிறுத்தப் போறேன்!

''ஐயோ தீபனா வேண்டாம்! சிபி, தாங்க மாட்டான்! சிபிக்கு இந்த குறை இருப்பது உனக்கும், எனக்கும் சிபிக்கு மட்டுமே தெரிந்த ரகசியமாய் இருக்கட்டும்! பிளீஸ்.''

''என்ன சொல்லி திருமணத்தை நிறுத்துவது?''

''சொந்தங்களில் நடக்கும் திருமணத்தால் குறையுள்ள குழந்தை பிறக்கும்னு அறிவியல் சொல்லுதுன்னு சொல்லலாம்!''

''இந்த காரணம் இதுக்கு முன்பே தெரியாதான்னு கேட்டால் என்ன சொல்வது?''

''உங்க விருப்பத்துக்காக தான் சம்மதித்தேன்! எனக்கொரு காதலன் இருக்கான்! அவனைத்தான் கட்டிப்பேன்னு சொல்லு?''

''காதலனா அப்படி ஒரு காதலனுக்கு நான் எங்கே போவேன்?''

''ஏன் என்னையெல்லாம் காதலனா ஏத்துக்க மாட்டீயா, தீபனா?''

''ரவி... ரவி...''

''உனக்கு என்னைப் பிடித்திருந்தால் உன் காதலனா இருக்க சம்மதம்! உன்னை கட்டிக்க மனப்பூர்வமான விருப்பம், தீபனா!''

''ரவியும், தீபனாவும் சிபியின் அறைக்கு வந்தார்கள்!''

''சிபி உனக்கு என்று தீபனாவிடம் கூறியவற்றைக் கூற சிபியோ பேரதிர்ச்சிக்கு உள்ளானான்!

இந்த குறையின் காரணமா தீபனா உன்னை மணக்க விரும்பலை, சிபி!''

''ஸாரி! சிபி அத்தான்! எனக்கு குழந்தைங்கன்னாரொம்ப பிடிக்கும்னு உங்களுக்கே தெரியும்! அதனால் நான் உங்களைக் கட்டிக்க முடியாது, சிபி அத்தான்! இந்த விஷயத்தைச் சொல்லி நான் திருமணத்தை நிறுத்த மாட்டேன்! பயப்படாதீங்க, சிபி அத்தான்! டாக்டர் ரவி என்னை கட்டிக்க விரும்பறார்! அதனால், ரவியை விரும்பறேன்! கட்டி வையுங் கன்னு சொல்லிதான் நான் திருமணத்தை நிறுத்தப் போறேன்!''

''தீபனா, உனக்கும் எனக்குமான திருமணம் நிற்பதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை! ரவியை நீ மணந்துக்கப் போவதிலும் நான் கஷ்டப்படவில்லை! ஆனால், எனக்கு இந்த குறையிருக்குன்னு தெரிஞ்சவுடன் ஒரே நிமிஷத்தில் என்னை தூக்கி எறிஞ்சதுதான் ரொம்ப கஷ்டமா இருக்கு!''

சிபி வேதனையுடன் கூறிவிட்டு படுத்துக் கொள்ள இருவரும் வெளியேறினர்!

அவனின் குறையும் தீபனாவின் நிராகரிப்பும் சேர்ந்து அவனைக் கஷ்டப்படுத்த உணவு இறங்கவில்லை! உறக்கம் கண்களைத் தழுவவில்லை!

நித்திலாவுக்கும், சிபிக்கும் அன்றொரு நாள் நடந்த உரையாடலே மனதில் தோன்றி இம்சித்தது!

## 24

**சி**பி டிஸ்ஜார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்த நான்கு நாளில் ரவியோடு வீட்டிற்கு வந்த நபரைக் கண்டு ஆனந்த அதிர்ச்சிக்குள்ளானான்!

'பிரணவ்!'

படிய வாரிய தலையும், நேர்த்தியாக உடுத்திக் கொண்டு வந்த பிரணவ்வைக் கண்டு வீடே குதுகலித்தது!

கொஞ்ச நேரம் அவனைப் பிரிந்தது இருந்த வருத்தத்தைப் பகிர்ந்து கொண்டார்கள்! பின் ரவி, பிரணவ்வை அறையில் விட்டுவிட்டு பெரியவர்கள் வெளியேறினர்!

பிரணவ் பிரிந்துபோய் கிட்டத்தட்ட ஒரு வருஷமாகிறது!

''அண்ணா.. அண்ணா'' என்று சிபியைக் கட்டி அழுதான்! பின்''

''பிரணவ் எங்களைப் பிரிஞ்சி இவ்வளவு கஷ்டத்தை கொடுத்து விட்டாயே! நீ இல்லாமல் நம்ம குடும்பம் சீரழிஞ்சு போச்சுடா! இந்த நிலைக்கு நம்மை தள்ளின அந்த சண்டாளி நித்திலாவை பழிவாங்கி விட்டேன்! அவளைப் பழிவாங்கப் போய் கடைசியில் அவள் மைவி ழியில் அவள் மையலில் விழுந்து நான் ஆக்ஸிடெண்ட் ஆகி கிடக்கக் கூட அந்த நித்திலாதான் காரணம்! ரவி நல்ல டிரீட்மென்டா கொடுடா! உடம்பு தேறிவந்து அந்த நித்திலாவையும், தன்யாவையும் நிற்க வைத்து பெட்ரோல் ஊத்தி கொளுத்தி கொன்னால்தான் என் மனம் சமாதான மாகும்! என்று சிபி ஆத்திரத்தோடு சொல்ல

''அண்ணா நீ கொல்ல வேண்டுமானால் முதலில் என்னைத்தான் கொல்ல வேண்டும்!''

''பிரணவ் நீ என்ன சொல்றே?''

''தவறு செய்தது நான்தான்! உங்களுக்கு நான் விளக்கமா சொன் னால்தான் புரியும்.'' என்றவன் கதையை சொல்ல ஆரம்பித்தான்.

''தினம் தினம் அவள் கல்லூரி வாசலில் நின்று தன்யாவிடம் ரொம்ப போராடிதான் அவள் காதலைப் பெற்றேன்! அன்று புது வருடப் பிறப்பு! நித்திலாவிடம் தோழி வீட்டுக்கு போய் புதுவருடத்தை கொண்டாடப் போகிறேன் என்று பொய் சொல்லி என்னோடு மகாபலிபுரம் வந்தாள்!

நாள் முழுக்க ஷாப்பிங் கடலில் குளியல் என்று பொழுதை கழித்து ரிசார்ட்டுக்கு போனோம்! அங்குதான் என்னோட இன்னொரு மறுபக் கத்தைக் கண்டு கொண்டாள்! நாள் முழுக்க கட்டுப்படுத்தி வைத்தி ருந்த போதைப் பழக்கம் இரவு அதிகமாக அண்ணா நான் போதையின் அசுரப்பிடியில் இருந்த காலம், அது!''

''பிரணவ் நீ என்ன சொல்ற?'' சிபி அதிர்ச்சியுடன் கேட்க

''அண்ணா என் பிரண்ட்ஸ் இதைப் பழக்கி விட்டு விட்டாங்க! பகலெல்லாம் கல்லூரி, படிப்பு என்று இருக்கும் நான் இரவானால் போதை மருந்துக்கும், மாத்திரைக்கும் அடிமையாகி அழிந்து கொண்டு இருந்தது உங்களுக்கெல்லாம் தெரியாது!''

''இடியட் இடியட் அன்று இரவு ரிசார்ட்டில் என்ன நடந்தது?''

''தன்யாவிடம் வெளியே நண்பனை பார்த்து வருவதாய் பொய் சொல்லி வெளியேறினேன்! பின் போதை மருந்தை உட்கொண்டு தள்ளாடி ரூமிற்கு வந்தேன்! என் கையிலும், கழுத்திலும் இருந்த தங்கத்திற்கு ஆசைப்பட்டு என் பின்பு வந்த மூன்று ரவுடிகள் என் பின்னாலே வந்து அறைக்குள் புகுந்து என் பணத்தையும், கையில், கழுத்தில் இருந்த நகைகளையும் அபகரித்தது இல்லாமல் என் கண் முன்னே அவள் கற்பை சூறையாட முயற்சித்தனர்! போதையின்

பிடியில் இருந்த என்னால் அவர்களை எதிர்க்கவும் முடியவில்லை! தன்யாவை காப்பாற்றவும் முடியவில்லை!

தன்யா தானாகவே நீண்டநேரம் போராடி அவர்களிடமிருந்து தன்னைக் காத்து தப்பித்து சென்னை வந்துவிட்டாள்!

போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி அவளைக் காப்பாற்றக் கூடி முடியாத கையாலாகாத என்னை வெறுத்து கல்லூரி, படிப்பு என்று தன்யா மாறிவிட்டாள். அவள் என்னை மன்னிக்க தயாராக இல்லை. நான் மீண்டும் காதலைக் கேட்டு அவளைத் தொல்லை செய்ய நித்திலா என்னை கண்டித்தும் கேளாமல் போக போலீஸ் ஸ்டேஷன் போக ரவி அண்ணாவின் உதவியுடன் நான் வெளியே வந்து தன்யாவிடம் சென்றேன்!

''ஏன் இப்படி செய்தே, தன்யா? என்று கேட்டதற்கு...''

உன் தொல்லை தாங்காமல் தான், பிரணவ்! போதை மருந்துக்கு அடிமையானவன்னு தெரியாமல் உன்னை நல்லவன்னு நம்பி தனியே உன்னோடு மாமல்லபுரம் வந்தபோது கண்ட கழிசடைகளிடம் என் கற்பை இழந்திருப்பேன்! அந்த கயவர்களிடம் இருந்த என்னைக் காப்பாற்ற முடியாத நீயெல்லாம் ஒரு ஆண்பிள்ளை என்று சொல்லி மீசையை முறுக்கிக் கொள்வதில் என்ன அர்த்தம்? நீ பணக்காரன் என்பதால் பல்லை இளித்துக் கொண்டு உன் பின்னால் வருவேன்னு நினைக்கறே! அது தப்பு பிரணவ்!

பிரணவ் உன்னை நம்பி மகாபலிபுரம் வந்து கற்பு பறிபோக இருந்தையோ நீ போதைப் பழக்கத்துக்கு அடிமையானவன் என்பதையோ என் அக்காவிடம்கூட சொல்லவில்லை! ஏனென்றால் நான் உன்னை என் உயிராய் நேசித்தேன், பிரணவ்!

நீ உன்னை உணரவில்லை, பிரணவ்! இது எப்படிப்பட்ட கெட்ட பழக்கம், தெரியுமா? இதிலிருந்து விடுபட பார், பிரணவ்! போதை மருந்து மீட்பு மையத்தில் சேர்ந்து குணமாகற வழியைப் பார், பிரணவ்! உனக்கு இப்போ படிப்பு, காதலைக் காட்டிலும் உன் உடல்நலமும், மனநலமும் முக்கியம்! ''

''நான் குணமாகி வந்தால் என்னை ஏற்றுக் கொள்வாயா, தன்யா?''

''முதலில் குணமாகி வா! பிறகு பார்க்கலாம்!'' என்று தன்யா சொல்ல

''பூரண குணமாகி வந்தால் நீ எனக்கு கிடைப்பாய் என்ற நம்பிக்கையில் போகிறேன், தன்யா!'' என்று சொல்லிவிட்டு ரவி அண்ணாவிடம் வந்தேன்!

சட்டென்று நினைவு வந்தவனாய்...

''ஐயோ இப்படி ஒரு உண்மை இருப்பது தெரியாமல் நித்திலாவை பழிவாங்கி விட்டேனே, ரவி! ஒரு நிரபராதிக்கு தண்டனை கொடுத்

துவிட்டேனே, ரவி! என் நித்திலா.. எப்படி இருக்காளோ! ரவி.. என் நித்திலாவை உடனே பார்க்கணும்! அவள் கால்ல விழுந்து மன்னிப்பு கேட்டு கதறணும், ரவி!'' என்று அழுகையுடன் சிபி கூற.

''உன் உடம்பு இருக்கும் நிலையில் அவ்வளவு தூரம் பயணம் செய்யக் கூடாது, சிபி! அவள் நெம்பர் கொடு! போன் செய்தால் வந் துவிட்டுப் போகிறாள்! நீ எப்போ அழைப்பேன்னு காத்துட்டு தானே இருப்பாள், அந்த நித்திலா!'' ரவி கூற...

''ரவி.. என் நித்திலாவை குறைச்சி எடை போடாதேடா! நித்திலா ஏழையா இருக்கலாம்! ஆனால், சுய மரியாதை, சுய கவுரவம் நிறைஞ்ச பெண், நித்திலா! என் நித்திம்மா, தன் கவுரவத்தை விட்டுக் கொடுத்து இங்கு வரக்கூடாது! தப்பு செய்த நான்தான் அவளைத் தேடிப்போக வேண்டும்!''

''நீ சொல்வது தான் சரிண்ணா! அண்ணியைத் தேடி நாமதான் போக வேண்டும்!'' பிரணவ் சொல்ல,

''ஏய் உனக்கு?'' என்று சிபி நம்பாமல் கேட்க

''எல்லாம் தெரியும், அண்ணா! உனக்கும், தீபனாவுக்கும் நிச்சயம் முடிந்துதான் நித்திலாவை நீங்க பழிவாங்கிவிட்டு வந்தது ரவி அண் ணாவுக்கு தெரியுமாம்! கல்யாணத்தை நிறுத்தவும் முடியாமல்.. நித் திலா அண்ணிக்கு உதவவும் முடியாமல் ரொம்பவே வேதனைப்பட் டாராம்!''

''அதான் கடவுளாய் பார்த்து எனக்கு ஆக்ஸிடெண்டை ஏற்படுத்தி அப்படி ஒரு பெரிய குறையைக் கொடுத்து அதன் காரணமாய் தீபனா என்னை மறுத்து கல்யாணத்தை நிறுத்தி சிபி கூறிக்கொண்டே போக..

''ஏய் ஏய் நிறுத்து! ரொம்ப கஷ்டப்படாதே! ஆக்ஸிடெண்டை ஏற்ப டுத்தியது கடவுள்தான்! ஆனால், உன் கல்யாணத்தை நிறுத்தியது, நான்! நீ இனி காலம் முழுக்க என்னைத்தான் கடவுளா வணங்க வேண்டும்!'' ரவி கூற

என்னடா சொல்ற?

''உனக்கு அப்படி ஒரு குறையெல்லாம் இல்லை! நீ நித்திலாவை மணந்து கணக்கு வழக்கு இல்லாமல் குழந்தையைப் பெற்று கொஞ்சி மகிழலாம்! நித்திலாவை நிரபராதி என அறிந்து நீயாக தீபனாவை விலக்கினால் தீபனாவின் மனசு வேதனைப்படும் இல்லையா? அதான் தீபனாவின் மனசு கஷ்டப்படக்கூடாதுன்னு இந்த ஆக்ஸிடெண்டை பயன்படுத்திக் கொண்டேன்! தீபனாவே இந்த திருமணத்தை நிறுத் தும்படி உனக்கு கற்பனையா ஒரு குறையை சிருஷ்டித்தேன்! அதற்குப் பரிகாரமா நானே தீபனாவை மணக்க சம்மதித்தேன்!

அடுத்ததா... நான் இவ்வளவும் செய்தது உனக்காகவும், நித்திலாவுக் காகவும் தான்! நீங்க ரெண்டு பேரும் சேரணும் என்பதற்காக தான்!''

''ரவி ரவி நீ கிரேட்டா! என்னை மீண்டும் உயிர்த்தெழ வைத்துவிட்டாய், ரவி!''

''கிளம்புடா ரவி! ஏய் பிரணவ் என்ன பார்க்கறே? உன் அண்ணியைப் பார்க்க வேண்டாமா? நித்திலா நம்ம வீட்டுக்கு வந்தாதானே பின்னாடியே தன்யா வருவாள்! அப்புறம் உன் மனைவி ஆவாள்!''

அண்ணா என்று சிபியைக் கட்டிக் கொண்டான், பிரணவ்!

கார் விரைந்து கொண்டிருந்தது!

''ரவி நித்திலா நல்ல பொண்ணு! அவள் என் மேல் கொண்ட நேசம் எத்தன உயர்வானது தெரியுமா'' என்று நித்திலாவோடு பழகியதை உணர்வுடன் பகிர்ந்து கொள்ள

''சரி சரி ரொம்ப எமோஷனல் ஆகாதே, சிபி! அது உன் உடம்புக்கு ஆகாதுடா!''

நித்திலாவின் வீடு வந்துவிட்டது!

தன்யா தோட்டத்தில் செடிகளுக்கு நீர் வார்த்துக் கொண்டிருந்தாள்!

பிரணவ்வை கண்ட தன்யா உள்ளுக்குள் பொங்கிய காதல் மேலிட பிரணவ் என்று அழைத்து அருகில் வந்தவள் நித்திலாவின் நிலையை நினைத்து கோபமுற்றாள்!

''பிரணவ் நான் நேற்றுதான் வந்தேன்! அக்கா சொல்லவே இல்லை! அக்கா என்ன பாவம் செய்தாள்? உன் அண்ணா ஏன் அவளை பழி வாங்கணும்? ஐயோ அக்காவோட நிலைமையை எப்படி விளக்குவேன்? எல்லாம் உன்னால்தான்டா!'' என்றவள் அவன் சட்டையைக் கொத்தாய் பிடித்து உலுக்க.

''எல்லா தவறுகளையும் நேர் செய்யத்தான் வந்திருக்கிறோம்! அவனை விடு!'' என்று ரவி விலக்க...

சிபியைக் கண்டவள் காளியாய் மாறிக் கத்தினாள்!

''தவறே செய்யாத என் அக்காவிற்கு நீதிபதியாய் தண்டனையை வழங்கியது நீங்க தானா? உங்களையெல்லாம் யார் இங்கே வரச் சொன்னது? மனசே இல்லாத மிருகங்கள், நீங்களெல்லாம்! போங்க போயிடுங்க!''

''நித்திலாவுக்கு என்னாச்சு, தன்யா? சிபி பதறலோடு கேட்டு உள்ளே ஓடினான்!

''நித்தி நித்திம்மா'' - என்று உயிர் உருக அழைத்து படுக்கையறைக்குள் சிபி வர கட்டிலில் போர்த்திக் கொண்டு படுத்திருந்த நித்திலா எழுந்து ஓடிப்போய் மூலையில் முதுகு காட்டி ஒண்டிக் கொண்டாள்!

''நித்திலா நான் உன் சிபி வந்திருக்கேன்மா! நித்திலா திரும்பி என்னைப் பார்க்க மாட்டாயா? என்னோடு பேச மாட்டாயா?''

''நான் உங்களைப் பார்க்க விரும்பலே! பேச விரும்பலை! போங்க போயிடுங்க!'' என்று வேகமாய் சொன்னவள் கடைசியில் அழுகையில் குலுங்க.

சிபி அப்படியே அவன் பின்புறம் மண்டியிட்டான்!

''நித்தி நித்திம்மா நான் உண்மை என்னவென்று தெரியாமல் காதலைச் சொல்லி உன்னை தண்டிச்சது தப்பு தான்டா!

உன்னோடு பழகிக் கொண்டு இருந்தபோது பொய்யாக தான் காதலிப்பது போல நடிச்சேன்! ஆனால், ஆனால், உன்னை பிரிந்த மூன்று மாதத்தில் தான் நான் உனக்குள் தொலைந்து உ ன் உயிரில் கலந்து போனதை உணர்ந்தேன்

எந்த நேரமும் நெஞ்சுக்குள்ளே உன் நினைவுகள் தான்! உன்னை வெறுப்பது போல நினைச்சி நான் என்னையே அறியாமல் உன்னை விரும்பி இருக்கிறேன்! அதுதான் உண்மைடா!'' என்று காதலோடு கூறவும்.

''பொய் பேசாதீங்க, சிபி! என்னை நேசிச்சவர்தான் தீபனாவோடு திருமண நிச்சயம் செய்து கொண்டீங்களா?

தீபனாவோடு எனக்கு திருமணம் நடந்தால் உன்னையும், உன் மேல் நான் வைத்த காதலையும் மறக்க முடியும் என்று நினைத்தேன்! ஆனால் அதன் பிறகே என் தவறை உணர்ந்தேன்! நித்திம்மா என் கண்ணே என்னை மன்னித்து விடு. நித்திம்மா பிளீஸ் பிளீஸ்'' என்று சிபி கெஞ்சினான்!

ஆனால், நித்திலாவின் மனம் இறங்கவில்லை!

''நித்திம்மா நீ என் நேசத்தை நிராகரித்தால் நான் உயிர்வாழ மாட்டேன்டா!''

அந்த வார்த்தையை அவளால் தாங்க முடியாமல் சட்டென்று திரும்பி, சிபி என்று உயிர் உருக கத்தினாள்!

''சதா சர்வநேரமும் உன் நினைவுகளால் அலைக்கழிக்கப்பட்டு ஆக்ஸிடெண்டுக்கு உள்ளாகி செத்து பிழைச்சி வந்திருக்கேன் பார்!''

அப்போது தான் அவன் நெற்றியில் இருந்த கட்டையும் பெரிய கட்டிட்டு கழுத்தில் மாலையாய் தொங்கிக் கொண்டிருந்த வலது கையையும் கண்ணுற்றவள் அதிர்ந்து போனாள்!

''நித்தி நித்திம்மா என்னை மன்னித்து என் உயிர் காதலை புரிந்து கொள், நித்திம்மா! நீ எனக்கு வேண்டும், நித்திம்மா! நீ என் காதலியா வேண்டும்மா! நீ என் மனைவியா வேண்டும்மா! ஏழேழு ஜென்மத்துக்கும் நீ வேண்டும், நித்திம்மா!''

சிபி கண்களில் கண்ணீர் பொங்க யாசிக்க

அதற்குமேல் தாங்க முடியாத நித்திலா மண்டியிட்டு இருந்தவனின் முகம் பிடித்து இழுத்து இறுக்கி

''ஐ லவ் யூ, சிபி!'' என்று உச்சந் தலையில் முத்தமிட அவள் வயிற்றில் தலையைப் பொத்தி மண்டியிட்டவாறே அணைத்த சிபிக்கு ஏதோ வித்தியாசமாய் தட்டுப்பட

நிமிர்ந்து சிபியின் கண்களில் நித்திலாவின் வயிற்றில் அவனின் உயிர் ஜீவன் உருண்டு, திரண்டு ஐந்துமாத கருவாய்! அவள் மேடிட்ட வயிற்றை உற்றுப் பார்த்தவன், சட்டென்று எழுந்து தாவி அணைத்து

''நித்தி என் கண்ணே என் கண்ணம்மா ஸாரி ஸாரிம்மா என்னை கொன்று போட்டுவிடுடா! உன்னை இப்படி ஒரு நிலைமைக்கு ஆளாக்கிவிட்டு நான் நான் கண்ணே, நீ எப்படியெல்லாம் இதனால் அவமானப்பட்டாயோ'' ஐயோ என்று கலங்க..

''நிறைய நிறைய சிபி! தெருவில் நடக்க முடியாமல் பள்ளி வேலையும் போய் வருமானத்துக்கு வழியில்லாமல் கடைசியில் இந்த வீட்டைகூட விலை பேசிவிட்டேன், சிபி! எல்லோரும் இதைக் கலைக்க சொல்ல என்னுள் மலர்ந்த உங்க உயிரை எப்படி அழிப்பேன், சிபி?''

அதற்குமேல் தாங்க முடியாத நித்திலா அழுகையில் தேம்பிட

''நித்தி நித்திம்மா அழக்கூடாதுடா! இனி இந்தக் கண்களில் ஒரு சொட்டு கண்ணீர் வர அனுமதிக்க மாட்டேன்டா!'' என்றவன். நித்தி கண்ணே, ஐ லவ் யூ டா! என்று நேசத்தோடு கூற

விழிகளில் வழிந்த கண்ணீரோடு சிபியை நித்திலா நேசத்தோடு நோக்கி அந்த நீர்கசியும் அழகிய விழிகளில் தன் இதழ்களால் அழுந்த முத்தமிட்டு அணைத்துக் கொண்டான், சிபி!

# முற்றும்

## பட்டுச்சேலை
## பரிசு பெற்றவர்கள்

பதில் : நாக்கு **23- 10- 2013**

1. **ஜெ. விஜயா ஜீவா, நாகர்கோவில் - 629 001.**
2. **மதுரவல்லி ரெங்கநாதன், சென்னை - 600 059.**
3. **எம். லலிதா கங்காதரன், கோயம்புத்தூர் - 641 017.**




## ஓட்ஸ் தோசை



**தேவையான பொருட்கள்:**

ஓட்ஸ்- 2 கப், பச்சரிசி மாவு- ½ கப், கடலைமாவு- ½ கப், துருவிய கேரட்- 1கப், குடமிளகாய்- 1, உப்பு- தேவைக்கேற்ப.

**செய்முறை:**

ஓட்ஸை, மிக்ஸியில் பவுடர் செய்து அத்துடன் பச்சரிசி மாவை கலந்து தோசை மாவு பதத்தில் கரைத்துக் கொள்ளவும். பின்பு அதில் உப்பு, துருவிய கேரட், மெல்லியதாக அரிந்தகு. மிளகாயை, கலந்து, மெல்லியதாக தோசை வார்க்கவும்.

தொட்டுக்கொள்ள தக்காளி சாஸ் நன்றாக இருக்கும். சுவையான சத்துள்ள தோசையை குழந்தைகளும் பெரியவர்களும் விரும்பி சாப்பிடுவார்கள்.

**-கி.லீலாவதி, கோவை.**

---

## சீஸ் வடை



**தேவையான பொருட்கள்:**

மைதாமாவு- ¼ கிலோ, அரிசிமாவு- 3 ஸ்பூன், சீஸ்துருவல்- 1 கிண்ணம், முந்திரிப்பருப்பு- 10, சமையல் சோடா- 1 சிட்டிகை, கருவேப்பிலை, கொத்தமல்லி- சிறிது, பச்சைமிளகாய்-5, எண்ணெய், உப்பு- தேவைக்கேற்ப.

**செய்முறை:**

அரிசிமாவு, மைதாமாவை

சலிக்கவும். அத்துடன்துருவிய சீஸ், பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், கருவேப்பிலை, கொத்தமல்லி மற்றும் முந்திரி, சோடா மாவு, உப்பு ஆகியவற்றை சேர்த்துக் கலக்கவும். பின்பு தண்ணீர் விட்டு கெட்டியாகப் பிசையவும்.

வாணலியில் எண்ணெய்விட்டு காய்ந்தவுடன், பிசைந்தமாவை உருண்டைகளாக உருட்டி, வடைகளாகத் தட்டிப் போட்டு பொன்னிறமாக எடுத்து வைக்கவும். வகை, வகையாக இதுபோன்று, பண்டிகைகளின் போது செய்யலாம்.

**-அங்கயற்கண்ணி, திருமலையப்பன், நெல்லை.**

---

# கார்ன் கப்ஸ்



**தேவையான பொருட்கள்:**

சோள மாவு- 1 டம்ளர், அரிசி மாவு- 1 டம்ளர், பொட்டுக் கடலை- 50 கிராம், வேர்க்கடலை- 50 கிராம், காரப்பொடி- 1 டேபிள் ஸ்பூன், நெய்- 50 கிராம், உப்பு- தேவைக்கேற்ப, எண்ணெய்- தேவைக்கேற்ப.

**செய்முறை:**

பொட்டுக்கடலையை லேசாக சூடு செய்யவும், வேர்க்கடலையை சூடான வாணலியில் பிரட்டி எடுத்து (வறுக்கக் கூடாது) தேய்த்தால் தொலி கழண்டு வரும். பொட்டுக்கடலை, வேர்க்கடலையை நைசாக அரைத்து நெய்விட்டுக் குழைக்கவும். அரிசி மாவு, சோளமாவு, காரப்பொடி, உப்பு இவற்றுடன் குழைத்த கலவையை கலந்து லேசாக தண்ணீர் தெளித்து கெட்டியாக பிசைந்து கொள்ளவும். சீடை போன்று உருண்டையாக எடுத்து, உள்ளங்கையில் வைத்து கட்டைவிரலால் நடுவில் குழித்து, ஆள்காட்டி விரல் கட்டை விரலால் பக்கங்களில் அழுத்தி 'கப்' செய்யவும். வாணலியில் காய்ந்த எண்ணெயில் போட்டு பொரித்து எடுக்கவும். சுவையான மாவின்மேல் மெல்லிய துணியை நனைத்து மூடி வைத்து, இதுபோன்று ஐந்தாறு கப்கள் செய்து போட்டு எடுக்கவும். இல்லாவிட்டால் மாவு ஈரப்பசை குழைந்து பக்கங்களில் அழுத்தும் போது உடைந்து விடும். கார்ன் கப்ஸ் தயார்.

**-கனகவல்லி சாரங்க பாணி, திருச்சி.**

# கோலங்கள்



21 புள்ளி 1 முடிய
(நேர்புள்ளி)
**-வனிதா சுந்தரராஜன்,**
**திருச்சி.**



19 புள்ளி 1 முடிய
(நேர்புள்ளி)
**-டி. ராஜராஜேஸ்வரி,**
**சேலம்.**



13 புள்ளி 1 முடிய
(நேர்புள்ளி)
**-ஏ. ஆர்த்தி, நாமக்கல்.**



9 புள்ளி 9 வரிசை
(நேர்புள்ளி) நான்குபுறமும்
3 புள்ளி 1 வரிசை.
**-தி. வந்தினி, கோவை.**



நடுவில் 8 புள்ளி 4 வரிசை,
4-ல் நிறுத்தவும்.
நான்குபுறமும் 14 புள்ளி
3 வரிசை கோலத்தில்
உள்ளவாறு வைக்கவும்
(நேர்புள்ளி)
**-எஸ். பிரேமகுமாரி,**
**ஐதராபாத்.**

Deviyin KANMANI-Tamil Weekly 13-11-2013 Regd.No. TN/CH(C)/360/12-14 Registered With Registrar of News papers for India Under No.49510/89 published every Wednesday of every Week.



# என்னைப் பற்றி

இனிய வாசகர்களுக்கு,

வணக்கம்! மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சி!

''உன் உயிரில் கலந்து...'' என்ற நாவல் பாசமும், நேசமும் மிகுந்த படைப்பு!

தங்கையையே சுவாசமாய் எண்ணி வாழும் சகோதரி, நித்திலா! தம்பியையே தன் உயிராய் நினைக்கும் சகோதரன், சிபி சக்ரவர்த்தி! இருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள்! சிபியை, நித்திலா ஆழமாய் நேசிக்க... அவனும் நேசிக்கிறான்! நேசம் இறுகிய பின்... சிபி, நித்திலாவைப் பிரிந்து போகிறான்! சிபி... நிஜமாகவே நித்திலாவைக் காதலித்தானா...? நேசித்தவன் என்ன காரணத்திற்காக நித்திலாவை தவிக்க விட்டு பிரிய வேண்டும்...?

சிபி, நித்திலாவை உணர்ந்தானா...? மீண்டும் அவர்கள் இணைந் தார்களா...? இக்கேள்விகளுக்கெல்லாம் விடை இந்த நாவலில் உள்ளது! உங்கள் விமர்சனத்தை ஆவலுடன் எதிர்நோக்கும்...

அன்புசகோதரி

ஆர்.மகேஸ்வரி